
# மருதம்

## கலாசார விழா சிறப்பு மலர்

## 2012/2013



வெளியீடு : கலாசாரப் பேரவை
பிரதேசசெயலகம்
போரதீவுப்பற்று
வெல்லாவெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதம்

## கலாசார விழா சிறப்பு மலர்

## 2012/2013

**"தமிழர் தம் கலைகள் யாவும்
தரணியில் மிளிரச் செய்வோம்"**

வெளியீடு

கலாசாரப் பேரவை
பிரதேசசெயலகம்
போரதீவுப்பற்று
வெல்லாவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

போரதீவுப்பற்று கலாசார விழாவினையொட்டி வெளிவரும் "மருதம்" சிறப்பு மலரின் ஊடாக உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன். உலகிலுள்ள எம்மொழியை, இனத்தை, மதத்தினை பிரதேசத்தைச் சேர்ந்தோரை நோக்கினாலும் அவர்களுக்கென தனித்துவமான கலாசாரப் பண்பாட்டம்சங்கள் பாதுகாக்கப்பட்டும் பேணப்பட்டும் வருவதனை நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. இந்த வகையில் பாரம்பரிய வாழ்க்கையை இன்னமும் நெறிமுறை தவறாது கடைப் பிடித்து வரும் போரதீவுப்பற்றுப் பிரதேச மக்களினது கலாசாரப் பராம்பரியங்களை பாதுகாத்து பேணவேண்டிய பொறுப்பு இப்பிரதேச கலாசாரப் பேரவைக்குரியதாகும் என்பது வெளிப்படையானது.

இதனை மையமாகக் கொண்டு இப்பிரதேச கலைஞர்களின் இலைமறை காயாக இருக்கும் கலைத் திறைமைகளை வெளிக் கொணரும் முகமாக போரதீவுப்பற்றுக் கலாசாரப் பேரவை வருடம் தோறும் நடத்தும் கலாசார விழாவின் ஊடாகவும், மருதம் மலர் வெளியீட்டின் ஊடாகவும் களம் அமைத்துக் கொடுத்து உதவி வருகின்றமை பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

இன்றைய கணணியுகக் காலவோட்டத்தில் எமது பாரம்பரியங்கள் மழுங்கடிக்கப்பட்டு இல்லாமல் செய்யப்படும் நிலை தோன்றியுள்ள நிலையில் எமது வாழ்க்கை முறையை எமது எதிர்கால சந்ததியினருக்கு ஆவணப்படுத்த வேண்டியது எம் ஒவ்வொருவரது கடமையுமாகும் என்ற வகையில் இம்மருதம் மலரானது இப்பிரதேச கலையம்சங்களை வெளிக்கொணரும் ஒரு ஆவணமாக உள்ளமை சிறப்பானதாகும்.

எனவே இவ்விழா சிறப்பாக அமைவதற்கு மலர் பதிப்பகச் செலவினை முற்றாக மனமுவந்து ஏற்றுக் கொண்ட வேள்ட் விஷன் நிறுவனத்தினருக்கும், அதன் முகாமையாளருக்கும், இதற்குப் பல்வேறு வளிகளிலும் முன்னின்று உதவிகள் ஒத்தாசைகளை வழங்கிய கலாசாரப் பேரவை உறுப்பினர்கள், கலைஞர்கள், பெரியோர்கள், அலுவலக அனைத்து மட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் இவ்வேளையில் எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. என். வில்வரெத்ணம்
பிரதேசசெயலாளரும், பேரவைத் தலைவரும்
பிரதேசசெயலகம்
வெல்லாவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

போரதீவுப்பற்றுப் பிரதேசசெயலக கலாசாரப் பிரிவினால் வெளியிடப்படவுள்ள "மருதம்" எனும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெரும் உவகை அடைகின்றேன்.

ஒவ்வொரு வருடமும் பிரதேசசெயலக ரீதியாக நடைபெற்று வரும் கலாசார விழாக்கள் அப்பிரதேசத்தின் பண்பாட்டு விழுமியங்களை நிலை நிறுத்திக் கொள்வதிலும் பெரும் பங்கு வகிக்கின்றது. இந்த வகையில் தமிழர்தம் பண்பாட்டினை மையப்படுத்தி போரதீவுப்பற்று பிரதேசசெயலகக் கலாசாரப் பேரவையானது ஆண்டு தோறும் தமிழ் மொழிக்கும், பண்பாட்டிற்கும் விழாவெடுத்து அதன் ஆவணப் பதிப்பாக "மருதம்" சிறப்பு மலர் வெளியிடுவது அனைவருக்கும் புத்தூக்கத்தினை ஏற்படுத்த வல்லது.

இப்பிதேசத்திற்கே உரித்தான இயற்கை அமைப்பையும் அவற்றின் செழுமையையும் அச்செழுமையின் வனப்பில் வாழும் மக்களின் கலை கலாசார பாரம்பரிய அம்சங்களையும் ஏனைய சமூகத்திற்கு எடுத்தியம்பக் கூடியதாக அமையப் பெற்ற "மருதம்" சிறப்பு நூல் இச்சமூகம் மேலும் சிறப்புற வழிகோலும் என்பது வெளிப்படை.

மேலும் இது போன்ற சமூக நிகழ்வுகளை தொடர்சியாக நடத்தி வரும் போரதீவுப்பற்று பிரதேசசெயலாளர், உத்தியோகத்தர்கள், மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ்**
மாவட்ட செயலாளரும்/அரசாங்க அதிபரும்
மாவட்ட செயலகம்
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

கலாசார பாரம்பரியங்களை தன்னகத்தே கொண்ட பிரதேசமாக வெல்லாவெளி பிரதேசம் காணப்படுகின்றது. வயலும் வயல் சார்ந்த நிலப்பரப்பான மருதநிலத்தின் பண்பினை கொண்டமைந்த இப்பிரதேசம் விவசாயத்திற்கும் கிராமிய கலைக்கும் பேர் போன இடமாக திகழ்கின்றது.

ஒரு சமுதாயத்தின் பெருமைகளை எடுத்துக்கூறும் முக்கிய அடையாளச் சின்னங்களாக விளங்குவது அச்சமுதாயத்தின் கலாசார விழுமியங்களே ஆகும். இக் கலாசார விழுமியங்களை பேணிப்பாதுகாத்து எமது அடுத்த சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும் பொறுப்பு இன்றைய தலைமுறையினரின் முக்கிய கடமையாகும். அந்த வகையில் ஒவ்வொரு வருடமும் பிரதேச செயலகங்களினால் நடத்தப்பட்டு வருகின்ற கலாசார விழாவானது கலை உலகிற்கும் பெரும் பங்காற்றி வருகின்றதென்றால் அது மிகையாகாது.

எனவே வெல்லாவெளி பிரதேச செயலகம் இவ்வருடம் தம்மண்ணின் மகிமையையும் சிறப்புக்களையும் வெளிப்படுத்தும் நோக்கில் கலாசார விழாவினையும் அதனோடு தொடர்புடைய "மருதம்" எனும் சிறப்பு மலரையும் வெளியிடவுள்ளது பெருமைக்குரிய விடயமாகும். இம்மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடை கின்றேன். இவ்விழா சிறப்புற அமைய எனது நல்லாசிகளை தெரிவிப்பதோடு இவ்விழாவினை முன்னின்று செயல்படுத்துகின்ற பிரதேச செயலாளர், கலாசார உத்தி யோகத்தர் மற்றும் கலாசார பேரவையினருக்கும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**D.W.U. வெலிக்கல**
பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கல்வி அமைச்சு
கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

எமது போரதீவுப்பற்று பிரதேசசெயலக கலாசாரப் பேரவையின் அரிய முயற்சியான "மருதம்" சிறப்பு மலருக்கு இவ்வருடமும் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகிறேன்.

ஐவகை நிலங்களில் ஒன்றான "மருதம்" எனும் இப்பிரதேசத்திற்கு ஏற்ற பெயருடன் இம்மண்ணின் மாண்புகளை வெளி உலகத்திற்கு எடுத்துக் காட்டும் வகையிலும், வளர்ந்து வரும் இளம் சமுதாயத்திற்கு எம்மண்ணின் பாரம்பரியம், கலை, கலாசாரம் மரபு வழக்காறு மற்றும் எமக்குரித்தான விழுமியங்கள் மங்கிப் போகா வண்ணம் புத்துயிர் அளிக்கும் ஓர் அற்புத முயற்சியாகவும் இச்சஞ்சிகை அமைந்திருப்பது பாராட்டத்தக்கது.

இவ்வாண்டும் இம்மருதம் மலர்ச்சியுற்று மணம் கமழ வழியமைத்த பிரதேசசெயலாளர், சக உத்தியோகத்தர்கள், கலாசாரப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் இம்மண்ணில் இரு தசாப்த காலத்திற்கு மேலாகப் பணியாற்றிவரும் வேள்ட் விஷன் நிறுவனத்தின் சார்பில் எனது உளம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு.எட்வின் ரணில்**
திட்ட முகாமையாளர்
கிழக்குப் பிராந்திய
அபிவிருத்தித் திட்டம்
வேள்ட்விஷன் லங்கா
களுவாஞ்சிகுடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வானமளந்த தனைத்து மளந்திடு
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி யோங்க
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வான மளந்த தனைத்தும் அறிந்திடு
வளர்மொழி வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரதீவுப்பற்று கலாசாரக் கீதம்

ஆடுவோமே கவி பாடுவோமே
ஆனந்தம் கொண்டோமென்று கூடுவோமே
தேடுவோமே செல்வம் அனைத்தும் பெற்று
சீரான வாழ்வினை நாடுவோமே

சரணங்கள்

போரதீவுப் பற்றென்னும் பொன்னான நாட்டினை
போற்றி நிற்போம் என்றும் நாமே
சீரான திருத்தலங்கள் நிறைந்ததெம்
செல்வத் திருநாடே என்போம்

நீர்வளம் நிலவளம் நிறைந்த பிரிவிது
நெல்வயல் நீர்குளம் மலிந்ததன்றோ!
சீர்பெறும் கவிமான்களும் கவிஞர்
பெருமக்கள் செல்வம் உடையதன்றோ!

எங்கும் நிறைந்த மருத நிலத்தினில்
இடையிடையே மக்கள் வாழ்விடமாம்
பங்கமில்லாப் புகழ் பழுகாமம் தன்னிலே
பாங்குடன் அமர்ந்துள்ளாள் துரோபதைத்தாய்

போரதீவெனும் பேரூர் அதனிலே
பிரியமாய் அமர்ந்துள்ளாள் காளியம்மாள்
அரிய புகழ் முனைத் தீவதன் பக்கலிலே
அமர்ந்து வினாயகர் அருள் பெறுமே.

பண்டைப் புகழ்பெறு பைந்தமிழ்க் காவலன்
பார்புகழ் முருகேசன் வாழ்விடமாம்
மண்டூர் எனுந்தலம் மண்ணுள்ளோர் யாவரும்
வந்து தரிசனம் செய்திடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் போரதீவு எனும் பதியிலே
கோவில் கொண்டிருப்பவன் முருகன்
தாவில் வெல்லாவெளித் தலத்தினில் மாரித்தாய்
அருள் பாலிக்கின்றார் அறிந்திடுவீர்

திக்கோடை தும்பங்கேணிக் கிராமங்கள் தோறும்
தெய்வத் திருவருள் பெற்று
மிக்கதோர் கிராமிய கலைகளும் அங்கே
மேம்பட்டு நிற்பதை மதிப்போமே

எங்கள் கிராமங்கள் அனைத்திலும் தமிழர்தம்
இன்தமிழ் செல்வங்கள் நிறைந்து
மங்கலமான நல் நாட்டுக் கூத்துடன்
நாடகம் கும்மி கோலாட்டம்

கரக ஆட்டம் கொம்பு முறித்தல்
குரவை ஒலியுடன் பெண்களின் கூட்டம்
பரமனருள் பெற்ற போரதீவுப் பற்று
பாரினில் வாழிய வாழியவே

வாழியவே! வாழியவே! வாழியவே!
வாழியவே! வாழியவே! வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாரப் பேரவை



இடமிருந்து வலமாக இருப்போர் :
திரு. க. சோமசுந்தரம், திரு. டபிள்யு. சோமசேகர திருமதி. ஆர். லதாகரன், திரு. என். வில்வரெத்னம் [பேரவைத் தலைவர்], திரு. ஆர். திரவியராஜ், திரு. இ. வினாயகம், திரு. பூ. ம. செல்லத்துரை

இடமிருந்து வலமாக நிற்போர் :
திரு. க. சூரியகுமார், திருமதி. பக்தகௌரி, திருமதி. ஜெ. ஜெயப்பிரியா, திரு. ஆ. புட்கரன், திரு. என். நவரெத்தினம், திரு. என். நாகலிங்கம், திரு. தி. உமாபதி, திரு. எஸ். சிவகுமார், திரு. ஏ. பேரின்பநாயகம், திரு. எம். உதயகுமார், திரு. க. சதீஸ்வரன், திரு. பொ. பரமானந்தம், செல்வி. மு. தர்சிகா, திருமதி. சவுந்தரராஜன், திரு. ஏ. பிரபாகரன்

படத்தில் இல்லாதோர் :
திரு. எஸ். மயூரன், திருமதி. கோ. லிங்கேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரவை உறுப்பினர்கள்.........

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு.என். வில்வரெத்ணம் பிரதேசசெயலாளர் |
| உபதலைவர் | : | திரு.பொ. பரமானந்தம் எழுத்தாளர் |
| இணைத் தலைவர் | : | திரு. ஆர். திரவியராஜ் உதவி பிரதேசசெயலாளர் |
| செயலாளர் | : | திரு: ஆ. பிரபாகரன் கலாசார உத்தியோகத்தர் |
| உபசெயலாளர் | : | திரு. ஆ. புட்கரன் கவிஞர் |
| பொருளாளர் | : | திரு: தி.உமாபதி நிருவாக உத்தியோகத்தர் |

உறுப்பினர்கள்

திருமதி: ஆர்.லதாகரன் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்
திரு. ஏ.பேரின்பநாயகம் உதவி மாவட்ட பதிவாளர்
திரு. எஸ்.சிவகுமார் சமூகசேவை உத்தியோகஸ்தர்
திரு. எம்.பேரின்பராசா முகாமைத்துவ உதவியாளர்
திரு. க.அற்புதராசா கிராமசேவை உத்தியோகஸ்தர்
திரு. க.சதீஸ்வரன் கிராமசேவை உத்தியோகஸ்தர்
திரு. எஸ்.மயூரன் கிராமசேவை உத்தியோகஸ்தர்
திரு: எம்.உதயகுமார் சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர்
திரு: எஸ்.பிறைசூடி வலய வங்கி முகாமையாளர்
திரு. என்.நாகலிங்கம் சமுர்த்திஅபிவிருத்தி உத்தியோகஸ்தர்
திரு. என்.நவரெத்தினம் சமுர்த்திஅபிவிருத்திஉத்தியோகஸ்தர்
திருமதி. சவுந்தரராஜன் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர்
திரு. பூ.ம.செல்லத்துரை எழுத்தாளர்
திரு. டபிள்யு. சோமசேகர நடனக் கலைஞர்
திரு. இ.விநாயகம் அண்ணாவியார்
திருமதி.கோ.லிங்கேஸ்வரன் எழுத்தாளர்
திரு. க.சோமசுந்தரம் கரகாட்டக் கலைஞர்
திரு. க.ஜீவகுமார் அலுவலக பணியாளர்
திருமதி. ம.பக்தகௌரி கலாசார அபிவிருத்தி உதவியாளர்
திரு.க.சூரியகுமார் பட்டதாரிப் பயிலுனர் (கலாசாரம்)
திருமதி. ஜெ.ஜெயப்பிரியா பட்டதாரிபயிலுனர் (கலாசாரம்)


விடய எழுதுனர் : செல்வி.மு.தர்சிகா முகாமைத்துவ உதவியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பழுகாமம் ஸ்ரீ மகா விஸ்னு ஆலய

# வரலாற்றுக் கண்ணோட்டம்



ஈழமணித்திருநாட்டின் கிழங்கிலங்கையில் மீன்பாடும் தேனாடாம் மட்டுமாநகரின் தென்புறத்தே முப்பத்தியிரண்டு கிலோமீற்றர் தொலைவில் நாற்புறமும் வாவிமகள் புடைசூழ நெற்கதிர்கள் சகஸ்ரநாம ஒலி எழுப்ப குயில் இனமும் கரவைமாடுகளும் அணிவகுத்திடவே செந்தமிழ் சிறப்புற்று சமயபொறைமிக்க மக்கள் கூடி வாழும் பழம் பெருபதியான பழுகாமம் பதி அமைந்துள்ளது.

இப்பதியிலே கன்னித்தமிழோடு இந்து கலாசாரமும் வளர்ந்தோங்கி வருகின்றது. இவ்வாறன பெருமைமிக்க வரலாற்றை நோக்குமிடத்து மனதில் தொட்டுச்செல்லும் சில தடங்கள் மின்னொளி வீசுகின்றன. "பாணமை" நகரத்தை பண்டைய இராசாதானியாகக் கொண்டு ஆட்சி செலுத்தி வந்தாள் ஆடகசௌந்தரி என்னும் தமிழ் அரசி. பாணமை நகரத்திற்கும் பண்டைய கண்டி இராச்சியத்திற்கும் வரலாற்று ரீதியான தொடர்புகள் பல இருந்தன. அந்தவகையில் கண்டி இராச்சியத்தை கட்டிக்காத்த மன்னன் அடிக்கடி இராஜாங்க விடயம் காரணமாக பாணமைக்கு வந்து செல்லும் போதெல்லாம் அவனுடைய கோடைக்கால இளைப்பாற்று தளமாக விளங்கியது பழுகாமமேயாகும். இதனை இன்றும் துரோபதையம்மன் கோவிலின் முன்னே சிதைந்து மேடாய் காணப்படும் "அமைச்சா புட்டி" எடுத்துக்காட்டி நிற்கின்றது.

இவ்வரலாற்று பாரம்பரியம் உள்ள பழம் பெரும் கிராமத்தின் முகப்பில் நிழல் வாகை குடைபிடிக்க ஆன்மாக்கள் இலயப்படவே கார்மேக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணனுக்கு ஒர் வண்ண ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் அரசமரத்தின் கீழ் பிள்ளையாரை முதன்மையாக கொண்டு 1824ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது இவ் ஆலயக் குருவாக பிராமணரான கதிரேசபிள்ளை குருக்கள் கடமை புரிந்தார் இவர் மனத்தூய்மையுடனும் உடற்தூய்மையுடனும் பக்திபூர்வமாக பூசைகளை செய்து வந்த வேளை ஒருநாள் நள்ளிரவு காத்தல் கடவுளான கண்ணபிரான் கனவில் தோன்றி "இவ் அமைதியான சூழலிலே அரச மரத்தடியினிலே அடியார்களுக்கு அருள் பாலிப்பதற்காக குடிகொண்டுள்ளேன்" எனக்கூறி மறைந்தார் திடுக்கிட்டு எழுந்த ஐயர் மேனி சிலிர்க்க நாலாபக்கமும் தேடினார்

அங்கு அவரது கண்களுக்கு காரிருள் மட்டுமே தெரிந்தது கார்மேகக் கண்ணன் தெரியவில்லை ஐயர் வியப்படைந்து நாரயணா,நாரயணா என வணங்கத் தொடங்கினார். விடிந்ததும் அவசர அவசரமாய் ஆலய வண்ணக்குமாரை கூட்டி அறிவிக்கவே அதற்கு இணங்க அவ்வாண்டு மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி நன்னாளில் விஸ்ணு வழிபாடு ஆரம்பமாகியது.

தொடர்ந்து பூசைகள் தடங்கலின்றி நடந்து வந்த வேளையில் 1906ம் ஆண்டு மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி நன்னாளில் ஆகம முறைப்படி சிறுகற்கோயில் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது. இதன் காரணமாக பிள்ளையார் பரிவாரத் தெய்வமாக வணங்கப்பட்டார். இவ்வாலயமானது 1914ம் ஆண்டு ஆகம முறைப்படி உருவாகி கும்பாவிசேகமும் இடம்பெற்றது. இவ்வாலயம் சமூக ஒழுக்க விழுமியங்களையும் பாரம்பரிய கலை கலாசார பண்பாட்டு அம்சங்களையும் சிறப்பாக வளர்த்து வந்துள்ளமையும் வரலாற்று சான்றுகள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. அத்தோடு இந்துக்களின் விசேட தினங்களிலும் விசேட பூசைகள் இடம்பெற்று வந்துள்ளன. குறிப்பாக இவ்வாலயத்திலே தீபாவளி பண்டிகை, கிருஸ்ன ஜெயந்தி, திருப்பாவை வைகுண்ட ஏகாதசி என்பன மிக சிறப்பாக கொண்டாடப்படுவதை யாவரும் அறிவர்.


மேலும் ஆகம வழிகளின் பிரகாரம் பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை புனருத்தாரண கும்பாபிசேகம் செய்தல் வேண்டும். அதற்கமைய இவ்வாலய மானது 1925ம் ஆண்டு இடிக்கப்பட்டு மீண்டும் 1932ம் ஆண்டு யாழ்ப்பாணத்து பிராமணரான சின்னத்தம்பி குருக்கள் அவர்களினால் இவ்வாலயத்தில் இரண்டாவது தடவையாக கும்பாவிசேகம் இடம்பெற்றது. அதனைத்தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் அலங்கார உற்சவம் நடைபெற்றது. சில காலங்களில் திருவோணத்திலும் கிருஸ்ன ஜெயந்தியிலும் தீர்த்தம் இடம்பெறுவது வழக்கமாக இருந்தது. இக்கோயில் நிர்வாகத்தை முக்குக வம்சத்தின் பணிக்கனார்குடி, படையாட்சிகுடி, கலிங்ககுடி, கச்சிலாகுடி, பெத்தான்குடி, சட்டிகுடி மக்கள் சிரத்தையோடு பரிபாலித்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி மக்களினால் இவ்வாலயத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர், கணக்காய்வார்கள் முதலிய பதவி வகிப்போர் மூன்றாண்டுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் தெரிவு செய்யப்படுவர். வருடத்தில் குறிப்பிட்ட விசேட பூசைகள் இன்ன குடியினருக்கு இன்ன பூசை என விதித்து ஒதுக்கப்பட்டு அது நடை முறையில் உள்ளது. அந்தவகையில் தைப்பொங்கல் பூசை கச்சிலா குடியின ருக்கும், சிவாரத்திரி பூசை பணிக்கனார்குடியினருக்கும், சித்திரகதை பெத்தான்குடியினருக்கும், வைகாசிவிசாகப்பூசை கலிங்க குடியினருக்கும், கார்த்திகை விளக்கீட்டு பூசை சட்டி குடியினருக்கும் எனக் குறித்து ஒதுக்கப் பட்டுள்ளது.

1957ம் ஆண்டு ஏற்பட்ட பாரிய வெள்ளத்தை தொடர்ந்து கோயில் மீண்டும் புனிதமாக்கப்பட்டு அப்போது வண்ணக்குமாராக இருந்த திருவாளர்களான சீனித்தம்பி, வதனப்போடி, நாகமணி, இளையதம்பிபோடி, மாமாங்கம், கதிர்காமத்தம்பி ஆகியோர்களால் கணபதிப்பிள்ளை குருக்களின் தலைமையில் கும்பாபிசேகம் இடம்பெற்றது.



இவ்வாறு ஆலயப்பூசைகள் சிறப்பான முறையில் இடம்பெற்று வரும்வேளையில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 23ம் திகதி இடம்பெற்ற சூறாவளி அனர்த்தத்தைத் தொடர்ந்து மீண்டும் கோயில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிசேகம் இடம்பெற்றது. நித்திய, நைமித்திய பூசைகள் ஒழுங்கான முறையில் இடம்பெற்றாலும் கொடிமரமோ, விமானமோ இல்லாதது பெரும் குறையாக இருந்தது. அதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு 1997ம் ஆண்டு மேமாதம் 2ம் திகதி பழைய ஆலயம் முற்றாக இடிக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானம், கொடிமரம் ஆகியவை நிர்மாணிக்கப்பட்டதோடு பிள்ளையார், முருகன்,வைரவர், ஆஞ்சேனயர், நவக்கிரகம் ஆகிய பரிவாரத் தெய்வங்களுக்கு கோயில் அமைக்கப்பட்டு 2001ம் ஆண்டு புரட்டாதி மாதம் 8ம்திகதி அப்போதைய நிர்வாகிகளான வே.கோபாலபிள்ளை, நா.தர்மலிங்கம், த.கந்தப்பன், சி.தெய்வப்போடி, கிருஸ்ணப்பிள்ளை, சி.கந்தசாமி ஆகியோரின் அயராத உழைப்பினால் மகாகும்பாபிஷேகம் இடம்பெற்றது.

அதன் பின்பு 2011ம் ஆண்டு ஜனவரி மாதம் பாரிய அளவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இவ்வெள்ளப்பெருக்கு காரணமாக ஆலயத்தின் நித்தியபூசைகள் ஸ்தம்பிதம் அடையாமல் தொடர்ந்து இடம்பெற்று வந்தமை இவ் ஊர்மக்களின் பக்தி சிரத்தையினை எடுத்துக் காட்டுகின்றது எனலாம். தொடர்ந்து இவ்வாலயத்தின் தற்போதைய நிர்வாகிகளால் திருப்பழுகாமத்தின் முகப்பினில் பதின்மூன்று அடி உயரமான பாலகிருஸ்ணர் சிலையினை பிரமாண்டமான முறையில் வடிவமைத்து வழிப்பட்டு வருகின்றமை இவ்வாலயத்தின் வரலாற்று சிறப்புமிக்கத்தொரு நிகழ்வாக அமைகின்றது எனலாம். இந்நிகழ்வானது கடந்த 07.06.2012ம் திகதியன்று சிறப்பான முறையில் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது இவ்வாலய உற்சவமானது ஆவணிமாதம் கிருஸ்ணஜெயந்தியினை தீர்த்த உற்சவமாகக் கொண்டு அதற்கு முன்னுள்ள பத்து நாட்களும் கொடியேற்றத்துடன் ஆரம்பாகி திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ் உற்சவகாலங்களில் கூட்டுப்பிரார்த்தனை, சமய சிந்தனை வழங்கல், கலைநிகழ்ச்சிகள், அன்னதானம் போன்ற நிகழ்வுகள் சிறப்பான முறையில் இடம்பெற்று வருவது வழக்கமாகும். இப்பிரதேச மக்களின் இன்னல்களைப் போக்கி கேட்ட வரங்களை இல்லையென்னாது வாரி இறைக்கும் வள்ளலாக கமலக்கண்ணன் இவ்வாலயத்தில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டு இருக்கின்றார்.

உசாவியவர்கள்

1. திரு.சி.தெய்வப்போடி (வயது 98) ஆலய முன்னாள் வண்ணக்கர்
2. திரு.ந.கிருஸ்ணப்பிள்ளை (வயது 83) ஆலய முன்னாள் வண்ணக்கர்

**எஸ். ஜெகன்**
**பட்டதாரி பயிலுநர்**
**பிரதேச செயலகம்**
**போரதீவுப்பற்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்
# தாய் சமயம்
# மொழி



உலகம் ஒரு பரந்து விரிந்த சுழற்சிப் பந்து இந்த உலகில் எத்தனை கோடி மனித இனங்கள் அத்தனைக்கும் ஆதி மூலமே தாய்மண். தந்தையின் வித்தினைத் தாங்கி பத்து மாதம் சுமந்து அந்த வித்து முளைவிட காரணமானவள் இந்தத் தாய் என்ற ஆதிமூலமே. அதனால் தான் முன்னோர்கள் தாய்மை என்று பெயர் சூட்டி தாயே மெய் என்று சத்தியம் செய்தனர். தாய்மை தாய் + மெய் தகப்பன் என்ற அந்த செல்லுக்கு அன் என்ற வகுதியை அடையாளப் படுத்தினர்.

இத்தகு தாய்மைக்குள் அனைத்துமே அடக்கம் என்ற சிந்தை நெகிழ்ந்த சிந்தனையில் பூமாதேவி என்றும் கங்கா தேவி என்றும், மலைமகள் என்றும், கலைமகள் என்றும் ஆற்று நங்கை என்றும், ஆழிமங்கை என்றும் பொன்வடி வாய்ப் போற்றிய பெருமக்கள் தாய்மண், தாய்மொழி, தாய்ச்சமயம் என்று மூன்றையும் தனித்துவப்படுத்தினர். உலகில் வாழும் அனைத்து மனித இனத்திற்கும் மூன்றும் பிரதான காரணியே. தாய் என்ற அந்த மெய்மைக்குள் உயிர்கள் அடங்குகின்றன. மொழிஎன்ற வடிவத்துள் மனிதன் படிந்து கொள்கின்றான். சமயம் என்ற நெறியில் மனிதன் பக்குவப்படுகின்றான். ஆக இம்மூன்றும் மனித குலத்திற்கு மூன்று கண்கள் போன்றவை, வலது கண் மண், இடது கண் மொழி, நெற்றிக்கண் சமயம். இக்கண் மூன்றையும் மனிதன் இழந்தால் குருடனாகவே வாழ்வான் என்பது உண்மையின் தெளிவு. இனி இவ்விடயங்கள் மூன்றையும் தனித்தனியாக மனக் கண்ணில் நோக்குவோம்.

## தாய் மண்

தாய்மண் என்ற மனித இனத்தின் பூந்தொட்டில் மிகுந்த உயர் மரியாதைக் குரியது. மனித குலம் வளங்கொண்டு வாழ்வதற்கு இந்தப் பூமியே இடமா கின்றது. மண்ணின்றி மனிதன் இல்லை என்பது போல் மனிதனின் அனைத் திற்கும் பூமியின் நெருக்கம், உறவு பிரிக்க முடியாதவை "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்ற வானிலும் நனி சிறந்தனவே" என்ற மகாகவி பாரதியின் வாக்கு மனங் கொள்ளத் தக்கது.

உலக வரலாற்றில் பல பகுதிகளைப் புரட்டிப் பார்த்தால் மண்ணுக்கும் பெண்ணுக்குமான சண்டைகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டங்களாக வடி வெடுத் திருக்கின்றன. இவ் வரலாறுகள் எல்லாம் முடிவில் ஒரு உண்மையைத் தெளிவு படுத்துகின்றது. தாய்மண் போராட்டமே அனைத்திற்கும் மூலகாரணமாய் அமைகின்றது. மண்ணுக்குப் பின்தான் பெண், தாய்மண் மீட்பு என்ற போரா ட்டங்களும் இத்தகு வழி முறைக்கு உட்பட்டவையே. உடல் மண்ணுக்கு உயிர்தமிழுக்கு என்ற வீர வார்த்தைகளும மண்சார்ந்த போராட்ட வார்த்தைகளும் கண்ணை இழக்கலாம் தாய் மண்ணை இழக்கலாமா இது யாவர்க்கும் பொருந்தும். இந்த உலகில் பலஇனம் சார்ந்த மக்கள் பல மொழி சார்ந்த மக்கள் பலசமயம் சார்ந்த மக்கள் வாழ்கின்றார்கள். இவர்கள் அனைவருக்கும் உரிய உறவு சார்ந்த இடம் தாய் மண்ணாகும். ஆதிகாலங்களில் படையெடுப்புக்கள் நடந்திருக்கின்றன இப்படையெடுப்புகள் ஒரு நாட்டு மன்னர் இன்னொரு நாட்டிற்கு வந்து அந்த நாட்டை கைப்பற்றி அடிமை கொள்ளச் செய்வர். ஒரு நாடு ஒரு மன்னனிடம் அடிமைப்பட்டால் அந்த நாட்டு உடைமையான அனைத்தும் அந்த மன்னனுக்கு சொந்தம். அடிமை கொள்ளப்பட்ட மக்கள் தங்களை அடிமை கொண்ட மன்னனுக்கு எதிராக பெரும் போராட்டங்களை தொடங்குவார்கள் அவர்களின் போராட்டத்தினுடைய உந்துசக்தி தாங்கள் பிறந்த தாய்மண்ணை மீட்பதுதான்

தாய் மண்ணைப் பாதுகாத்தால் தாய்மண் நம்மைப் பாதுகாக்கும் என்பது சிந்தை கொள்ளத்தக்கது. இறைவன் கூட மண்ணாகி விண்ணாகி நிற்கின்றான். ஆக இறைவனைப் போல் மண்ணும் மதிக்கத்தக்கதுவே. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற சம்பந்தரின் திருவாக்கு நிலம் தருகொள்கை மண் சார்ந்த உணர்வுகளுக்கு ஒரு சமுகத்தின கொள்கையாக பிரதிபலிக்கும். “வாழிய நிலமே” நிலம் வாழ்ந்தால் அந்நிலத்தில் நல்ல மனதோடு மனிதன் வாழ்வான். ஒரு மனித வாழ்க்கையின் பிறப்பிடம் தொடக்கம் இறப்பிடம் வரைக்கும் மண் சார்ந்த உறவுகளே. விண்ணைத் தொட முடியாது மண்ணைத்தொடலாம் மண்ணின் நெருக்கம் மனித வர்க் கத்திற்கு அருகில் இருப்பவையே (ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா) இது ஒரு பாடல் இப்படி எத்தனையோ மண்ணைப் பற்றிய எடுத்துக் காட்டுக்கள் இவையெல்லாம் ஏன்? தாய் மண்ணின் தனித்துவத்தைப் புரிந்து கொள்வதற்காக. சாதாரண மண் எப்படி தாய் மண்ணாக பரிநாமம் பெறுகிறது. நம் மூதாதையர் பிறந்த மண், தாயின் தாய் பிறந்த மண், நம் தாய் பிறந்த மண், நாம் பிறந்த மண், மழலைப் பருவத்தில் தத்தி நடைபயின்று தவழ்ந்து மண்சோறு ஆக்கி அழைந்தும் குழைந்தும் விளையாடிய மண், இதனால் தான் கண்ணபிரான் மண்ணை உண்டு உலகைக் காட்டினான். இதுவே தாய்மண். இத்தகைய பிறந்த மண்ணை மதித்துத் துதிக்க வேண்டியது மனிதனின் கடமையாகும். அடியேன் தமிழகத்திலே ஒரு கல்வியாளரின் இல்லத்திற்கு சென்ற போது அவரின் சுவாமி அறையிலே மூன்று போத்தல் களில் மண் வைக்கப்பட்டிருந்தது. அது என்ன என்று கேட்டேன். அப்பெரியவர் சொன்ன பதில் என் இதயத்தினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழத் தொட்டது. ஒரு போத்தலில் உள்ள மண் அவர் பிறந்த வீட்டுமண், அடுத்த போத்தலில் உள்ள மண் அவரின் ஆரம்பப் பாடசாலை மண், மூன்றாவது போத்தல் மண் அவரின் புகுந்த வீடாகிய மனைவியின் வீட்டு மண் இப்படி மண்ணை வணங்கும் மனிதரைப் பார்கின்றோம். சமகாலத்தில் அன்னியப் படையெடுப்புக் களாலும் அரசியல் சூழ்ச்சிகளாலும், இன வெறிகளாலும், வர்க்க வாதங்களாலும், நிலங்கள் கயவர்களால் அபகரிக்கப் படுவதை, சுரண்டப்படுவதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். இதில் இரண்டு காரணங்கள் சிந்தை கொள்ளத் தக்கவை. ஒன்று வன்செயலைக் காரண மாக்கி ஆண்டாண்டு காலமாய் நாம் வாழ்ந்த பூமியை விட்டு விட்டு நகர நாகரிகத்திற்காக நகரப்புறத்திற்கு நகர்தல், அதன் பின்பு பிறந்த மண்ணைப் பற்றிய எந்தச் சிந்தனையும் இல்லாமல் இருத்தல், இரண்டாவது காரணம் திட்டமிட்ட நில அபகரிப்புக்கள் இவை அரசியல் காரணிகளால் காலம் காலமாக நடந்து வரும் நிலப்பறிப்பு. அதன் பின் அந்த மண்ணிலே நிரந்தரமாக வாழ்ந்த மக்கள் வாழ இடமின்றி நிர்க்கதியாகி நிற்பர். எனவே பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொண்டால் தாய்மண்ணைப் பாதுகாக்கும் தன்மை உருவாகும்.

01. பிறந்த மண்ணின் வரலாற்று பெருமை தொன்மையின் சிறப்புக்களைத் தேடி ஆராய்ந்து பிறந்த மண்ணைப் போற்றுதல்

02. பிறந்த மண்ணை விட்டு வேறு இடங்களுக்குச் சென்று வாழுதலும், பிறந்த மண்ணை அந்நிய சக்திகளுக்கு பணத்திற் காக ஏலம் போடுதலும்

03. சமூகத்தினுடைய உறவுகள், உணர்வுகள் மரபுவழிப் பண் புகளை மண் சார்ந்த உறவோடு மனம் கொள்ளல்.

04. பிறந்த மண்ணில் நம்முன்னோர் களால் தோற்றம் பெற்ற ஆலயங் கள், பாடசாலைகள், பழைய கட்டடங்கள், வழக்காற்றுப் பெரு மைகள் இவைகளை உயிரினும் மேலாக பாதுகாத்தல்.

05. சந்தர்ப்ப சூழ்நிலை வசத்தால் பிறந்த மண்ணைவிட்டு வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்தாலும் பிறந்த மண்ணை மறக்காது பிறந்த மண்ணின் பெருமைக்கும், எழுச்சிக்கும் , மீட்சிக்கும் முடிந் தளவு பாடுபடல். மேற்குறித்த சிந்தனைகள் அனைவருக்கும் பொருத்தமாகும்.

## தாய் மொழி

உலகில் வாழுகின்ற அனைத்து உயிரினங்களும் ஏதோ ஒருவகையில் பேசிக்கொண்டே இருக்கின்றன. இதில் மனிதன் மட்டும் தான் மனம் என்ற எண்ணத்தால் சிரித்தல், சிந்தித்தல், பேசுதல் என்ற உயர்நிலைக்கு உட்பட்டு வாழ்கின்றான்.

மொழி மனித உள்ளம் வடிக்கும் தேனருவி, உலகமெல்லாம் வாழுகின்ற மனிதர்கள் பல்லாயிரக் கணக்கான மொழிகளைப் பேசப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். மனிதனின் ஆரம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை சைகைகளினால் தொடங்கிய மொழி நாளடைவில் நினைவுக் குறியீடுகளாக மரங்களிலும், பட்டைகளிலும், தோல்களிலும் எழுதப்பழகினர். இதன் பின் படிப்படியாக மொழிக் கூறுகள் மாற்றமடைந்து முழுமொழியாக மாற்றமடைந்தது.

இன்றைய உலக மொழி வழக்கில் எழுதா மொழி, எழுத்து மொழி, பேசும் மொழி எனப் பலவகைப்பட்ட மொழிகள் நின்று நிலவுகின்றன. இம்மொழிகளே தாய் மொழிகளாக வளர்ச்சி கண்டது. ஒரு சமூக வளர்ச்சிக் கட்டமைப்பில் மொழிகளே ஊடகங்கள். தாய் வழி மூதாதையர்கள் எந்த மொழியினூடாக பழக்கமடைந்து வந்தார்களோ அந்த மொழியே தாய் மொழி என்பர். ஒரு குழந்தை தாயின் மடியில் தவழ்ந்து விளையாடும் போது அந்தத் தாயின் நாவில் தவழ்ந்து வரும் தாலாட்டுப் பாடல், அம்புலிப் பாடல் ஆகியன போன்ற பாடல்கள் எந்த மொழியினூடாக அந்தக் குழந்தையின் செவியில் பாய்ந்து சிறு மழலையின் சிந்தையில் பதிகின்றதோ அந்த மொழியே தாய்மொழி ஆகும். உலகில் தோன்றிய மொழிகளெல்லாம் பல வகைகளிலும் சிறப்புடையவை. எவரெவர் எந்தெந்த மொழியைத் தாய்மொழியாகக் கொள்கிறார்களோ அவர்கள் அத்தாய்மொழியை உயர்வாகவே கருதுவார்கள். மொழி வளம், சொல் வளம், கலை வளம், எழுத்து வளம் இவையெல்லாம் மொழியை வளப்படுத்தி அழகூட்டுபவை. அம்மொழிகளைப் புரியாதவன் அறியாதவன், விழியற்றவனே. நம் தாய்மொழி போல் மற்றவர்களின் தாய்மொழியையும் மதிக்கும் மன உணர்வு நம்மில் பண்பு சார்ந்து இருக்க வேண்டும். மொழி அழிவுகளுக்கு ஒரு காரணம் மொழி வெறியே. மொழி நெறிப்படி வாழ வேண்டும். மொழியில் வேட்கை வேண்டும், வெறி வந்தால் அழிந்தே போகும். இதற்குப் பலமொழிகளின் வரலாறுகள் சான்று பகர்கின்றன. தாய்மொழியை மறந்தவன் பதருக்கு சமமானவனே. இன்றைய உலகில் தாய்மொழியை மறந்து வேற்று மொழிகளில் தன்னை ஈடுபடுத்தி அந்த மொழிகளுக்கே தன்னை அடிமையாக்கிக் கொள்கின்றான். அதன் பின் தாய்மொழியே தெரியாதவனாக வாழத் தலைப்படுகின்றான்.

எவனொருவன் தன் தாய்மொழியை துச்சமாக நினைக்கிறானோ அவனிடத்தில் பிறமொழியின் பாலுள்ள உண்மைத்துவம் கூட போலியானவையாகவே இருக்கும். இன்று உலகமெங்கும் தொழில் சார் கல்வி அதிவேகமாக வளர்ச்சி கண்டுள்ளது. தாய்மொழியைத் தவிர்ந்த வேற்று மொழிகளில் துறைசார் கல்விகள் பயிற்றப் படுகின்றன. இத்தகு கல்வி எல்லாம் தாய்மொழியில் மட்டும் கற்றுக் கொள்ள முடியுமா? என்ற கேள்வி பொதுவாக எழும். ஆனால் இன்று உலக நாடுகளில் பலநாடுகள் தாய்மொழிக் கல்வியின் ஊடாகவே அறிவுசார் துறைகள் அனைத்தையும் கற்பிக்கின்றார்கள். இன்று தாய்மொழிக் கல்வியின் அவசியம், தாய்மொழியினூடாக பிறதுறைகளை அறிதல், தாய்மொழியின் ஊடாகவே தங்களின் அனைத்துக் கருமங்களையும் செய்தல் என்ற தீவிர முயற்சி உலகமெங்கும் செயற்பட்டு வருகின்றன. ஒரு மாணவனின் அடிப்படை முதல்நிலைக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி தாய்மொழியினூடாகவே கற்றுக் கொள்ளும் போது தாய்வழிப் பண்பு, ஒரு சமநோக்கு அத்தாய் மொழியூடாக அவன் மனதில் ஆழப்பதிகின்றது. தாய்மொழியின் ஊடாக தான் பிறந்த தாய்மண்ணில் நின்று தங்கள் குடும்பம் சார்ந்த உறவுகளோடும் உரையாடுதல், இன்ப துன்ப நிகழ்வுகளில் கலந்துரையாடிக் கழித்தல் தங்களின் மூதாதையர்கள் விட்டுச் சென்ற தாய்மொழி சார்ந்த சிந்தனைகள், செய்திகள், இலக்கியங்கள் நாட்டார் இயல்கள் இலக்கண விடயங்கள் மனித நீதி சார்ந்த விடயங்கள் இவைகளெல்லாம் அந்நிய மொழி கொண்டு பார்க்க முடியாது. தன் தாய் மொழியிலேயே பார்த்து, படித்து, அதில் படிந்து தாங்கள் கற்ற பிறமொழிகளில் அச்செய்திகளைப் பதிவு செய்யலாம்.

மொழி என்ற சொல் மொழிதல் என்ற அத்திவாரத்தில் இருந்து எழுகின்றது. சொல்லாட்சி, பொருட் செறிவு, இலக்கிய இனிமை, இலக்கணக் கட்டமைப்பு இவைகளைத் தன் தாய்மொழியில் பதிவு செய்வதோடு அதன் பெருமையை உள்ளத்தால், உணர்வால் மதித்து தாய் மாண்பினை உலகிற்கு எடுத்துச் சொல்லுதல் ஒரு உன்னதமான தலையாய கடமையாகும்.

01. தன் தாய்மொழியை ஒருவன் துறைபோகக் கற்க வேண்டும். அதிலே அவன் அகம் உணர்ந்து படிய வேண்டும்.

02. தன் தாய்மொழியிலுள்ள வளம் மிக்க இலக்கிய இலக்கணங்களை பாதுகாத்தல் மிகமிக அவசிய மானதாகும்.

03. அன்னிய மொழி மோகத்தால் தன் தாய்மொழியை ஏளனமாக, இகழ்ச் சியாக பார்த்து அந்நிய மொழிதான் தன்னுடைய நாகரீகமென்ற போலி யான எண்ணத்தைக் கைவிட வேண்டும்.

04. தன் தாய்மொழியோடு பிறமொழி களைக் கலந்தது மொழிகளின் உயிரினைக் குறைத்து இரண்டு மொழிகளுக்கும் களங்கம் ஏற்படுத்தி தாய்மொழியையும் இழிவுபடுத்தி அன்னிய மொழிகளையும் அன்னியப் படுத்துகின்ற அநாகரிகப் போக்கு விடுபட வேண்டும்.

05. தன் வீடுகளில் மனைவி, பிள்ளைகள், வீட்டு நிகழ்வுகள் ஆகியவற்றில் தாய்மொழியின் தனித்துவத்தை அனைத்து விடயங்களிலும் பயன்படுத்தி குடும்பமே தாய்மொழி உறவில் குழைந்து திழைக்க வழிசெய்ய வேண்டும்.

06. தாய்மொழி அழிவு தன் தாயை அழிப்பது போலாகும். தன் தாயைப் பாதுகாப்பது போல் தன் தாய் மொழியை அனைத்து வழிகளிலும் பாதுகாப்பதற்கு உறுதி பூணுதல் வேண்டும்.

07. பிறமொழிகளை நிதானத்தோடு கற்று தன் தாய்மொழிப் பெருமையை, அதனூடாக உள்ள நிறைந்த செய்திகளை பிறமொழிகளில் பதிவு செய்து வைத்தல் தலையாய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மேற்குறித்த விடயங்கள் யாவற்றையும் மனதில் பதித்து படிந்து வாழ்வோமாக

## தாய்ச் சமயம்

"தெய்வம் என்பதோ சித்தம் உண்டாகி" என்ற மணிவார்த்தைக்கு ஒப்ப தெய்வ நம்பிக்கை சித்தத்தின் ஊடாகவே பதிந்து வந்திருக்கின்றது. தெய்வ நம்பிக்கை தோன்றிய காலம் முதல் சமூகக் கடமைக் கட்டமைப்பு சமயம் என்ற சங்கமத்தின் ஊடாகத் தோற்றம் பெற்று வந்திருக்கின்றது. சமய வாதிகள் சமய கணக்கர் என்றெல்லாம் சமயம் சார்ந்தோர் அழைக்கப்பட்டிருக்கின்றார்கள். உலகில் காலத்திற்குக் காலம் எத்தனையோ சமயங்கள் தோற்றமாகி கால வோட்டத்தில் மாற்றமடைந்து மறைந்தும் இருக்கின்றன. இன்றும் பலகோடி மக்களிடையே பலவகைப்பட்ட சமயங்கள் உருக் கொண்டு கருக் கொண்டு நிலை பெற்றிருக்கின்றது. சமயங்கள் பண்படாத மனத்தை பண் படுத்திச் சமைக்கும் நெறியாகும். இச் சமயங்கள் மனிதவாழ்க்கைக்கு ஒழுங்கு, ஒழுக்கம், அன்பு, அறவளிச்சிந்தனைகள், நன்னெறிகள் ஆகியவற்றை போதிப் பதையே நோக்கமாகக் கொண்டவை.

தற்போது மதம் என்ற பெயருக்குள் சமயங்கள் உள்வாங்கப்பட்டு மத வெறிக்கு உள்ளாகி மனித இனத் தினைக் கூறுபோடுகின்றனர். எல்லாச் சமயங்களையும் ஆழ அகலமாக நோக்கினால் இறைவன் ஒருவன் தான் அந்த இறைசக்தியை சமயங்களெல்லாம் தாங்கள் நோக்கியவாறு பெயர் சூடியும் பெயர் நிலைப்படுத்தியும் கடவுள் வழியை இடியப்பச் சிக்கலாக்கினர். இதுவே கடவுளுக்கும் சமயத்துக்குமான முரண்பாடும், முன்னேற்பாடும். இதில் நாம் பார்க்கப்போகின்ற தாய்ச் சமயம் என்றால் என்ன என்பதே நமது பார்வையாகும். தாய்ச் சமயம் என்பது தாய்வழி மூதாதையர் தொடராக கடைப்பிடித்து வந்த தெய்வீகக் கோட் பாடாகும். எந்தச் சமயமாகினும் அந்தந்தச் சமயத்தை தாய்வழி மரபாகக் கொண்டவருக்கு தன் தாய் சுட்டிய சமயமே தாய்ச் சமயமாகும். தாயின் மடியே ஒரு குழந்தையின் ஆரம்பப் பாடசாலை என்பது போல், ஒரு தாய் படிந்த நம்பிக்கையுடன் வழிபாடாற்றிய சமயமே அக்குழந்தையின் பண்புக்கு இலக்கணம் காட்டும் சமயமாகும். தாய் மெய் என்பது போல் சமயத்தின் ஊடாகக் காணும் தெய்வமும் மெய்யென்று ஒரு மனிதன் நம்புகிறான். எது சத்தியமா னதோ, எது உண்மையானதோ அதை உலக சத்தியத்தின் தனித்துவமான தாயின் பெயரிலே அழைக்கத் தலைப் பட்டனர். தாய் மெய் என்பது போல் தாய்ச் சமயத்தினூடாக நாம் பார்க்கின்ற செய்தி இன்றைய காலகட்டத்தில் உலகெங்கும் பல சமயங்களினூடாக பலவடிவத்தில் மதமாற்றம் தோற்றம் பெற்றிருக்கின்றது. இது ஒரு சமய மாயையே. பெற்ற தாயை பொய் என்றும் பெற்ற தாயில் பெருமை இல்லை என்றும் கூறி உன் தாயைவிட என்தாயே உயர்ந்தவள், அழகானவள், அறிவானவள், சகல தகமைகளும் கொண்டவள் பேறுபெறும் நிலையில் உள்ளவள் இவள் தான் அனைத்தும் எனவே இனி உன்தாய் உனக்குத் தேவையில்லை என் தாய்தான் உனக்குத் தாயென்று கூறுவது போல் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதமாற்றம் அமைகின்றது. ஒவ்வொருவருக்கும் அவரின் தாய்ச் சமயம் உயிரினும் மேலானதே ஒரு தாயின் வீட்டில் அந்தத் தாய் சமைக்கும் கறி வகைகள் ருசிப்படலாம், வேறுபடலாம் தன்மைகள் மாறலாம் ஆனால் அந்தத் தாயின் வீட்டிலும் முதலிடம் பெறுவது சோறுதான், இந்தத்தாயின் வீட்டிலும் முதலிடம் பெறுவது சோறுதான். ஒவ்வொரு வீட்டிலும் கறிகள் வேறுபட்டாலும் சோறு மட்டும் தனித்துவம் பெறுவது போல் சமயங்களின் கோட்பாடுகள் வேறு பட்டாலும் கடவுள் ஒன்றே. இதனைப் புரிந்து கொண்டால் மதமாற்றங்கள் இழிவான செயல் என்றும், மனிதனுக்குப் பொருத்தமற்ற செயல் என்றும் நம் மனதில் தோன்றும். தாய்ச் சமயம் சுட்டும் சமயக் கோட்பாடுகளை அத் தாய்ச் சமயம் சார்ந்த சந்ததியினர் உணர்தல் வேண்டும். தாய்வழிப் பண்பும் சமயவழிப் பண்பும் தனித்துவம் மிக்கவை. தொழில் சார் கல்வியால் அல்லது நவீன விஞ்ஞான முன்னேற்றக் கல்வியால் சமூகப் பண்பைக் கட்டிக் காக்க முடியாது. மனிதன் மனிதனாக வாழ வேண்டு மென்றால், மனிதம் புனிதப்பட வேண்டு மென்றால் சமயம் சார்ந்த அறவழிப் பண்பே மனிதனைப் பண்படுத்தும். ஏனைய பொருந்தாத கல்வியெல்லாம் மனிதனைப் புண்படுத்தும். ஆக தாய்ச் சமயத்தை அனைவரும் போற்றுதல் வேண்டும். அச்சமயத்திலுள்ள அறநெறிப் பண்பை கற்றுணர்தல் வேண்டும். தாய்ச் சமயத்தை இன்னோர் தாய்ச் சமயத்தைச் சார்ந்தவர் இழிவாகக் கூறும்போது நம் தாய்ச் சமயத்தின் பெருமையை, சிறப்பை அவர் மனம் புண்படாதபடி அவரின் தாய்ச் சமயம் குற்றமுறாத படி எடுத்துக் கூறுதல் தாய்ச் சமயத்தவரின் கட்டாயக் கடமையாகும். அதற்கும் மீறி நம் தாய்ச் சமயத்தை மனிதப் பண்பாடற்ற விதத்தில் இழிவு படுத்துவாராயின் " தாயை இகழ்ந்தவனை தாய் தடுத்தாலும் விடேன்" என்ற வீரமொழிக்கு ஒப்ப அத்தகையவரை நாமும் இழிவு படுத்துதல் குற்றமான தொன்றல்ல. இது அனைத்து தாய்ச் சமயத்தவர்களுக்கும் உண்மையானதும், உரிமையானதும் ஆகும். எனவே பின் வரும் விடையங்களை தாய்ச் சமயத்தின் வளர்ச்சிக்காக நாம் கவனத்தில் கொள் ளுதல் வேண்டும்.

01. நம் தாய்ச் சமயத்தின் பெருமை, சிறப்புக்களை மனப்பூர்வமாக உணருதல் வேண்டும்.

02. ஏனைய தாய்ச் சமயத்தவர்கள் நமது தாய்ச் சமயத்தை இழிவு படுத்தும் போது அதற்குத் தகுந்த பதில் கூறும் முகமாக அனைத்துச் சமயங்களின் உட்பொருள்களை நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

03. உயிருள்ள வரை தாய் சமயத்தின் பால் அன்பும், பற்றுறுதியும், உயர்ந்த நோக்கமும் எந்நிலை வந்தாலும் தாய் சமயத்தினை விட்டு மாறாத பக்குவமும் மனவு றுதியும் கொண்டிருக்க வேண்டும்.

04. நம் தாய்ச் சமயத்தை நம் தாய்ச் சமயத்தவர்களே உணராத போதும் அறியாத போதும் அவர்க ளுக்கு எடுத்துச் சொல்லி தாய்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தினைப் பாதுகாப்ப வர்களாக நாம் விளங்க வேண்டும்.

மேற்குறித்த தாய்மண், தாய்மொழி, தாய்ச் சமயம் என்ற மூன்று வகையான சிந்தனைகளும நம் சிந்தைக்குரிய விருந்தாக அமையட்டும் இக் கட்டுரையில் எந்த மண்ணையோ, எந்த மொழியையோ, எந்த சமயத்ததையோ சுட்டவில்லை என்பதை பணிவோடு கூறிக் கொள்கிறேன். இந்த மூன்று விடயங்களின் நோக்கம் உலகத்தில் வாழும் அனைவருக்கும் பொருத்தமாக அமைய வேண்டும். அதுவே இதன் வடிவமாகும்.

**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்.....**

**மொழிகளை அறிதல் விழிதிறந்த மனிதன்....**

**தாய்ச் சமயமே தன்னுயிரென்று தங்காதோடிச்**

**சரித்திரம் படைப்போம்.......**

**அன்பே சிவம் அதுவே நலம்**

கவியரசு: விஸ்வப் பிரம்மஸ்ரீ
**வை. இ. எஸ். காந்தன் குருக்கள்**
(கண்மணிதாசன்)
காளிபுரம், பெரியபோரதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்து செல்லும்

# கிராமிய விளையாட்டுக்களும் மறைந்து கிடந்த கல்விச் செயற்பாடுகளும்

கிராமிய வாழ்க்கை என்பது மனிதனின் ஆத்மாவோடு நெருங்கிய தொடர்புடையது. மனித வாழ்க்கைக்கு அவசியமானவை எனக்கருதப்பட்ட இயற்கை முறையிலான அனைத்து அம்சங்களும் நிறையப்பெற்றதுதான் கிராமிய வாழ்க்கை என்பதை எவரும் மறுக்கமுடியாது. இவ்வாறான தத்துவார்த்த அடிப்படையில் அமைந்த கிராமத்து மக்களால் விளையாடப்பட்ட விளையாட்டுக்களும் நிலவொளியில் வட்டமாகக் கூடியிருக்க பாட்டிசொல்லும் செவிவழிக் கதைகளும் கல்வியுடன் உளவியல் அம்சங்களையும் பல்வேறு திறன்களையும் மனப்பாங்கு மாற்றங்களையும் ஏற்படுத்தியிருந்தன என்பது வெளிப்படையான உண்மையாகும்.

கிராமிய விளையாட்டுக்கள் இளவயதினரை மட்டுமன்றி முதியவர்கள் வயதுவந்தவர்ளையும் கவர்ந்திழுக்கும் ஆற்றலுடையவை குறிப்பாக பூமதித்துக் குட்டுதல், ஊசிவைத்தல், சுரக்காய் இழுத்தல், கொத்து விளையாட்டு போன்ற விளையாட்டு வகைகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம். இந்த விளையாட்டுக்கள் எதை எடுத்துப் பார்த்தாலும் இரு குழுக்களாகப் பிரித்து இரண்டு குழுக்களுக்கும் இரு தலைவர்கள் இருப்பார்கள் இதன் மூலம் இங்கு தலைமைத்துவப் பண்புகள் வளர்க்கப்பட்டது. விட்டுக் கொடுத்தல், அவதானித்தல், ஒன்றுபட்டுச் செயற்படல், இலக்கில் கவனம் செலுத்துதல் எனப்பல தலைமைத்துவப் பண்புகள் இவற்றுள் இயல்பாக மறைந்து காணப்பட்டன. இதேவேளை குழுக்களாகப் பிரிக்கப்படுகின்ற போது அவர்களிடையே கூட்டுப் பொறுப்பும் செயற்படும் பண்பும் இயல்பாகவே சிறுவர்களிடம் வளர்க்கப்படுவதை அவதானிக்கலாம்.

அதிகமான விளையாட்டுக்களை எடுத்து நோக்குகின்ற போது அவற்றிடையே கணித எண்ணக்கரு பொதிந்திருப்பதை அவதானிக்க முடியும். பெருக்குதல், கூட்டுதல், கழித்தல் எனப்பல அம்சங்கள் இந்த விளையாட்டுக்களில் இழையோடிக் காணப்படும். இதனை நாம் நோக்கும் போது விளையாட்டின் ஊடாக கற்பித்தல் என்னும் விடயம் எப்போதோ கிராமிய விளையாட்டுக்களின் ஊடாக வளர்த்துச் செல்லப்பட்டிருப்பதை அவதானிக்க முடியும்.

சில விளையாட்டு முறைகளை ஆராயும் போது மேற்குறித்த கருத்துக்கள் வலுப்பெறும் என நினைக்கின்றேன். உதாரணமாக பூமதித்துக் குட்டுதல் என்பதில் குட்டுகின்ற பிள்ளைகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இரண்டு குழுக்களைப் பிரிப்பார்கள். இந்தக் குழுக்களும் வித்தியாசமான முறையில் பிரிக்கப்படுவதைக் காணலாம். அதாவது ஒத்த இயல்பைக் கொண்ட இருவர் இருவராக சோடி சேர்வார்கள் இதில் ஆண் பெண் என்ற வேறுபாட்டுக்கு இடமிருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயல் வீடுகளில் இருந்து ஒன்று சேரும் அனைத்துச் சிறுவர்களும் ஒன்று சேர்ந்து செயற்படுவார்கள் சோடி சேரும் இருவரும் தங்களுக்கு இரண்டு பெயர்களைத் தலைவர்களுக்குத் தெரியாமல் வைத்துக் கொள்வார்கள் அது பூக்கள் மிருகங்கள் பறவைகள் மரங்கள் பெரியார்கள் எனப்பல வகைகளில் ஏதேனும் ஒரு வகையில் இருந்து இருவரும் பெயர்களை வைத்துக் கொள்வார்கள். அவர்கள் இருவரும் தலைவர்களிடம் சென்று தமது பெயரைக்கூறி அதாவது புனைபெயரைக் கூறி இதில் யார் வேண்டும் எனக் கேட்பார்கள். உதாரணமாக பூக்களின் பெயர் என வைத்துக் கொண்டால் ஒருவர் தாமரை என்றும் மற்றவர் மல்லிகை என்றும் பெயர் வைத்துக் கொண்டால் தலைவர்களிடம் சென்று தாமரை வேண்டுமா? மல்லிகை வேண்டுமா? எனக் கேட்பார்கள். தலைவரில் ஒருவர் ஒருபெயரைக் கூறி அதனை அழைப்பார். அப்பெயர் உடையவர் அவர் பக்கம் செல்வார்.

இங்கும் ஒரு ஒழுங்கு முறை பேணப்பட்டது. இரண்டு தலைவர் களும் தம்மிடம் வரும் சோடிகளை முதலில் யார் கேட்பது என்ற ஒழுங்கு முறை பேணப்பட்டது. இவ்வாறு இரண்டு குழுக்கள் பிரிக்கப்பட்ட பின்னர் இரண்டு குழுக்களும் இரண்டு பக்கங்களில் எதிர் எதிராக கிட்டத்தட்ட பத்து அடி பதினைந்து அடி தூரத்தில் வரிசையாக அமர்ந்து கொள்வார்கள். பின்னர் தலைவர்கள் தமது குழுவினர் ஒவ்வொருவருக்கும் மிக இரகசியமாக பூக்களின் பெயர்களைச் சூட்டிக் கொள்வார்கள். இங்கு தான் உளவியல் சார்ந்த பல்வேறு திறன்கள் அவர்களுடாக வளர்க்கப்படுவதை அவதானிக்கலாம். விளையாட்டு இவ்வாறு தான் ஆரம்பிக்கும் தலைவர் எதிரணியினர் பக்கம் சென்று அமர்ந்திருக்கும் ஒருவரின் கண்களை இறுக்கமாக தமது கைகளால் மூடுவார். ஏனையோர் அமைதியாக இருக்க அவர் தமது அணியில் உள்ள ஒருவருக்கு சூட்டப்பட்ட பூவின் பெயரைச் சொல்லி அழைப்பார். உதாரணமாக முல்லைப்பூ என அழைத்தும் அந்த முல்லைப்பூ எனப்பெயர் சூட்டப்பட்ட சிறுவனோ சிறுமியோ எழுந்து வந்து தமது தலைவரால் கண்கள் மூடப்பட்டுள்ள சிறுவனின் தலையில் மெதுவாக குட்டிவிட்டு தமது இடத்தில் சென்று அமர்ந்து விடுவார். அவர் சரியாக அமர்ந்த பின்னர் தலைவர் கைகளை எடுக்க கண்கள் மூடப்பட்ட சிறுவன் தம் தலையில் குட்டியவரை இனங்கண்டு கூறவேண்டும். அவ்வாறு கூறிவிட்டால் இவர்களுக்கு புள்ளிகள் கிடைக்கும். கூறாவிட்டால் எதிரணிக்கு புள்ளிகள் வழங்கப்படும். இங்கு அவதானித்தோமானால் கண்கள் மூடப்பட்ட சிறுவனோ சிறுமியோ தன்னை நோக்கி வருபவர் எங்கிருந்து வருகிறார்? அவர் வருகின்ற ஓசைகளை சரியாகச் செவிமடுத்து அவரை இனங்காண முயற்சிப்பார். அதேவேளை அவர் குட்டுகின்ற முறை போன்ற விடயங்களை ஆழமாக அவதானித்து குறித்த சிறுவனை இனங்காண்பார் இங்கு அவதானிப்புத்திறன் இயல்பாகவே வளர்க்கப்படுவதைக் காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மேலும் தலையில் குட்டிய சிறுவனோ சிறுமியோ தன்னை அடையாளம் கண்டுவிடக் கூடாது என்பதற்காக தாம் நடக்கும் முறையில் மாற்றத்தைச் செய்தல் குட்டும் போது கைபிடிக்கும் முறையில் மாற்றத்தைச் செய்தல் போன்று நுட்பங்களைக் கையாள்வர். இவ்வாறு செயற்படும் போது எதிரணியினர் குறித்த சிறுவனை இனங்காட்டி விட்டால் எதிரணித் தலைவர் மற்றைய அணியினரின் கண்களை மூடி தனது அணியில் உள்ளவர்களை அழைப்பார். இவ்வாறு இந்த விளையாட்டு தொடர்ந்து செல்லும் போது குறித்த புள்ளி இலக்கை எந்த அணி சென்றடைகின்றதோ அந்த அணி வெற்றி பெற்ற அணியாகக் கருதப்படும்.

இவ்வாறு எந்தக் கிராமிய விளையாட்டுக்களை எடுத்துக் கொண்டாலும் கல்வி எண்ணக்கருக்களுடன் கூடிய உளவியல் செயற்பாடுகளையும் மனப்பாங்கு வளர்ச்சியையும், திறன்களின் வளர்ச்சியையும் அவதானிக்க முடியும். அதிகமாகக் கிராமப் புறங்களில் பகல் வேளைகளில் ஓடி விளையாடக் கூடிய விளையாட்டுக் களும் இரவு வேளைகளில் அமர்ந்திருந்து விளையாடும் விளையாட்டுக்களும் இடம் பெறும். பகல் வேளைகளில் கொடி எடுத்தல், வார் அடித்தல், எட்டுக் கோடு விளையாடுதல், மாம் பருப்பு தெறித்தல், வட்டக்காவடி, கொந்தாளம் எனப் பல விளையாட்டுக்களை விளையாடுவார்கள். இவ்விளையாட்டுக்கள் இன்று மாற்றங்களுடன் கல்வியூடாக புகுத்தப்படுவதை அவதானிக்கின்றோம்.இவ்வாறான கிராமிய விளையாட்டுக்களைத் தொகுத்துக் கூறுவதானால் கூறிக் கொண்டே போகலாம். எனினும் இதிலிருந்து நாம் பல விடயங்களைப் புரிந்து கொள்ளலாம். அதாவது கிராமிய மக்கள் தம் அறிவையும் ஒருமைப்பாட்டையும் கூட்டுச் செயற்பாட்டையும், விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கையும் வளர்த்துக் கொள்ளும் வகையில் விளையாட்டுக்களை வடிவமைத்திருந்தார்கள். ஆனால் இன்று அவை அனைத்தும் எம்மை விட்டு விலகிச் சென்று விட்டன. அல்லது எங்கோ மிகமிக அரிதாகக் காணப்படுகின்றன எனக் கூறலாம். போரதீவுப்பற்றுப் பிரதேசக் கிராமங்களில் பரவிக் கிடந்த இவ்விளையாட்டு முறைகள் அருகிச் சென்றிருப்பது ஒரு கவலை தரும் விடயமாகவே உள்ளது. இதில் விசேட அம்சம் என்னவெனில் எழுத்து வடிவில் இல்லாத இவ்விளையாட்டு முறைகள் பாமர மக்களால் உருவாக்கப்பட்வை என்பது தான். எவ்வாறு நாட்டார் பாடல்கள் செவிவழியாகக் கேட்டு பேணப்பட்டு வந்ததுவோ அவ்வாறே இவ்விளையாட்டுக்களும் பேணப்பட்டு வந்துள்ளன. படியாத பண்டிதர்களின் பக்குவமான கிராமிய வாழ்க்கை முறை பண்புகள் செறிந்ததாக மனித நேயம் கொண்டதாக விளங்குவதற்கு இவை வழியமைத்துக் கொடுத்தன என்பது தான் உண்மையாகும்.

**திரு: வே.ஆ.புட்கரன்**
*திருப்பழுகாமம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோவில் போரதீவு ஸ்ரீ கண்ணகியம்மன் சடங்கு நிகழ்வுகள் பற்றிய விவரணம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு நகரில் இருந்து தென்மேற்குத் திசையில் ஏறத்தாழ முப்பது கிலோமீற்றர் தொலைவில் மட்டுவாவியின் மேற்குக்கரையான படுவான்கரைப் பகுதியில் போரதீவுப்பற்று பிரதேசம் அமையப்பெற்றுள்ளது. இப்பிரதேசமானது தமிழரின் தனித்துவம்மிக்க பண்பாடு நிறைந்ததாகக் காணப்படுகின்றது. சடங்கு, நாட்டார் கலைகள், பாரம்பரியமான விழாக்கள், கலாசாரம் என்பன சிறப்பாக வளர்ச்சியடைந்து காணப்படுகின்றன. இவ்வாறு தனக்கென சிறப்பான பாரம்பரிய கலாசாரம் கொண்ட பிரதேசத்தில் அம்மன் சடங்குகள் மிக சிறப்பாக இடம்பெறும் என்பதில் ஐயமில்லை.

அந்தவகையில் கோவில்போரதீவு ஸ்ரீ கண்ணகியம்மன் சடங்கு நிகழ்வுகளை நோக்குகின்ற வேளை இங்கு சடங்கு ஒன்பது நாட்களுக்கு நடைபெறுகின்றது. இச்சடங்கு முறை கண்ணகி வழக்குரை எனும் காவிய வழி பின்பற்றி நடைபெறுகின்றது.

மக்கள் பக்தியுடனும் நம்பிக்கையுடனும் கண்ணகியம்மன் சடங்கை நடத்துகிறார்கள். கண்ணகியம்மன் சடங்கு மக்களிடையே சமூக ஒற்றுமையையும் கூட்டிணைப்பையும் கொண்ட ஒன்றாக உள்ளது. சிலப்பதிகாரம் சிறப்பித்துக்கூறும் கண்ணகியின் கற்புநெறியை வாழ்வியலாகக் கொண்டு இம்மக்கள் கண்ணகி வழிப்பாட்டைச் செய்கின்றனர். பெண்கள் அம்மனைச் சாந்தப்படுத்தி தமது குறைகளை நீக்கக் குரவை செய்வார்கள்.

ஆரம்ப நிகழ்வான திருக்கதவு திறக்கும் முன் 'வண்ணான் கூவெண்ணுதல்' எனும் நிகழ்வு இடம்பெறுகின்றது. அதன் பின் ஆலய அர்ச்சகரை அவரது இல்லத்திலிருந்து பறை ஒலியுடன் ஆலய நிர்வாகிகளும் பாகைமுகாமையாளர்களும் கிராமமக்களும் சேர்ந்து ஆலயத்திற்கு அழைத்துச்செல்கிறார்கள். அர்ச்சகர் திருக்குளிர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வு வரைக்கும் ஆலயத்தில் தங்கியிருந்து சடங்குகளை நடத்துவார். இச்சடங்குகள் யாவும் குடிமுறையாக நடைபெறுவது வழக்கமாகும். ஒவ்வொரு குடியினரும் பூசைத் திரவியங்களை பறை ஒலியுடனும் வெடி குரவையுடனும் ஆடம்பரமாக ஆலயத்திற்கு எடுத்துச்செல்வார்கள். இக்காலங்களில் வெளிக்கருமங்களான கூத்து, நாடகம் போன்ற நிகழ்வுகள் சடங்கை மெருகூட்டும் வகையில் இடம்பெறுகின்றன.

இச்சடங்கு நடக்கும் ஒன்பது நாட்களும் ஏட்டுபிரதியிலிருந்து அம்மனின் வழக்குரை வரலாற்றை பாராயணம் கூறுவது வழக்கமான முறையாகும். ஒவ்வொரு நாளும் அமுதுகொடுத்தல் எனும் நிகழ்வு இடம்பெறுகின்றது. அன்னதானம் கொடுப்பதையே அமுதுகொடுத்தல் எனக்கூறுகின்றனர்.

முதல் நாள் ஆலயத்தில் அட்டபாலகர் பலியும் திருக்கதவு பூசையும் நடைபெற்று அதற்குரிய மந்திரங்கள் சொல்லப்பட்டு திருக்கதவு திறக்கப்படுகிறது. தொடர்ந்து 'ஏலகுலவியர்கள் மூவாயிரம் பேருக்கும் அட்டசித்தியானவர்கள் எட்டுப் பேருக்கும் பஞ்சசித்தியானவர்கள் ஐந்து பேருக்கும் செப்பு, நெருப்பு, செந்தாமரை, கன்னியர்க்கும்' என்ற அகவலுக்கு அமைய முதலில் விநாயகர்க்கு மடைபரவி தொடர்ந்து அம்மனுக்குரிய அபிசேகமும் மடைவகுப்புகளும் வைக்கப்படுகின்றன. அலங்கார பூசை தீப ஆராதனையுடன் நடைபெற்று அர்ச்சனைகளும் இடம் பெறுகின்றன. அம்மனுக்குரிய அகவலும் காவியமும் உடுக்கு சிலம்பொலியுடன் பாடப்படுகின்றன. திருக்கதவு நிகழ்வு பிரசாதம் வழங்கப்படுவதுடன் அதிகாலை நான்கு மணியளவில் முடிவடைகின்றது. ஒவ்வொரு நாளும் பகல் சடங்கில் மேற்குறிப்பிட்ட மடை வகுப்பு விதிக்கமைய மடை வைக்கப்பட்டு அம்மனுக்கு அபிசேகமும் விசேட பூசைகளும் இடம்பெறுகின்றன.

இரண்டாம் நாள் மாலை ஆறுமணியளவில் அம்மன் ஆலயத்திலிருந்து கிராமத்தைச் சுத்தம் செய்வதற்காக எழுந்தருளலை ஊர்காவல் என அழைகின்றனர். இதன்போது அர்ச்சகர் பறை வாத்தியம் முழங்க மேற்கட்டியுடன் கிராமத்தின் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு திசைகளுக்குச் சென்று அங்கிருக்கும் பரிவாரமூர்த்திகளுக்குத் தேங்காய் வெட்டிப் பலிகொடுத்துக் கிராமத்தைச் சுத்தம் செய்து காவல் செய்வார்.

மூன்றாம், நான்காம், ஐந்தாம் நாட்களில் பகல்சடங்கும் அம்மன் கிராமபிரதட்சணமும் இடம்பெறுகின்றன. இந்நாட்களில் அம்மனைக் கும்பத்தில் ஸ்தாபனம் செய்து அர்ச்சகர் முகம் உட்பட உடல் அங்கங்களுக்கு மஞ்சள் பூசி வர்ணமான சேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்து பெண் உருவம் போல் தன்னைப் பாவனை பண்ணுகிறார். பக்தர்களுக்குக் கண்ணகியே நேரில் தென்படுகின்ற உணர்வு ஏற்படுகின்றது. அவர் கையில் சிலம்பு அணிந்து வேப்பிலை கைப்பிடித்து மேற்கட்டி பிடித்து பறை ஒலி முழங்க சங்கொலிக்க மக்கள் அரோகரா கோசம் செய்ய கிராமத்தின் தெருவீதியாக கும்பத்தை ஏந்திக்கொண்டுவர கிராம மக்கள் கடைவாயில் நிறைகுடம் வைத்து விளக்கு ஏற்றி கற்பூரம் கொழுத்தி அம்மனை பக்திபூர்வமாகவும் பயபக்தியோடும் வரவேற்று சுத்தமான பாத்திரத்தில் நீர் எடுத்து அதனுள் மஞ்சள் கலந்து பூ, வேப்பிலை போட்டுக் கால் கழுவுவார்கள். வெடிச்சத்தத்துடன் குரவை ஒலிக்க மக்கள் கூட்டமாகப் பின்னாலே செல்வார்கள்.

ஆறாம் நாள் திருக்கல்யாணக்கால் வெட்டுதல் எனும் நிகழ்வு இடம்பெறுகின்றது. மீனாட்சிகட்டு விநாயகர் ஆலயத்திலிருந்து மேற்கூறப்பட்டவாறே அர்ச்சகரை அலங்கரித்து அம்மனை எழுந்தருளச்செய்து ஊர்வலமாக அம்மன் கோயிலை சென்றவடைவார்கள். இவ்வாறு கோயிலை நெருங்கும் போது அர்ச்சகருக்கு அம்மனின் அருள் வெளிப்படுகிறது. மீண்டும் அம்மன் கோயிலிலிருந்து எழுந்தருளச்செய்து திருக்கல்யாணக்கால் வெட்டும் இடம்நோக்கிப் புறப்படுவார்கள். மேற்கூறப்பட்ட அலங்காரங்களுடன் அர்ச்சகர் செல்வார். திருக்கல்யாணக்காலுக்காக கிளை இல்லாத ஒரு மரத்தையே தெரிவுசெய்கிறார்கள். இவ்வாறு தெரிவு செய்யப்படுவது பூவரச மரமாகும். அது இல்லாத சந்தர்ப்பத்தில் வேப்பமரமும் பயன்படுத்தலாம் என விதி கூறுகிறது. பூவரசமரம் இருக்கின்ற இடத்தில் கும்பம் வைத்து முறைப்படி பூசைசெய்து மரத்தை வெட்டி ஊர்வலமாக ஆலயத்திற்குக் கொண்டு வருகிறார்கள். ஆலயத்தினுள் கால் நாட்டி நூல் கோர்த்து கட்டும் நிகழ்வு இடம்பெறுகின்றது. இந்நிகழ்வு ஒரு தத்துவத்தை வெளிப்படுத்துகிறது. கோவலன் கொலையுண்ட போது கண்ணகி அந்த இடத்திற்குச் சென்று சிவபெருமானை நினைத்து வானுலகத்திலிருந்து ஊசியும்நூலும் பெற்று கோவலனின் இரு அங்கங்களையும் தைத்து உயிர் கொடுத்த நிகழ்வை இச்சடங்கு வெளிப்படுத்துகிறது. அன்றைய நாளில் அடியார்கள் நேர்த்திக்கடனை நிறைவு செய்யும்முகமாக தீக்கட்டை எடுக்கும் நிகழ்வு இடம்பெறுகிறது. தீக்கட்டையாக வீரக்கட்டை அல்லது வேப்பங்கட்டையை எடுத்துக் கொண்டுவருகிறார்கள்.

ஏழாம் நாள் திருக்கல்யாணச்சடங்கும் தீமிதித்தலும இடம்பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கல்யாணச்சடங்கில் மேற்படி வழக்கம் போல் மடைவகுப்பு செய்யப்படுகிறது. அம்மனின் திருமணத்தின் போது ஐம்பத்தேழு தேவர்கள் கண்ட காட்சியை வெளிப்படுத்தும் வகையில் ஐம்பத்தேழு கும்பங்கள் வைக்கப்படுகின்றன. அதற்கு மடைகள் பரவப்படுகின்றன. நடுகால் கோவலராகவும் அம்மனாகவும் பாவிக்கப்பட்டு ஏனைய நான்கு கால்களும் செப்புக்கன்னி, செந்தாமரைக்கன்னி, மந்திரக்கன்னி, நாககன்னி என பாவனை பண்ணி வைக்கப்படுகின்றன. இவர்கள் கண்ணகியின் நான்கு தோழியர்கள் ஆவார்கள். இவற்றுக்கெல்லாம் பூசை செய்து மேளவாத்தியம் முழங்க் அம்மனுக்குத் தாலிகட்டி வேதம் ஓதி புஸ்பாஞ்சலி செய்து ஆசிர்வாதம் சொல்லி திருக்கல்யாணக் காவியம் பாடப்படுகின்றது. இந்நிகழ்வின் போது சிறுவர்கள் அம்மானைக்காய், சிலம்பு என்பவற்றைக் குலுக்குவார்கள். இச்சடங்கு அம்மனின் சிறப்புப் பூசையாக இடம்பெறுகிறது. அப்போது அம்மனுக்குரிய பொன்னூஞ்சல் பாடப்படுகிறது. தீபஆராதனை இடம்பெறுகிறது. கண்ணூறு களிக்கும் நிகழ்வும் இடம்பெறுகிறது.

அன்றிரவு தீ மூட்டுதல், தீ மிதித்தல் எனும் நிகழ்வுகள் இடம்பெறுகிறன. "வன்னிவழி நடந்த மாதே குளிர்ந்தருள்வாய்" என்ற வாக்கியத்திற்கு அமைய இந்நிகழ்வு நடைபெறுகிறது. மண்ணால் மேடை அமைக்கப்பட்டு சூரியபகவானுக்கு இருபத்தொரு மடைகள் வைக்கப்படுகின்றன. பின்னர் அம்மனின் ஐந்திரம் தீக்குளியின் நடுவில் கீறப்பட்டு வெற்றிலை, பாக்கு, பழம் என்பவற்றைக்கொண்டு மடைவைக்கப்படுகின்றது. அம்மனுக்கு தீப ஆராதனை செய்யப்பட்டு. அதன் பின் சூரியபகவானுக்கு பூசை செய்து, அக்கினி தேவனை வரவழைத்து, அவருக்குப் பூசை செய்து, தேங்காய் உடைத்து எடுத்துவரும் தீக்கட்டையை ஐந்து துண்டுகளாகப் பிழந்து, எடுத்து அக்கினித் தேவனை கற்பூரத்தில் தாபனப்பண்ணி, இந்தவிறகில் நெய்யை ஊற்றி எரிக்கப்படுகின்றது. பின்பு கொண்டுவரப்பட்ட தீக்கட்டைகள் அடுக்கப்பட்டு அக்கினி வளர்த்து தணல் ஆக்கப்படுகிறது.

இதன் பின் தீமிதிக்கும் அடியார்களுக்குக் காப்புக் கட்டும் நிகழ்வு இடம்பெறுகிறது. அம்மனுக்குத் தீப ஆரதனையுடன் முறையாக பூசை இடம்பெற்று திருவிழா நடைபெற்றபின் தீக்குளியை காவல் செய்யும் நிகழ்வு இடம்பெறுகிறது. காவல் செய்யும் போது பண்டாரம் எறிகிறார்கள். பண்டாரம் என்பது தற்பைபுல், பால் அறுகு, மஞ்சள், செங்கழினிவேர், பச்சரிசி போன்ற திரவியங்களை இடித்த தூளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை அம்மனின் மடியில் வைத்து பூசை செய்து கொண்டு வந்து அக்கினி தேவனுக்குச் சமர்ப்பணம் பண்ணி காவல் செய்கிறார்கள். அதன்பின் அர்ச்சகர் முன்பு கூறப்பட்டது போல் பெண் உருவம் தாங்கி அம்மனின் கும்பத்தை எழுந்தருளச்செய்து வருகைதருகிறார். வருகை தரும்போது பின்புறமாகத் தீமிதிக்கும் அடியார்களும் ஆலய நிர்வாக சபையும் பாகைமுகாமையாளர்களும் வருகை தருகிறார்கள். அவர்கள் தீக்குளியை மூன்று முறை வலம் வருகிறார்கள். அர்ச்சகர் அம்மனின் திருக்கரத்திலிருந்து மூன்று தாமரைப்பூக்களை ஒவ்வொரு பூவாக தீக்குழியில் போடுகின்றார். அந்த மூன்று பூக்களும் வாடாமால் காணப்படுகின்றன. அது மெய்சிலிர்க்கும் ஒரு நிகழ்வாகக் காணப்படுகிறது. முதலில் அர்ச்சகர் தீக்குழிக்குள் இறங்கி மறுகரையை அடைந்த பின்பு அடியார்கள் தீ மிதித்து வெளியே வந்து அர்ச்சகரின் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெறுகிறார்கள். இறுதி நிகழ்வாக அம்மனுக்குக் கண்ணூறுகழித்தல் என்பதுடன் தீமிதித்தல் நிகழ்வு முடிவடைகிறது.

எட்டாம் நாள் பச்சை கட்டுச் சடங்கும் மடிப்பிச்சையும் இடம்பெறுகின்றது. பச்சை கட்டுச்சடங்கில் கத்தரிக்காய், பாகற்காய், புடலங்காய், கீரைவகை போன்ற பொருட்களை மடையில் வைத்தும் ஆலய மண்டபத்தில் கட்டித் தூக்கியும் அலங்கரிக்கப்படுகின்றன. பூசை செய்து அகவலும் காவியமும் பாடப்படுகின்றன.

ஒன்பதாம் நாள் திருக்குளிர்த்தி இறுதி நிகழ்வாக இடம்பெறுகின்றது. இந்நிகழ்வு வழக்கம் போல அதிகாலையில் இடம்பெறுகிறது. "வைகாசித்திங்கள் வருகுவோம் என்று வரிசை இசைந்து விடை கொடுத்தார்" என்ற பாடலுக்கு அமைய இந்நிகழ்வு வைகாசிபூரணையில் இடம்பெறுகின்றது. வழக்கம் போல் மடைகள் வைக்கப்படுகின்றன. மாம்பழம், தோடம்பழம், அன்னாசிப்பழம், விளாம்பழம், மாதுளம்பழம், பலாப்பழம் ஆகிய பழவகைகளைத் தொகையாக சுத்தம் செய்து தேங்காய்ப் பாலில் கரைத்துத் தேன், நெய் போன்ற திரவியங்களையும் சேர்த்துப் பெரிய பானையில் தீர்த்தம் கரைக்கப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் விநாயக பானை எழுந்தருளல் நிகழ்வு இடம்பெறுகிறது. விநாயகப்பானை பொங்கல் என்பது பெண்கள் மடிப்பிச்சையாக ஏந்தி வரும் நெல்லினை கோயிலுக்குள்ளே உரலில் குத்தி அந்த அரிசியை வெறும் பாலில் இட்டு பொங்குவதை இவ்வாறு கூறுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை நெல்லு பரவி முழுப்பானையாக வைத்து பூசை இடம் பெறுகிறது. வெளிமண்டபத்தில் அம்மனுக்கு மூன்று மடைகள் வைக்கப்படுகின்றன. இவை இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி என்பவற்றை வெளிப்படுத்துகின்றன. இவற்றின் பின் பாணக்கத்தினுள் அத்திக்கொத்து, இத்திக்கொத்து, வெற்றிலை புதைக்கப்பட்டு பூசை செய்து அம்மனின் குளிர்த்தி நிகழ்வு ஆரம்பமாகிறது. குளிர்த்தி மடை எழுந்தருளப்பட்டிருக்கும் மண்டபத்தில் மடைகளுக்கு பூசை செய்த பின் வழக்கம் போல் அர்ச்சகர் பெண் உருவம் எடுத்து கும்பம் தாங்கி வந்து அமர்ந்திருந்த பின் அம்மனின் குளிர்த்தி ஏடு பாடப்படுகிறது.

'ஆளிபுடை சூழுங்காவிரிப் பூம்பட்டினத்தில்

வாழ்வணிகர் தங்குலத்து மாதே குளிர்ந்தருள்வாய்'

எனத்தொடங்கும் குளிர்த்திக் காவியம் பாடப்படுகிறது. பின்பு கும்பத்துடன் பாணக்கப்பாத்திரத்தை தூக்கிக்கொண்டு ஆலயத்தைச்சுற்றி வலம் வருகிறார்கள். இதன் போது மேற்கட்டி பிடித்து, பறை முழங்க, குரவையிட்டு, வெடியொலிக்க, தீர்த்தம் எறிந்து வலம் வருகிறார்கள். இறுதியாக வாழி பாடப்படுவதோடு திருக்குளிர்த்தி முடிவடைகிறது. பாணக்கத்தை எல்லோரும் மருந்தாக நினைத்து உண்கிறார்கள்.

இச்சடங்கு முடிந்து எட்டாம் நாள் வைரவர் சடங்கு இடம்பெறுகிறது. இதனை எட்டாம் சடங்கு எனக்கூறுகிறார்கள். உரொட்டி முதலான பொருட்களை வைரவருக்குப் படைத்து காவல் செய்தமைக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக இச்சடங்கு இடம்பெறுகிறது. இச்சடங்குகள் எல்லாம் நிறைவேறிய பின் அடுத்த வருடம் சடங்கு காலங்களில் மட்டும் கோயில் திறக்கப்படுகின்றது. கண்ணகி வழக்குரைத்து மதுரை எரித்து இமயமலைச் சாரலில் இருந்து வைகாசித்திங்கள் வருகுவேன் எனும் கருத்துகள் இச்சடங்குகள் மூலமாக வெளிப்படுத்தப்படுகின்றன.

தகவல் : க.முருகமூர்த்தி ~ குருக்கள்

செல்வி.வரஷிகா.குமாரநாயகம்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
விவசாயத்திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போரதீவுப்பற்று பிரதேசத்தின் கல்வியில் பெற்றோர் தொடர்பான காரணிகளின் பாதிப்பு

முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு விலைவாசி அதிகரிப்பு காணப் படுகிறது. மாறாக மக்களின் நிரந்தர வருமானம் குறைவடைந்து செல்கிறது. இதனால் தேவைகளை நிறைவேற்றி கொள்வதற்காக பெரும் போராட்டம் நடத்தவேண்டி உள்ளது. கற்றவர்களுக்கு வேலைவாய்ப்பின்மை வேலை கிடைப் போருக்கும் பொருத்தமான வேலைகள் கிடைக்காமை கல்விக்கான செலவு அதிகரிப்பு, பெருகிவருகின்ற தேவைகள், நோய்களின் ஆதிக்கம் அதிகரிப்பு மூலவளங்கள் பற்றாக்குறை, இயற்கை அனர்த்தங்கள் ஆகியவற்றால் மனித இனம் அல்லும் பகலும் சொல்லொண்ணா கஸ்ரங்களுக்கு முகங் கொடுத்துள்ளது.

இவற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதாக இருந்தால் உலக தேவையை அறிந்து பொருத்தமான கல்வியினை பிரஜைகள் ஒவ்வொருவரும் பெறுவது இன்றியமையாதது. தற்போது தொழி லுலகம் எதிர்பார்க்கும் கல்வி தொழி நுட்பம் சார்ந்ததும் கணணியுடன் தொடர்பான கல்வியுமாகும். சர்வதேச மொழியான ஆங்கிலமும் பெரிதும் வேண்டப்படுகிறது. இது இவ்வாறிருக்க போரதீவுப்பற்று பிரதேச மாணவர்கள் கட்டாயக்கல்வி வரையான காலப் பகுதி யிலாவது பொதுக் கல்வியை பெற்றுக் கொள்வதற்கு தயாராக இல்லாத நிலைமை இப்பிரதேச மாணவர்களின் கல்வி பற்றிய எதிர் காலத்தை கேள்விக் குறியாக் கியுள்ளது.

இவ்வாறான நிலைமைக்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. இவற்றில் பெற்றோர் தொடர்பான காரணிகள், பாடசாலை தொடர்பான காரணிகள், சமுகம் சார்ந்த காரணிகள், மாணவன் சார்ந்த காரணிகள் என பல் திறத்தன அடங்குகின்றன என்பதை அலசுவதே இக்கட்டுரை மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கல்வி பற்றிய விளிப்புணர்வு போதாமை இப்பிரதேச பெற்றோர்களிடையே காணப்படும் பிரதான குறைபாடுகளில் ஒன்றாக நாமிதனை நோக்கமுடியும். இப்பிரதேசத்தில் 43 கிராமசேவையாளர் பிரிவுகள் காணப்படுகின்றன. இக் கிராமசேவையாளர் பிரிவுகளில் காணப் படும் அநேக கிராமங்கள் விவசாய பொருளாதாரம் மூலம் தமது பொரு ளாதார அபிவிருத்தியை எதிர்பார்த்து அவற்றில் தங்கியிருப்பவை. நாளாந்த அதேவேளை நிரந்தரமற்ற கூலிவேலை செய்து பிழைப்பு நடத்தும் சாமான்ய மக்கள் வாழும் பிரதேசம். இதனால் கல்வி பற்றிய பெரும் ஈடுபாடோ நாட்டமோ செலுத்தாதவர்களாக அநேகர் காணப்படு கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பதற்கு பல ஆண்டுகளை செலவிட வேண்டியிருப்பதும் உடனடி பயனை கல்வி மூலம் பெறமுடியா திருப்பதும் கல்விக்கான செலவு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதும் கற்றவர்கள் வேலைவாய்ப்பு பெறமுடியாமல் அந்தரப் பட்டு திரிகின்ற சூழ்நிலையும், பொருத் தமற்ற வேலைகள் தாம் பெற்ற கல்விக்கு புறம்பான அல்லது தொடர்பில்லாத நிலைகளில் கிடைப்பதும் இப்பிரதேச பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு கல்வியூட்டுவதில் அசமந்த போக்காய் இருப்பதற்கு துணை புரிகின்றன.

தரம் 11 வரை தமது பிள்ளைகள் கல்வி பெறுவதாக இருந்தால் 11வருடங்கள் செலவிட வேண்டி இருக் கின்றது. அவ்வாறு பெறுவதாயின் கல்விக்கான செலவுகள் வேறு அப்படிக் கற்பித்தால் கூட அதன் பிரயோசனம் உடனடியாகக் கிடைப்பதில்லை, நீண்ட காலம் தேவைப்படுகிறது. ஆனால் நாளாந்த கூலி வேலைக்கு போனால் அன்றன்றே ஊதியம் பெறக்கூடியதாயும் அன்றன்றே தேவைகளில் குறிப்பிடக்கூடி யவற்றை உடனுக்குடன் தீர்த்துக் கொள்ளக்கூடியதாகவும் இருப்பதை இப் பெற்றோர் ஒப்பிட்டு கூறத் தவறுவதில்லை

அரச உத்தியோகமோ அல்லது வேறு தொழில்களிலோ ஈடுபடும் அயலவர்கள் நாளாந்த செலவை ஈடு செய்ய அல்லலுறுகின்றமையும் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் போன்றவற்றை நிறை வேற்ற படாதபாடு படுகின்றமையும் சுட்டிக்கூறும் இவர்கள் வெளிநாடுகளுக்கு சென்று உழைத்து முன்னேறுகின்ற குடும் பங்களை தமக்கு முன்னுதாரணமாக கொள்வதோடு தமது பிள்ளைகளையும் வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்க நாட்டம் கொள்கின்றனர். பல பெற்றோர் பிள்ளைகளை தத்தமது தாய் தந்தையர்களிடம் (பிள்ளைகளின் பாட்டன் பாட்டிகளிடம்) ஒப்படைத்து விட்டு வெளிநாடு செல்கின்றமையையும் நாளாந்தம் காணக்கூடியதாக உள்ளது.

ஒரு பக்க பார்வையை மட்டும் பார்த்து விட்டு முடிவெடுக்கின்றவர்கள் இவர்கள். வெளிநாடு சென்ற குடும் பங்களில் தாண்டவமாடும் ஏனைய அவலங்களை எண்ணிப்பார்க்க மறுக்கின் றனர். பிள்ளைகளின் பெற்றோர்களில் கணவனும் மனைவியுமென இருவரும் வெளிநாடு சென்ற குடும்பங்களில் அவர்கள் தமது பிள்ளைகளை பிள்ளை களின் பாட்டன் பாட்டியிடமோ அல்லது உறவினர்களிடமோ விட்டுவிட்டுச் சென்றுள்ளனர். இதனால் பிள்ளைகள் பெற்றோரது அன்பு அரவணைப்பு, காப்புத்தேவைகளை இழந்து விடுவதோடு தம்மை பேணிவரும் பாதுகாவலர்களுக்கு தண்ணிகாட்டி விட்டு தம்மனம் போன போக்கில் நடக்கின்றனர். இந் நிலைமை அவர்களை சமூக விரோதிகளாக மாற்றிவிட காலாயமைகிறது.

காதலிப்பது, மதுபோதையிலீடுபடுவது, விபச்சாரத்துக்கு தூண்டப்படுவது, பாலியல் துஸ்ப்பிரயோகம் மற்றும் கொலைகளவு போன்றவற்றுக்கு ஆட் படுவது உள்ளிட்ட துர்நடத்தைகளுக்கும் ஆளாகின்ற நிலமை ஏற்படுகின்றது. தவிர கணவனை நீண்டகாலம் பிரிந்திருந்த மனைவி அல்லது மனைவியை நீண்ட காலம் பிரிந்திருந்த கணவன் வேறொரு துணையை நாடுவதும் திருமணம் செய்து கொள்வதும் கூட நிகழ்கிறது இவை குடும்பங்களில் நிரந்தரமான பிரிவுகளை அல்லது அவர்களிடையே தற்கொலைகளை கூட ஏற்படுத்தி விடுகிறது. மேற்படி நிலைமைகளில் அக்குடும்பம் சார்ந்த பிள்ளைகள் பாடசாலைக்கு ஒழுங்கீனமாக செல்லுதல், அல்லது இடைவிலகுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது பாடசாலைப் படிப்பை நிரந்தரமாக கைவிட்டுவிடும் நிலைமையையும் ஏற்படுத்துகின்றது. இந் நிலை ஏற்படக் காரணம் பெற்றார் கல்விமீது கொண்டுள்ள அறிவீனம்அல்லது விளிப்புணர்வின்மை எனலாம்.

பெறுமதியற்ற தேவைகளுக்கு பிள்ளை களை பயன்படுத்துதல் இப்பிரதேச பெற்றோர்களில் பலர் பெறுமதியற்ற தேவைகளுக்காக பிள்ளைகளை பயன்படுத் துவதும் இப்பகுதி மாணவர்களின் கல்வியை பிரதிகூலப்படுத்தும் ஒன்றாக உள்ளது. பெற்றார் தமது உறவினர்களின் மரணம், திருமணம், பிறந்ததினம், பூப்பு நீராட்டுவிழா போன்றவற்றிற்கு பாடசாலை நேரங்கள் மற்றும் பிரத்தியேகக் கல்வி பெறவேண்டிய நேரங்களில் தம்முடன் அழைத்துச் செல்லுதல். இது சில வேளை களில் பல நாட்கள் நீடிப்பதாகவும் உள்ளது. ஆலயத்திருவிழாக்கள் அல்லது சடங்குகள் புதுவருட கொண்டாட்டங்கள் வயல் அறுவடைக்காலங்கள் போன்ற வற்றோடு தொடர்புபட்ட வகையிலும் மாணவர்களின் கல்வியை அலைக்கழிப் போராக பெற்றோரே பெரும்பாலும் அமைகின்றனர். இதனால் படிப்படியாக பாடசாலையிலிருந்து விலகிச்செல்வ தற்கும் பாடத்தில் நாட்டம் இழந்து இடை விலக அல்லது நிரந்தரமாக விலகி விடுவதற்கும் வழிசமைக்கிறது.

## குடும்ப வறுமை

குடும்பத்திலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகமான சந்தர்பங் களிலும் குடும்ப உழைப்பாளர் படையி னருக்கு நிரந்தரவேலைவாய்ப்போ வருமானமோ அற்றிருக்கின்ற நிலைமை யிலும் குடும்ப செலவினை ஈடுசெய்ய முடியாத நிலைமையேற்படுகின்ற போதும் பாடசாலை செல்ல வேண்டிய பிள்ளை களை பாடசாலை செல்வதை விடுத்து கூலி வேலைக்காக அனுப்புத்தல் அல்லது தந்தையுடன் இணைந்து தந்தை மேற் கொள்ளும் செயலுக்கு உதவுவதற்காக (கல்வாடி தொழில், வேளாண்மை செய்கை, மேசன்வேலை, ஓடாவிவேலை, நகைவேலை, மீன்பிடி......) முதலான வற்றில் இணைத்துக் கொள்ளுதல். இது போன்ற சம்பவங்களும் குடும்ப வறுமை காரணமாக பெற்றார் தமது பிள்ளைகளின் கல்விக்கு முழுக்குப்போட செய்வதற்கு உதாரணமாகக் கொள்ள முடியும்.

## குடும்பத்தின் அகச்சூழ்நிலை

பெற்றார் போதை வஸ்த்துக்கு அடிமையான குடும்பங்களில் பிள்ளை களின் கல்வித் தேவைகளை கவனிப் பதற்கான பணப்பற்றாக்குறை போன்ற வற்றாலும் அக்குடும்பத்தில் அனுதினமும் பெற்றாருக்கிடையேயும் பெற்றார் பிள்ளைகளுக்கிடையேயும் நடை பெறுகின்ற பூசல் அடிபிடி சண்டைகள் வாய்த்தர்க்கங்கள் காரணமாகவும் அக்குடும்பப்பிள்ளை கால ஓட்டத்தில் கல்வியை நிறுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்து விடுகிறது. தவிரவும் தொலைக்காட்சிப் பெட்டி, ரேப், ரேடியோ தொலைபேசியுள்ள வீடுகளில் நேரம் கெட்ட வேலைகளில் எல்லாம் உரத்த சத்தத்துடன் அவற்றை அவ்வீட்டிலுள்ள பெற்றோர்களும் வளர்ந் தோர்களும் பயன் படுத்துகின்ற போது அதே வீட்டிலுள்ள பிள்ளைகள் கற்ப தற்கான சூழ்நிலையினை மறுதலித்து விடுவதாக உள்ளது. இதனால் பாடசாலை செல்லும் பிள்ளைகள் கற்கமுடியாமல் அல்லது கற்றலில் புலன் செலுத்த முடி யாமல் போவதுடன் அவர்களது கற்றல் தொடர்பான வீட்டு வேலைகளையும் செய்ய முடியாமலாக்கி விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் அவ்வீட்டிலுள்ள பிள்ளை குறைவான அடைவு மட்டத்தை பெறுவதுடன் பாடசாலையில் பிள்ளைகளின் பரிகாசத்திற்கும் காலப்போக்கில் ஆட்பட்டு பாடசாலை படிப்பை இடையிலேயே முடிவுறுத்தச் செய்து விடுகின்றது. இதுவும் குடும்பம் சார்ந்து இப்பிரதேச மாணவர்கள் எதிர் கொள்ளும் கல்விப் பிரச்சினையாக உள்ளது.

**<u>பெற்றோரிடையே காணப்படும் மூடநம்பிக்கைகள்/ பழக்கவழக்கங்கள்</u>**

இப்பிரதேச மாணவர்களின் கல்வி சார் பிரச்சினைகளுக்கு அவர்களின் குடும்பதிடையே நிலவும் மூடநடம்பிக்கைகளும்கூட குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன குறிப்பாக இப்பிரதேசத்திலுள்ள கிராமப் புறங்களில் இதன் பாதிப்பு பெரும் செல்வாக்கு செலுத்துகின்றது.

குடும்பத்திலுள்ள பெண்பிள்ளைகள் பூப்படைகின்ற சந்தர்பத்தில் பல பெற்றோர்கள் அப்பிள்ளைகளை கன்னித் தொடக்கு கழியும் வரயான 31 நாட்கள் வெளியில் செல்லலாகாது எனக்கூறி அவ் 31நாட்களுக்கும் பாடசாலைக்கனுப்பாது அவர்களை வீட்டிலேயே தங்கியிருந்து சம்பிரதாயப் படியான சடங்குகளை கடைப் பிடிக்கச் செய்கின்றனர். இக்காலப் பகுதியில் அப்பிள்ளைகள் நற்காரியங்களுக்கு விலக்கப்பட்டவர்களாகவும் வீட்டைவிட்டு பாடசாலைக்கோ பிரத்தியேக கல்வி நிலையங்களுக்கோ செல்ல அனுமதிக்கப்படாதவர்களாகவும் காணப் படுகின்றனர். இதனால் ஒருமாதமளவில் அவர்கள் பெறவேண்டிய கல்வியை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகி விடுகின்றனர். இதனால் இவர்களின் கல்வியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டு விடுகிறது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை காலம் O/L, A/L பரீட்சை காலமெனில் அதற்கு செல்லாது தவிர்ப்பதால் அவர்களடையும் பாதிப்பு சொல்லிலடங்காததாகும்.

இவ்வாறே மாதாந்த மாதவிடாய் காலத்திலும் இவ்வாறான ஒரு துர்பாக்கிய நிலையினை பெண்பிள்ளைகள் அனுபவிக்க வேண்டியிருக்கின்றமை இப்பிரதேச கிராமப்புற பெண்பிள்ளைகள் குடும்பம் சார்ந்து எதிர் நோக்கும் முக்கியமான கல்விப்பிரச்சினையாகும்.

**<u>கடந்தகால யுத்த சூழ்நிலையின் தாக்கம்</u>**

கடந்த நான்காண்டு காலத்துக்கு முன்னர் இப்பகுதிகளில் நிலவிய யுத்த சூழ்நிலையும் குடும்பம் சார்ந்து பிள்ளைகளின் கல்விக்கு பாதகம் செய்வதாய் அமைந்திருந்தது. குடும்பத்திலுள்ள தாய் தந்தை அல்லது உறுப்பினர்களை யுத்த சூழ்நிலையால் பறிகொடுத்த குடும்பங்களில் பயம், பீதி காரணமாகவும் குடும்பத்தின் அவ்வக் குடும்பங்களில் கற்றுக்கொண் டிருக்கும் பிள்ளைகளின் படிப்பை இடை நடுவில் நிறுத்திக்கொண்டனர். மேலும் சில குடும்பப் பிள்ளைகள் சித்த சுவாதீனத்தால் பாதிப்புற்றோராகவும் காணப்பட்டனர். இதனால் பிறரது தயவில், அணைப்பில் அப்பிள்ளைகள் வாழவேண்டியும் சிறுவர்கள் பாராமரிப்பகங்களில் புகலிடம் பெறவேண்டியதுமான தேவையும் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதுவே இப்பிரதேச மாணவர்களின் கல்விப் பிரச்சினையில் குறிப்பிடத்தக்க பிரச்சினையை கடந்த காலத்தில் உண்டு பண்ணியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விக்கான அடிப்படைத் தேவைகளை செய்து கொடுக்காமை

பாடசாலை செல்லும் வயதிலுள்ள பிள்ளைகளுக்கு பெற்றோரால் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றிக் கொடுக்கப்படுவதில்லை. குடும்பத்தின் வறுமையை காரணமாகக் கொள்ளாது பிள்ளைகளின் தேவைகளை பெற்றோர் நிறைவேற்றிக் கொடுப்பதன் மூலமே அவர்களை கல்வியின்பால் ஊக்கப் படுத்தமுடியும். குறைந்தது இருசோடி சீருடைகளும் சப்பாத்துக்களும் காலுறை களும் அவர்களுக்கு வேண்டும். ஒரு சோடி அழுக்கடைந்திருந்தாலோ மழை காலங்களில் மழை, சகதி, சேறு முதலிய வற்றால் நனைந்து சேதமடைந்து அழுக் கடைந்தாலோ மாற்றீடாக மேலுமொவ் வொரு சோடி இருந்தாலேயே அவற்றை அணிந்து மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று கற்க முன்வருவர். அவ் வாறில்லையெனின் குறித்த நாளன்று அவர்களால் பாடசாலைக்கு செல்ல முடி யாமல் போகின்றது.

இதேபோல் மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பி உள்ளிட்ட கற்றல் உபகரணங்கள் இல்லாத போதும் மாண வர்கள் பாடசாலை செல்ல பின்னிற்பர். தவிர வீட்டிலே போதிய வெளிச்சவசதி, இருந்து கற்பதற்கான பொருத்தமான மேசை, கதிரை மற்றும் உபகரணங்கள் முதலியவற்றுடன் கற்கும் போது தாய்/ தந்தையர் அவர்களுக்கு உதவுதல் முதலியவற்றையும் செய்து கொடுக்க முன்வரவேண்டும். அப்போது மாண வர்கள் குடும்பத்தினரால் தாம் கௌர வமாக நடத்தப்படுவதை உணருவதுடன் தமக்கு உரிய கணிப்பும் பாதுகாப்பும் கிடைப்பதாக எண்ணி ஊக்கத்துடன் கற்க முன்வருவர்.

இது இவ்வாறிருக்க ஆடம் பரபொருட்களை வாங்கி கேளிக்கைகளில் ஈடுபடும் இப்பிரதேச பல குடும்பங்களில் மாணவர்களின் தேவைகளை பற்றிய ஊதாசீனப்போக்கே காணப்படுகிறது. இதனால் அக்குடும்பங்கள்சார் மாணவர் களும் கல்வி ரீதியான பாதிப்பை எதிர் கொள்ளும் நிலைமையானது துர்அதிஸ்ட வசமானதாக உள்ளது.

எனவே கல்வியின் பெரும்பயனையும் அதன் நிரந்தர தன்மையையும் அதன் மூலமான நிரந்தர பாதுகாப்பையும் வயோதிப காலத்தில் கல்வி மூலம் கிடைத்திருக்க கூடியதான (உத்தி யோகஸ்தர்களுக்கு) தாபரிப்புக்களையும் கல்வியை பெற்றுக் கொண்டவருக்கு அதனூடாக கிடைக்கும் அந்தஸ்து கௌரவத்தினையும் சமூகப்பெறுமானத் தையும் நன்கு உணர்ந்த சமுதாயம் கல்வியை தமது இளம் சமூகத்துக்கும் வழங்க முன்வரும். இந் நிலை எமது பிரதேசத்தில் போதிய விருத்திகாணாத போதும் அது படிப்படியாக எய்தப்பட்டுக் கொண்டு வருவதற்கு கால்கோளமைத்து வருவது சிறந்த எதிர்காலத்துக்கு வித்திடுவதாகும்.

**வெல்லபதி சரவணன்**
கோயிற்போரதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புப் பிரதேச ஆகமம் சாராத வழிபாட்டு மரபுகள் - ஓர் கண்ணோட்டம்

"ஆரியர் போற்றும் அணிசால் இலங்கையிலே, சீரான குணதிசையைச் சேர்ந்து வளர்புகழும் ஏரார் இயன்ற செந்நெல் இன்சுவைதீங் கன்னலொடு தெங்கிள நீரும் தீம்பலவி தெள்ளமிர்தம் எங்குங் குறையா இயலுடைய நன்னாடு மட்டக்களப்பென்னும் மாநாடு......" என யாழ்நூல் ஆசிரியரால் பாடப்பெற்ற பெருமை கொண்ட மட்டக்களப்புத் தமிழகம் இரண்டு விதமான வழிப்பாட்டு முறையினைக் கொண்டுள்ளது. சிற்ப, ஆகம நெறிக்குட்பட்ட கோயில்கள், விழாக்கள், சடங்குகள் முதலானவற்றைப் பேணுவது ஒரு வகை. அவற்றுக்கு உட்படாது, பேணப்பட்டு வருகின்ற சமய ஒழுக்கலாறுகள் மற்றொரு வகையாகும். அவற்றுள் முதற்குறிப்பிட்டவற்றை 'பெருநெறி' என்றும் பின்னையதை 'சிறுநெறி' என்றும் குறிப்பிடுவர். அந்தச் சிறுநெறியே ஆகமம் சாராத வழிபாடு எனப்படுகின்றது. கிராமத்துப் பாரம்பரியங்களின் குறிகாட்டிகளாக, பாரம்பரியமாக நிலவிவரும் தெய்வங்கள், சடங்குமுறைகள், நம்பிக்கைகள், அவைசார்ந்த கலைகள் என்பவற்றை யதார்த்தமாக எடுத்துக்கூறுவதை 'ஆகமம் சாரத வழிபாடு' எனக்கொள்ளலாம்.

பாமரமக்களால் ஆழமாக உணரப்பட்டு பின்பற்றப்பட்டும் ஒரு தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறைக்கு அளிக்கப்பட்டு வருகின்ற நம்பிக்கைகள் மற்றும் சடங்குகளின் தொகுதியே ஆகமம் சாராத வழிபாடு என ஆர்.இராமநாதன் குறிப்பிடுகின்றார்.

ஆகமமுறை சாராத வழிபாட்டு பாரம்பரியங்கள் முற்றாகச் சிதைவடையாத ஒரு பிரதேசம் என்றால் அது மட்டக்களப்புப் பிரதேசமாகும். இன்றும் புராதன குலக்குழு வணக்க முறைகளும் நிலமானிய அமைப்பின் அடிப்படையாக எழுந்த கிராமிய வணக்க முறைகளும் ஆகம முறைசாராத வழிபாடு என்ற வகைப்பாட்டுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் மட்டக்களப்பு மக்களால் வழிப்படப்படுகின்ற நாட்டார் தெய்வங்களாக மாரியம்மன், பேச்சியம்மன், கண்ணகையம்மன், பத்தினியம்மன், திரௌபதையம்மன், நாச்சியம்மன், வைரவர், ஐயனார், வதனமார், பெரியதம்பிரான், மதுரைவீரன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தவராயன், ஆஞ்சனேயர், வீரபத்திரர் போன்ற தெய்வங்கள் பிரதான தெய்வங்களாகவும் துணைத்தெய்வங்களாகவும் வழிபடப்பட்டு வருகின்றன.

சிறு தெய்வம் என்ற சொல்லின் தோற்றத்தினை நோக்கும் போது இச்சொல் முதன்முதலாக

'சென்று நாம் சிறு தெய்வம் சேரோம் அல்லோம்...."

என்று அப்பர் தேவாரத்தில் பயின்று வருகின்றது. இதற்கு நேர்மாறாக பெருந்தெய்வம் என்ற சொற்றொடர் கி.பி 2ம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட புறநானூறில் வருகின்றது. இரண்டு வேந்தர்களையும் ஒன்றாக கண்ட புறநானூற்றுப் புலவர்

'இருபெரும் தெய்வமும் உடன் நின்றார்....."

என பலராமனையும் திருமாலையும் இரண்டு வேந்தருக்கும் உவமிக்கின்றார். எனவே சமூகத்தின் அடித்தளத்து மக்கள் வழிபடும் கடவுளை சிறுதெய்வங்கள் எனவும் மேல்தளத்து மக்கள் வழிபடும் தெய்வங்களை பெருந்தெய்வம் எனவும் குறிப்பிடும் வழக்கம் அக்காலத்தில் இருந்திருப்பதாக தெரிகின்றது. இந்நிலமைதான் மட்டக்களப்பு ஆகம முறை சாராத வழிபாட்டிலும் காணப் படுகின்றது. அதாவது சாதி, குடிமுறைகள், பூசகர், பூசை, மந்திரம், பங்குகொள்வோர் என்ற வகைப்பாட்டில் மட்டக்களப்பில் ஆகமம் சாராத வழிபாடு சிறுத்தெய்வ வழிபாடு என்ற வகைப்பாட்டில் அடக்கப்படுகின்றன. உண்மையில் சிறு தெய்வங்கள் எனப்படுபவை மிகப்பழைய நம்பிகைகளையும் உணர்வுகளையும் பேணி நிற்பவையாகும்.

இப்பிரதேசத்தில் ஆகம முறை சாராத வழிபாட்டுக்குரிய தெய்வங்களை கிராமிய தெய்வங்கள், கிராம தேவதைகள் என அழைக்கும் வழக்கம் உள்ளது. அதாவது இங்கு வழிப்படப்படுகின்ற தெய்வங்களை ஆரம்பகாலத்தில் கிராமத்தின் எல்லைப்புறங்களிலும் சனநடமாற்றம் அற்ற பிரதேசங்களிலும் ஆலயம் அமைத்து ஆண்டுக்கு ஒருமுறை வழிபட்டனர். இதனால் கிராமத்தை பாதுகாக்கும் நோக்கில் சில தெய்வங்களை கிராமிய தேவதைகள் என அழைக்கும் வழக்கமும் இருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமம் சாராத தெய்வங்களுக்கான ஆலயங்கள் அளவில் சிறியனவாக அல்லது மரநிழல், ஆற்றங்கரை, குளத்தங்கரை,மலையடிவாரம் முதலான இயற்கை சூழலில் அமைந்துள்ளன. இத்தெய்வங்களுக்கு சடங்கு நடத்துபவர் "பூசாரி" என்று அழைக்கப்படுவர். மட்டக்களப்பு பிரதேசத்தில் நிலவுகின்ற ஆகமம் சாராத வழிபாட்டு முறையினை அன்பு நிறைந்தொரு மார்க்கம் பக்தனுக்கும் தெய்வத்துக்கும் இடையில் நேரடி தொடர்புகளை காணும் நெறி என்ற வகையில் முக்கியத்துவம் பெறுவதனை நாம் கண்டு கொள்ளமுடியும்.

ஆகமம் சாராத வழிபாட்டு முறையினை 'திருச்சடங்கு' எனக் கூறுவது மரபாகும். மட்டக்களப்பில் சடங்குகள் என்பவை மந்திரத்துடன் சம்மந்தப்பட்டவை ஆகும். இவை மரபினால் தீர்மானிக்கப்பட்ட நிகழ்வுகள், செயற்பாடுகளின் தொகுதி என்றும் கொள்ளலாம். மட்டக்களப்புப் பிரதேச அம்மன் சடங்குகள் சமூக, பொருளாதார, கலைமரபுகள் ஆகிய தளங்களைச் சார்ந்திருப்பதுடன் மீளச்செய்தல் என்ற சுழற்சியின் அடிப்படையில் அமைந்துள்ளது

இப்பிரதேசத்து மக்கள் சடங்குகள் மீளச்செய்தல் முறையில் மாற்றங்களை ஏற்பதை காட்டிலும் பயம், முன்னோரை அடியொற்றி செல்லுதல்,தங்களை அடையாளப்படுத்துதல், சமூகத்தில் இருந்து அந்நியப்படுத்தப்பட்டு விடுவோம் என்ற அச்சம் முதலியன காரணமாக சடங்குகளை மீண்டும்,மீண்டும் செய்கின்றனர். இப்பிரதேச ஆகமமுறை சாராத வழிப்பாட்டுச் சடங்குகள் பயம் காரணமாகவும் இயற்றப்படுகின்றன. இங்கு வழிப்படப்படுகின்ற தெய்வங்கள் இரட்டைநிலைத்தன் மையுடன் காணப்படுகின்றன. அதில் அமைதியான நிலை, அகோரநிலை என்பன இடம்பெறுகின்றன. தெய்வங்கள் அகோர நிலையில் கட்டுக்கடங்காத ஆவேசத்தையும் கோபத்தையும் வெளிப்படுத்தும் இத்தகைய அகோரநிலை கொண்ட தெய்வங்களை வணங்காமல் புறக்கணித்தல் அத்தெய்வங்களின் கோபத்திற்கு ஆளாகிக் கடுமையான இன்னல்களை சந்திக்க நேரிடும் என்ற பயம் காரணமாக நேர்த்திக் கடன் செய்து பள்ளயம் நிறை வேற்றினால் அகோரம் தனிந்து சாந்தமான நிலைக்கு மாறும் என்ற நம்பிகையின் காரணமாக குளித்தல் சடங்குகள், சக்கரையமுதுச் சடங்குகள், பள்ளயச்சடங்குகள் போன்றவற்றை நிகழ்த்தி வழிபடுவதனை நாம் காணலாம்.

மட்டக்களப்பு பிரதேச ஆகமம் சாராத வழிபாட்டு முறையானது மரபு வழிபட்டதாகவே வந்திருக்கின்றது தந்தைக்குப் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் என்ற அடிப்படையிலும் மாமனுக்குப் பின் மருமகன் என்ற அடிப்படையிலும் செய்யப்படுகின்றன மட்டக்களப்பின் மரபு வழி வழிபாட்டுக்கு ஆதாரமான பத்தாசிகள் கைமாறப்படுவதும்,தெய்வங்கள் உருவேற்றப்பெற்று ஆடுவதும் முன்னோரை அடியொற்றியதாகவே அமைந்துள்ளது.

இப்பிரதேச சமூக அமைப்பில் சில தெய்வங்கள் அவரவர் வாழும் குடியிருப்புக்களுடன் இணைவு பெறுகின்றன. அந்தவகையில் ஒரு சமூகம் ஏற்றுக்கொண்டுள்ள தெய்வத்தை வழிபடாது விட்டால் அச்சமூகத்தினர் அவர்களில் இருந்து தம்மை அந்நியப்படுத்தி விடுவார்கள் என்ற அச்சம் காரணமாகவும் சமூகத்தில் தங்களது கௌரவத்தினை நிலைநாட்டுவதாகவும் மட்டக்களப்பு பிரதேசத்தில் சடங்குகளை மீண்டும் மீண்டும் செய்கின்றனர். மேலும் இச்சடங்குகளை மீண்டும் மீண்டும் செய்வதற்கு நம்பிக்கையும் ஒரு காரணமாக அமைந்துள்ளது முன்னர் நிகழ்ந்த செயற்பாட்டினை மீளவும் செய்யும் போது முன்னர் நிகழ்ந்தது மீண்டும் நிகழும் என்ற நம்பிக்கையும் இப்பிரதேச மக்களுடைய உறுதியாக இருப்பதனை நாம் அறிந்து கொள்ள முடியும்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆகமம் சாராத வழிபாட்டிற்குரிய பூசை விதிமுறைகளையும் அதற்கான மந்திரங்களையும் பாவனைகளையும் தொகுத்துக்கூறும் ஆவணமே "பத்தாசி" எனப்படும் பத்தாசிகள் தமிழ் மொழியில் அமைந்துள்ள மந்திர ஏடுகளாகும் இவ் ஏடுகளில் உள்ள மந்திரங்கள் அகவல் பாக்களினால் ஆனவை இம் மந்திரங்களை திரும்பத்திரும்ப உச்சரிக்கும் போது வலிமை பெறுகின்றன என நம்பப்படுகின்றது.

மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆகமம் சாராத வழிபாட்டு முறையில் பிரதானமாக பின்பற்றப்படும் திருச்சடங்கினுடைய அம்சங்களைப் பார்த்தோமானால் பஞ்சாங்கம் பார்த்தல், ஊர்காவல் பண்ணுதல், கதவு திறத்தல், கும்பம் வைத்தல், ஊர்சுற்றுதல், தெய்வம் ஆடுதல், கலியாணக்கால் வெட்டுதல், கலியாணச் சடங்கு, காத்தான் களுமரம் கட்டல், தவநிலைச் சடங்கு, மடிப்பிச்சை எடுத்தல், பால்குடம் எடுத்தல், வட்டுக்குற்றல், கடல்குளிப்பு, நோர்ப்பு கட்டல், சக்கரையமுது வைத்தல், விநாயகப்பானை எழுந்தருளப் பண்ணுதல், குளிர்த்திபாடல், தீமிதித்தல், கதவடைத்தல் ,எட்டாம் நாள் சடங்கு என்ற வகையில் இடம் பெறுவதனை நாம் கண்டுகொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆகமம் சாராத வழிபாடானது பல்வேறு நோக்கங்களுக்காக நிகழ்த்தப்படுகின்றது நோய்கள் வராதிருப்பதற் காகவும்,காவல் தெய்வமாகவும், இயற்கை,செயற்கை அழிவுகளில் இருந்தும் நோய்கள் துன்பங்களில் இருந்தும் பாதுகாப்புப் பெறுவதாகவும், செல்வம், பிரதேச வளம் வேண்டியும் மேற்கொள்ளப் படுகின்றது. மேலும் இச்சடங்குகளை நிகழ்த்தும் போது மனதுக்கு புத்துணர்ச்சியும், சமூகத்தின் தூய்மையும் சமூக ஒற்றுமையும் கிராமியக் கலைகளினுடைய வளர்ச்சியும் மகிழ்வும் ஏற்படுவதனை மட்டக்களப்புப் பிரதேச ஆகமம் சாராத வழிபாட்டு முறையில் நாம் கண்டு கொள்ள முடியும்.

**இளம் சைவப்புலவர் என். மேனரூபன்.**
பட்டதாரிப்பயிலுனர்,
பிரதேச செயலகம்,
வெல்லாவெளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போரதீவுப்பற்று பிரதேசத்தின் கலைஞர் ஆனைகட்டியவெளி அல்லிக்கந்தையா (சின்னத்தம்பி கந்தையா) வின் கலைப்பணியும் பாராட்டுக்களும்

கலைக்கென தனியான இடத்தினை தக்கவைத்துக் கொண்டிருக்கும் பிரதேசங்களில் மட்டக்களப்பு மாவட்டமும் தனக்கான இடத்தினை இன்று கூட தன்னகத்தே கொண்டு மிளிர்வதை அதன் ஆற்றுகைகளிலும், அவை இன்றும் பேணப்படுகின்ற நிலையினையும் கொண்டு அவதானிக்க கூடியதாக இருப்பதனை அறிந்துகொள்ள முடிகிறது. அவ்வாறான மாவட்டத்தின் கண்ணே அமைந்துள்ள போரதீவுப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராமமான ஆனைகட்டியவெளி கிராமமானது தன்னகத்தே பல கலைஞர்களையும் கொண்டு விளங்கி தன் பெயரினை அனைத்து இடங்களுக்கும் பறைசாற்றி தன் கலைவடிவங்களை இன்றும் பேணிக்கொண்டு வருகின்றது. அவற்றுக்கு ஒரு சான்றாகவே மறைந்தும் இன்றும் பேசப்படுபவராக விளங்குகின்றவரே சின்னத்தம்பி கந்தையா (அல்லிகந்தையா) என்பவர். இவர் ஆனைகட்டியவெளி என்ற கிராமத்தின் ஓர் சிறந்த கலைஞராக விளங்கியிருக்கிறார் என்பதை காணமுடியும்.

அவ்வாறான ஒரு கலைஞரான கந்தையா அண்ணாவியார் 1934ம் ஆண்டு காலப்பகுதியில் மண்டூர் சின்னத்தம்பி, இலட்சுமி தம்பதியினருக்கு மகனாய் அவதரித்து மண்டூர் இராமகிருஸ்ண மிஷன் பாடசாலையில் பயின்று தனது கல்வி தகைமையாக 6ம் தரத்துடன் படிப்பினை நிறுத்தி கொண்டாலும் சிறுவயதில் இருந்தே தமது ஊரில் இடம் பெறுகின்ற கூத்து மற்றும் ஏனைய கலைகளில் ஆர்வமாக காணப்பட்டு அவற்றிலும் ஈடுபாடுடையவராக திகழ்ந்திருக்கிறார் என அறிய முடிகிறது. பின்னர் மாரியம்மா என்பவரை திருமணம் செய்து கொண்டார். அதன்பின்னர் 1964ம் ஆண்டு அரசினால் குடியேற்றப்பட்ட கிராமமாகிய ஆனைகட்டியவெளி கிராமத்தில் குடியேறினார். இங்குதான் இவரது கூத்து முயற்சி தொடங்கியதாகவும் இதில் அண்ணாவியாராகவும் நடிகராகவும் செயற்பட்டதாகவும் அறிய முடிகின்றது. அவர் கூத்து செயற்பாடுகளில் ஈடுபட்ட போது கிடைத்த கௌரவிப்புக்களை மீட்டுப்பாக்கும் போது, அவரின் சேவைகள் பாராட்டுகளை எமது சமூகம் அறியும் போது, எமது கலைபாரம்பரியத்துக்கு உரமூட்டிய எமது மூதாதையரை நாம் அறியலாம் என்பது புலனாகிறது.

கந்தையா அண்ணாவியார் கூத்து முயற்சிக்கு மட்டுமல்ல இவர் ஓர் இந்து மதத்தவராக காணப்பட்டதனால் ஆலயவழிபாட்டுடனான பக்திப் பாடல்கள் பாடுதல், காவடிகள் எடுப்பவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவடிப்பாட்டு பாடல், மத்தளம் அடித்தல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளார். இதன் மூலம் சமய வாழ்விலும் தன்னை அர்ப்பணித்து இருக்கிறார் எனலாம்.

இவருடைய கூத்து முயற்சியை பார்க்கும் போது இவர் பல கூத்துக்களை பயிற்றுவித்துள்ளார் என்பதற்கு மேலாக பல கூத்துக்களில் தான் பெண் பாத்திரமேற்று நடித்திருப்பதை அறிய முடிகின்றது. அவ்வாறாக நோக்கும் போது அல்லி நாடகத்தில் அல்லிக்கும், வள்ளியம்மன் நாடகத்தில் வள்ளிக்கும் என பத்திற்கும் மேற்பட்ட கூத்துக்களில் பெண் பாத்திரமேற்று நடித்திருக்கிறார் எனவும் அறிய முடிகின்றது. அவை மாத்திரமின்றி பலரையும் இக்கூத்து முயற்சியில் ஈடுபடுத்தி இக்கலை தூர்ந்து போகமால் பேணியிருக்கிறார் என அறிய முடிகிறது. அவை மாத்திரமன்றி ஆனைகட்டியவெளி தவிர்ந்த பிரதேசத்தின் ஏனைய இடங்களுக்கும் சென்று கூத்துக் கலையை பயிற்றுவித்திருப்பதனை அறியமுடிகிறது. குறிப்பாக

1. வைகுந்தம் - 13 கொலணி
2. அலங்காரரூபன் - பூச்சிக்கூடு
3. கண்டியரசன் பூசனி - தும்பங்கேணி
4. வனவாசம் - மகிழூர்

என 13 இடங்களுக்கு மேலாக இச் செயற்பாட்டில் ஈடுபட்டதற்கான சான்றுகளை அவரது கூத்து செயற்பாட்டில் ஈடுபட்டவர்கள் மூலமாக அறியகிடைக்கின்றது. இவ்வாறாக தமது ஊர் மட்டுமன்றி ஏனைய இடங்களுக்கும் சென்று "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகமே" என கூத்துக் கலையினை பரப்பி இருப்பதனையும் அறிய கூடியதாக உள்ளது. அவை மாத்திமின்றி பாடசாலைகளிலும் தமது கூத்து முயற்சிகளில் ஈடுபட்டிருந்ததனை அறிய முடிகின்றது. காக்காச்சிவட்டை விஸ்ணு வித்தியாலயத்தில் 2010ம் ஆண்டு "கர்ணன் போர்" எனும் கூத்தினை ஒரு மணித்தியாலத்திற்கு சுருக்கி சுவைபட பாடசாலை மாணவர்களை கொண்டு அரங்கேற்றியிருந்தார்.

அதுமட்டுமன்றி ஆனைகட்டியவெளி பாடசாலையில் 2011ம் ஆண்டு சமூக சீர்திருத்த நாடகமொன்றினை அரங்கேற்றினார். இதனை போட்டிக்காக தயாரித்ததோடு தாளக்கட்டு ஆட்டங்கள் என தமது உத்திகளை பயன்படுத்தி சிறப்பான இடத்தினை பெறும் வகையில் இக்கூத்தினை அப்பாடசாலை மாணவர் களை கொண்டே தயாரித்திருந்தார். அத்துடன் தெருவளி நாடக செயற்பாடு களிலும் ஆனைகட்டியவெளி மாணவர்களை கொண்டு ஆடப்பட்டதாகவும் அறியக் கிடைப்பதால் இது இவரது கூத்து முயற்சியின் வளர்ச்சியாகக் குறிப்பிட முடியும்.

அது மட்டுமன்றி இக்கூத்துக்கான உடைகளையும் தாமாகவே இலகுவான முறையிலே தயாரித்து விநியோகித்து அதனை பேணிப் பாதுகாத்து வைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இதே போன்று பாரம்பரிய கல்வி முறையிலான கல்வியினையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கியதாகவும் அறிய முடிகின்றது. புராண இதிகாச கதைகள், பாடல்களை இளவயதினருக்கு சுவைபட கூறியதுடன், அவைகளை தாளம், போட்டு பாடவும் மனனம் செய்யவும் தூண்டியுள்ளார். அண்ணாவியார் கைக் கொள்ளும் மத்தளஅடி போன்றவற்றையும் ஏனையோருக்கும் பழக்குவதற்கு முயன்றதாகவும் ஓரிடத்தில் கூறியுள்ளார். புராண இதிகாச பாடல்களை கூத்துகளில் பயன்டுத்துவதன் முலம் மக்களை ஓரளவாவது நற்பண்புடையவர்களாக மாற்றுவதற்கு முனைந்ததாகவும் இவரது கருத்து உள்ளது. இதுவும் ஒருவகையில் எமது கலைக்கும் சமூகத்துக்கும் செய்த சேவையாகவும் அண்ணாவியாரின் இச் செயற்பாட்டைக் கூறலாம்.

அவை மாத்திரமன்றி சில கிராமிய வைத்தியத்தினையும் கைக் கொண்டு அவற்றினால் சில நோய்களை தீர்ப்பவராகவும், அத்துடன் பாம்புக்கடிக்கான கைவைத்திய சேவைகளையும் மக்களுக்காக ஆற்றியுள்ளதாக அண்ணாவியாரின் வாழ்க்கை வரலாற்றில் அறிய முடிகிறது. இவ்வாறான உன்னத சேவைகளுக்காக பல இடங்களில் கௌரவிப்புகளும், பாராட்டுக்களும் இவருக்கு கிடைக்கப் பெற்றதாகவும் அறிய முடிகின்றது. எமது கிராமிய கலைகளும் அதனோடு தொடர்புடைய கலைஞர்களும் அருகிச்சென்ற வேளையில் கலைஞர்களையும், கலைகளையும் வளர்க்கும் செயற்பாடாக இவரது செயற்பாடு அமைந்தது என்பதில் ஐயமில்லை. அண்ணாவியாருக்கு கிடைத்த பாராட்டுக்களாக

1970ம் ஆண்டு உதவி அராசாங்க அதிபர் அலுவலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட சிறந்த அண்ணாவியார் தெரிவுப் போட்டியில் முதல் இடமும் பாராட்டுப்பரிசும் பெற்று சிறந்த அண்ணாவியாராக திகழ்ந்துள்ளார். மேலும் இந்து கலாசார அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட கலாசார விழாவிலே மேடை ஏற்றப்பட்ட "கண்டியரசன் பூசணி" நாட்டுகூத்தின் மூலம் சிறந்த அண்ணாவியாராக தெரிவுசெய்யபட்டு முன்னாள் இந்துகலாசார அமைச்சர் மாண்புமிகு செ.இராசதுரை அவர்களினால் பாராட்டு பெற்ற திறமை இவரையே சாரும்.

1998ம் ஆண்டு போரதீவுப்பற்று கலாசார பேரவையினால் பிரதேச கலாசார விழாவில் வாழும் போதே வாழ்த்தப்படும் கலைஞராக கௌரவிக்கப்பட்டதுடன் சிறப்பு மலரான "மருதம்" நூலில் அவரது சேவைகள் பட்டியலிடப்பட்டுள்ளது.அது மாத்திரமன்றி இவரது உன்னத சேவைக்காக இந்து கலாசார அமைச்சினால் கலைஞர்களுக்கான மாதாந்த ஊக்குவிப்பு தொகையாக 5000 ரூபா பெற்றமை இவரது கலை வளர்ச்சிக்காக கிடைத்த பரிசாகவும் கூறலாம்.

மேலும் 2010 காலப்பகுதியில் இவருடைய கலை அனுபவத்தினை வெளிப்படுத்தும் வகையில் மண்டூர் கலை இலக்கிய அவை "அனுபவ பகிர்வு" நிகழ்வு ஒன்றினை ஒழுங்கு செய்து இவருடைய கூத்து அனுபவ விளக்கத்தினை வெளிக்காட்டியதோடு அக்காலப்பகுதியில் கோட்டக்கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பாளரான திரு.மு.விமலநாதன் அவர்களால் அல்லிக்கந்தய்யா அண்ணாவியாருக்கு ஓர் நினைவுப் பரிசிலும் வழங்கியிருந்ததாகவும் கூறப்படுகின்றது. (தினக்குரல்-26.11.2010) இத்துடன் மண்டூர் கலை இலக்கிய அவையால் அண்ணாவியாரின் மத்தளஅடி ஆற்றலை பாராட்டி வெளிப்படுத்தி காட்ட வாய்ப்பளித்து பொன்னாடை போர்த்தி கௌரவிப்பினையும் செய்திருந்ததாக அறிய முடிகின்றது.

இவ்வாறாக பல பாராட்டுக்களையும், கௌரவிப்புக்களையும் பெற்று தனது கலையினையும் சமயத்தினையும் பல இடங்களுக்கும் பறைசாற்றி 2012.01.19 திகதி இறையடி சேர்ந்தார். இவருடைய உன்னத சேவையைப் பாராட்டும் வகையில் அவருடைய "காலம் மறந்த கதைகள்" எனும் அல்லி கந்தய்யா நினைவு அஞ்சலி நிகழ்வு ஆனைகட்டியவெளி பல்தேவை கட்டடத்தில் நிகழ்ந்தேறியதையும் குறிப்பிட முடியும் இதனையும் மண்டூர் கலை இலக்கிய அவையே ஒழுங்கு செய்திருந்ததையும் குறிப்பிடலாம் இவ்வாறாக இருந்தும் எமது கலைக்காக சேவையாற்றிய ஓர் சேவகனான இக்கலை பொக்கிசத்தை நினைத்து பார்த்து மண்வாசனை மிளிரும் எமது உன்னத கலைகளினை பேணி பாதுகாக்க வேண்டியது எமது அனைவரது கடமையுமே

"தண்டாமரையுடன் பிறந்தும் தண்டே நுகரா மண்டூகம்"

இவ்வாறாக எமக்கு முன்னே இவ்வாறான கலைஞர்கள் வாழ்ந்திருந்தும் அவர்களிடமிருந்து கலைகளை பெறாது இருப்பது தாமரையுடன் இருக்கும் தவளைக்கு தமாரையின் அருமை தெரியாததை போன்று நாம் இருக்காமல் எம்முள் இருக்கும் கலைஞர்களைத் தேடி அவர்களின் ஆற்றல்களை அறிந்து எமது இனத்தின் பாரம்பரியத்தை, கலையை நாமே பேண வேண்டியது எமது கடமையாகும் எனலாம்.

எனவே இவர் போன்ற கலைஞர்கள் போரதீவு பிரதேசத்தின் பால் இருந்திருக்கிறார்கள் என்பதனை மீட்டுப் பார்கையில் இப் பிரதேசத்திற்கும், பிரதேச வாழ் மக்களுக்கும் பெருமையுடையதாக காணப்படுகிறது.

திரு.க.சூரியகுமார்
பட்டதாரிப் பயிலுனர்
கலாசாரப்பிரிவு
பிரதேசசெயலகம், வெல்லாவெளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை



## "முதல் இரவு கலைந்தது"

போரதீவுப்பற்றின் வளம்மிக்க கிராமங்களில ஒன்று கோவில்போரதீவு. கல்வி, கலை, விளையாட்டு, வேளாண்மை, வீட்டுத் தோட்டம் என எல்லா வளங்களிலும் உயர்ந்து காணப்படும் ஓர் அழகிய கிராமமாகும். இன்றைய நிலையில் அக்கிராமத்தின் இளைஞர் அணியினர் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்று கிராமத்தின் ஒவ்வோர் வீடும் பொருளாதார வளமிக்க வீடுகளால் காட்சியளிப்பது கண்கூடு. ஒவ்வோர் வீட்டிலும் கல்வியும் பொருளாதாரமும் கலாசார விழுமி யங்களும் மேலோங்கிக் காணப்படும் எங்கள் கோவில்போரதீவுக் கிராமத்து மக்கள் "கண்ணகியம்மனைத்" தங்கள் குலத்தெய்வமாக போற்றி வழிபடுவர். கல்வெட்டுச் சான்றுகளால் உயர்ந்து போற்றப்படும் "ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி" ஆலயமும் "ஸ்ரீ மீனாச்சிக் கட்டு பிள்ளையார்" ஆல்யமும் இக்கிராம மக்களின் வழிபாட்டுத் தலங்களாக அமைந்து சிறப்புற்று விளங்குகின்றன. உழைப்பாலும் கல்வியாலும் உயர வேண்டும் என்ற உந்துதல் கிராமத்தின் முதியோர் முதல் சிறியவர் வரைக் காணப்படும் உணர்வலைகள் பெருமைக் குரியதாகும்.

இக்காலகட்டத்தில் எல்லா வளங்களுடன் மிளிரும் எங்கள் கிராமமக்கள் பல ஆண்டு களுக்கு முந்திய ஒரு காலப் பகுதியில் "கல்வாடி" களைத் தங்கள் சுய தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். மரவள்ளித் தோட்டம், வேளாண்மைச் செய்கை, காட்டுத் தொழில் போன்ற தொழில்களையும் தத்தம் பகுதித் தொழிலாக மேற்கொண்டு வந்தனர். இன்று வாகனங்கள் தரித்து நிற்கும் வீடுகளில் எல்லாம் அன்று சலங்கை மாட்டு வண்டில்களே நிறைந்து காணப்பட்டன.

அன்றைய காலத்தின் கோயில்போரதீவு கிராமம் ஒரு கொடிய காட்சியை பதிவு செய்திருந்தது. பகல் பொழுதில் ஒரு திருமணம் நிறைவேறுகிறது. உறவுகள் எல்லாம் வந்து ஆசிர்வதித்து அன்பளிப் புக்கள் செய்து, மது அருந்தி, விருந்து உண்டு சென்று கொண்டிருக்கிறார்கள். திருமண வீடு கலகலப்பாக மகிழ்ச்சியாகக் களைகட்டி காணப்படுகிறது. அன்றைய திருமணங்கள் இன்றைய திருமணங்கள் போல் இல்லை. இன்று மணமக்கள் திருமண நாளுக்கு முன்பு திருமணம் செய்து விடுவார்கள். பின்னர் ஒரு நல்ல தினத்தில் கலியாணம் மண்டபங்களில் அல்லது ஆலயங்களில் திருமண வைபவம் கோலாகலமாக நடைபெறும். இதனால் மணமக்கள் முதல் இரவை முழுதாக அனுவிக்கமாட்டார்கள். "முதல் இரவு" என்பது உண்மையில் மணமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண நாளன்று இரவு தங்களை இணைத்துக் கொள்வது தான் பூரணமான, உணர்வு பூர்வமான திதியுடன் கூடிய முதல் இரவாகும்.

இவை இவ்வாறிருக்க முதல் இரவை முதன்முதலாக எதிர் கொள்ளப்போகும் எங்கள் மணமக்களில் திருமண வீட்டுக்கு வருவோம். களைக்கட்டியிருந்த திருமணவீடு உறவுகள் மெல்ல மெல்ல தத்தம் வீடுகளுக்கு கலைந்து செல்கிறார்கள். ஆதவனும் தன் ஒளிக்கீற்றுகளை சந்திரனுக்கு ஒப்படைத்து மேற்குத் திசையில் மறைந்து செல்கின்றான். மணவீட்டில் கலகலப்பு கிடுகிடுப்பு ஒலி பெருக்கியின் பாட்டு ஒசையெல்லாம் அடங்கிவிட்டது. மணவறையில் இருக்கும் மணமக்கள் இருவரும் ஆளையாள ஓரக் கண்ணால் பார்ப்பதும் புன்முறுவல் பூப்பதும் இருவருடைய கால்கைகள் முட்டிக் கொள்ளும் போது முதலிரவு உணர்வால் கசிந்து உருகுவதும் "இருள் இன்னும் முழுதாக சூழமால் இருகின்றது" என்று தங்களுக்குள் இன்பமாக, இறுக்கமாக எண்ணிக் கொள்வதுமாக ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நேரம் கனிந்து வருகிறது. மணமக்கள் இருவரும் அழைக்கப்படுகிறார்கள். "கலத்தில் போடும்" சம்பிரதாய நிகழ்வு நிறைவுற்று இருவரும் தமது பஞ்சணைக்கு செல்கின்றனர். பால், பழம் பரிமாற்றம் முடித்து மணமகள் மணமகனுக்கு வெற்றிலை மடித்து ஊட்ட பதிலுக்கு மணமகன் மணமகளுக்கு வெற்றிலை மடித்து ஊட்டிவிட்டு மணமகளை கொஞ்சி வரும் இன்ப வெள்ளத்தால் மணமகன் தன் கரத்தால் அவள் இடையை தாவி அணைத்து தன் மடியில் சாய்க்கவும் சரியாக இருந்தது.

ஐயகோ! என்ன கொடுமை இது எங்கு இருந்து அந்த பிரமை வந்தது, அது எப்படி வந்தது, என்ன நடந்தது, ஏன் நடந்தது, யாரால் நடந்தது என்னவோ எல்லாம் என் இதயமே பல கேள்விகளைக் கேட்கிறது. மாசுபடாத, கறைபடியாத என்றுமே கற்பனை பண்ணிக் கூடப் பார்க்காத, புத்தம் புதிய முதல் இரவின் அர்த்த மென்ன? அந்தோ பரிதாபம், அநாகரீகம், அநியாயம், சூனிய ஏவுதல் பிசாசு மணமக்களை உள்வாங்கி கொண்டது. அவர்களை ஊமைகளாக்கி விட்டது. மணக்கோலம் பிய்த்தெறியப் படுகிறது. மணவறை அலங்கோலம் ஆக்கப்படுகிறது. பஞ்சணை வெஞ்சமர் களமாகிற்று. மணமக்கள் இருவரும் கட்டிலில் முழங்காலில் நின்றவாறு ஆளையாள் பார்த்தவண்ணம் பற்களை நறுநறு என கடித்த வண்ணம் வாயை திறந்து பேச முடியாதவாறு இம்,இம்,இம்... என்ற பேரிரைச்சல் மணவீட்டை அதிர வைக்கிறது.

பொற்றோர்கள், உறவுகள் எல்லாம் ஒடி வந்து " என்ன கடவுளே இது", "உள்ளே என்ன நடக்கிறதப்பா", "கதவை உடையுங்கோ" என்றவாறு பெண்களின் அலறலே அதிகரிக்கிறது. மணமகளின் அறைக்கதவை உடைகிறார்கள்.

"முதலிரவுக்காகப் பூட்டப்பட்ட கதவு
முடிவுரை இல்லாமல்
உடைக்கப்பட்டது"

பரிதாபம் பார்க்க முடியவில்லை. மணக் கோலத்தில் இருந்த மணமக்கள் இருவரும் பிணக்கோலமாகக் காட்சயளிக்கிறார்கள். புத்தாடைகளெல்லாம் பிய்த்தெறியப்பட்டு அலங்காரமெல்லாம் அலங்கோலமாக்கப்பட்டு தலைவிரி கோலத்துடன் மணமக்கள் இருவரும் வெளியே கொண்டு வரப்படுகின்றார்கள். மண்டபத்துள் பாய் விரித்து, அதன் மேல் வெள்ளைச்சீலை விரித்து, இருவரையும் இருக்கச்செய்து, இருவருக்கும் பக்கத்துணையாக பெண்ணும், ஆணும் இருவர் மணமக்களைப் பிடித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணம பாதுகாப்பு அளிக்கப்பட்டது. மணமக்கள் இருவரும் சற்று அமைதியாக இருப்பார்கள். பின்னர் தங்களைப் பிடித்துக் கொண்டிருப்பவர்களையும் உதறியடித்து பற்களைக் கடித்து தலையைச் சுற்றிச் சுற்றி ஆடுவார்கள். அமைதியாய் இருப்பதை விட அவர்கள் பிரிதாபகரமாக ஆடுகின்ற நேரமே கூடுதலாயிற்று. உணவு உண்பதில்லை, நீர் அருந்துவதில்லை, நித்திரையில்லை, நீட்டிப்படுப்பதில்லை, அமைதியாய் இருக்க முடியவில்லை, அவர்கள் ஆட்டமும், பற்களை நெறுநெறனக் கடிப்பதும், வாய் திறந்து பேசமுடியாதவாறு இம், இம், இம் என்ற சாவோலமும் பெற்றோர்களையும், உறவுகளையும் கிட்டத்தட்ட அவர்களின் அவலத்துடன் இணைத்துக் கொண்டது. மணமகளின் வீட்டிலும், மணமகனின் வீட்டிலும் உறக்கப் பேய் குடிக் கொண்டது. செத்து இருந்தால் கூட நிம்மதியைத் தேடிக் கொள்ளலாம். ஆனால் சித்திரவதையை நேரடியாகக் காண்பது போன்ற ஒரு கொடிய சம்பவமாகக் கிராம மக்கள் மனங்களிலெல்லாம் பதிவாகி விட்டது. மங்கல அமங்கல நிகழ்வுகளில் கோயில்போரதீவு மக்கள் எல்லாக் கசப்பு உணர்வுகளையும் தள்ளி வைத்து விட்டு ஓரணி திரள்வார்கள். இது அக்கிராம மக்களின் பண்பு.

அவ்வாறே இந்த புதுமணத் தம்பதிகளின் பரிதாப நிகழ்வுக்கு என்ன காரணமென, கிராமத்துப் பெரியோர்களும், இளைஞர் களும் பல பக்கங்களிலும் ஆய்வுகளைச் செய்தனர். சிலர் எங்கெல்லாம் மந்திரவா திகள் இருக்கின்றார்களோ அவர்களை யெல்லாம் அழைத்து வந்து, மணமக் களின் ஆட்டத்தை நிறுத்துவதற்குப் பலவித முயற்சிகளையும் செய்தனர். எதுவும் பலிக்கவில்லை. மணமக்களின் பெற்றோர் நேராத தெய்வங்கள் இல்லை. அவர்களின் குலதெய்வமான "கண்ண கியம்மனுக்கு" உயிருக்கு உயிர் கொண்டு வருவோம் தாயே எங்கள் பிள்ளைகளின் இந்தக் கொடுமையைத் தீர்த்து விடு என்று நேர்த்தி வைத்தார்கள்.

நாட்கள் நகர்ந்து கொண்டிருக்கிறது. மாம்பழங்கள் போன்ற மாப்பிள்ளையும் பெண்ணும் எல்லாச் சக்திகளையும் இழந்து மெலிந்து பேய்க்கோலமாகக் காட்சியளிக்கிறார்கள். ஒரு நாள் இரவு அவ்வூர் கண்ணகியம்மன் கோயில் குருக்கள் அவர்களின் வாசற்படியில் "குருக்கள் ஐயா, குருக்கள் ஐயா" என்ற குரல் கேட்கிறது. "யாரது" குருக்கள் ஐயா வருகிறார். குருக்கள் ஐயாவின் வீட்டு விறாந்தையில் பாய் போட்டு வந்தவர்கள் நால்வரும் அமருகிறார்கள். குருக்கள் ஐயாவும் மணமக்களின் பரிதாப நிலையை ஒரு தடவை சென்று பார்வையிட்டு திருநீறு போட்டு தண்ணீர் ஓதிக் கொடுத்து அம்மாளுக்கு நேர்த்தி வையுங்கள் என்று சொல்லி விட்டு வந்தவர். அவருக்கும் அந்த இளசுகள் மேல் அக்கறையுடன் அம்மனை வேண்டிக் கொண்டவர்.

"ஐயா உங்கட மச்சான் பழுகாமத்தில கலியாணம் கட்டியிருப்பவர் நல்லா மைபோட்டுப் பார்ப்பார் தானே அவரக் கொண்டு ஒருக்கா மைபோட்டுப் பார்க்கலாமெண்டு நான் நினைக்கிறன்." என்று மணமகளின் தந்தை குருக்கள் ஐயாவிடம் கூறினார்.

அவன் செய்யக் கூடியவன்தான். அவன் ஊருக்குள்ள இன்னொரு மந்திரவாதி யோடு சேர்ந்து பொய் வேலை ஒன்றைப் பாத்துப் போட்டான் அதால அவன் எண்ட கண்ணுல முளிக்கமாட்டான். அவனுட்ட அந்தத் துறையில் நல்ல ஆற்றல் உண்டு. எதுக்கும் அவனுக்குச் சில ஆலோசனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும், கட்டுப்பாடுகளும் நான் சொல்ல வேணும். அவனிட்ட இந்தக் காரியத்தைச் செய்வயாடா எண்டு நான் உத்தரவாதம் கேட்க வேணும் நீங்க நாளைக்கு காலையில பழுகாமத்துக்குப் போய் ஆள என்னிட்டக் கூட்டிற்று வாங்கோ. இவ்வாறு குருக்கள் ஐயா சொல்லி முடிக்க வந்தவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியுடன் விடைபெற்றுச் சென்று அடுத்த நாள் காலையில் பழுகாமம் சென்று அந்த மந்திரவாதியை குருக்கள் ஐயாவிடம் கூட்டிக் கொண்டு விட்டார்கள். தனது மச்சானுக்குப் பயந்து வந்த மந்திரவாதியை குருக்கள் ஐயா அழைத்து "இஞ்சபாரு அந்தப் புள்ளைகளுடைய பரிதாபம் பொறுக்க ஏலாமல் தான் கடைசியா உன்ர வித்தையைப் பார்ப்பமென்று கூப்பிட்டி ருக்கன் தட்டி விட்டான் வேலைகள் செய்யக் கூடாது ஒழுங்கா பயபக்தியோட மைய ஓட்டி இந்தப் புள்ளையளுக்கு என்ன நடந்திருக்கு எண்டு பார்க்க வேணும். ஒழுங்கா செய்வாயா? என்ர மரியாதையைக் காப்பாத்துவாயா? என்றவாறு குருக்கள் ஐயா சொல்லி முடிக்க "என்ன மச்சான் நீங்க அந்தப் புள்ளையள்ற ஆட்டத்தை நான் ராவைக்கு நிப்பாட்டி தாறன். உங்கட மரியாதையையும் என்ர கௌரவத்தையும் நான் காப்பாற்றுவன். மை ஓட்டுறதுக்கு இரவைக்கு எல்லா ஒழுங்கையும் செய்யுங்கோ" என்று குருக்கள் ஐயாவின் மைத்துணர் மந்திரவாதி திடமாக எடுத்துக் கூறினார்.

குருக்கள் ஐயாவின் கட்டளைப்படி அன்றிரவு மையோட்டிப் பார்ப்பதற்கு மணமக்களின் வீட்டில் தடபுடலான எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்றது. கிராமத்துப் பெரியார்களும் ஒன்று திரண்டனர். சுவாமி அறைக்குள் மடைவைத்து எல்லா ஏற்பாடுகளையும் குருக்கள் ஐயாவின் மைத்துனர் நிறைவு செய்து மை பார்ப் பதற்காக மணமகளின் தாயை அழைத்தார். அவரை நீராட்டி திருநீறு சந்தணம் பூசி அவருக்கு தீபம் காட்டி மந்திரித்து வெற்றி லையில் ஒரு துளி மையை விட்டு குத்து விளக்கின் ஒளி மையில் படக்கூடியவாறு மணமகளின் தாயிடம் மைதாங்கிய வெற்றிலை கொடுக்கப்பட்டது. மணமகளின் தாயார் தனது இஷ்ட தெய்வத்தை வணங்கி விளக்கொளியை வெற்றிலை மைக்குள் உட்படுத்தி நீண்ட நேரம் கண்ணீரும் மூக்கும் சிந்த உற்றுப் பார்த்த வண்ணமே இருந்தார். அவரது மூக்குச் சிந்தல் கண்ணீர் துளிகளை பக்குவமாக ஒருவர் பக்கத்திலிருந்து எவ்வித இடையூ றுமின்றி துடைத்த வண்ணம் இருந்தார். வெளியில் இருப்பவர்கள் யாரும் சத்தம் போடக் கூடாது என்ற கட்டளை பிறப்பிக் கப்பட்டது. வீட்டில் மயான அமைதி நிலவியது. ஊரும் அதே விதம்.

மந்திரவாதி: என்ன தெரிகிறது உங்களுக்கு மையினுள்ளே?

பார்ப்பவர்: வானம் தெரிகிறது நட்சத்திரங்கள் தெரிகிறது.

மந்திரவாதி: இங்கே இருக்கின்ற மடைகள் தெரிகிறதா?

பார்ப்பவர்: ஆம் எல்லா மடைகளும் தெரிகிறது

மந்திரவாதி: சரி பிள்ளையாரை மனதில் தியானித்து அவரின் மடையில் வந்து அமருமாறு மண்டாடுங்கள்

பார்ப்பவர்: பிள்ளையாரப்பா தனது மடையில் வந்துவடிவாக அமர்ந்து இருக்கிறார்.

மந்திரவாதி:(மணி அடித்து தீபம் காட்டிப் பிள்ளையார் மடைக்கு பூசை செய்து) அம்மா பிள்ளையாரை நன்றாக வணங்குங்கள். அவரிடம் சொல்லுங்கள் இந்தப் பிள்ளைகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில்லி சூனியத்தை கண்டறிய "ஆஞ்ச நேயரை" அதாவது அனுமனை அழை யுங்கள் பிள்ளையாரப்பா என்று இறுக் கமாக வணங்குங்கள்.

பார்ப்பவர்: அனுமான் கிளம்பி பாய்ந்து வருகிறார்

மந்திரவாதி: அனுமனைக் கண்டு பயப்படக் கூடாது அவரைப் பக்தி பூர்வமாக வணங்கி அவரின் மடையில் வந்து அமரச் சொல்லுங்கள்.

பார்ப்பவர்: அனுமன் பிள்ளையாரை வணங்கி தனது மடையில் வந்து அமர்கின்றார். பிள்ளையாருடன் பேசுகிறார்.

மந்திரவாதி: ஆ நல்லது (மணி அடித்து தீபம் காட்டி அனுமார் மடைக்கு பூசை பண்ணல்) பிள்ளையாருக்கு நன்றி கூறி வணங்குங்கள். எங்கள் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற வினையைக் காட்டித் தருமாறும் இந்தச் செய்வினையைச் செய்தவனைக் காட்டுமாறும் அனுமனை மண்டாட்டம் செய்யுங்கள்.

பார்ப்பவர்: அனுமன் பாய்ந்து போகிறார். நம்மட கட்டக்காடு வயற்பக்கமாகப் போகிறார். ஒரு நாவல் மரம் நிக்கிறது. அதில் அனுமன் ஏறுகிறார். நாவல் மரத்தின் ஒரு அருங்கந்தில் நூலால் கட்டப்பட்டு ஒரு தகடு ஆடிக் கொண்டி ருக்கிறது.

மந்திரவாதி: (மீண்டும் அனுமனின் மடைக்குப் பூசை செய்து) "அம்மா எல்லாம் நல்ல காரியம், இந்தச் செய்வினையைச் செய்தவனைக் காட்டச் சொல்லுங்கள். செய்விச்சவனையும் காட்டச் சொல்லுங்கள்.

பார்ப்பவர்: செய்வினை செய்தவன் வாறான். அனுமன் பிடிச்சி இழுத்து வாறார்.

மந்திரவாதி: அவன மதிச்சயளா? அவன உங்களுக்குத் தெரியுமா?

பார்ப்பவர்: இல்ல இவனத் தெரியாது. மஞ்சள் வேட்டி கட்டி மேல மஞ்சள் வாலா மணி போட்டிருக்கான். இடுப்பில பட்டி கட்டியிருக்கான். நல்ல தாடி வச்சிருக்கான், செய்விச்சவன் பக்கத்துல நிக்கான். அவன் நம்மடயவன் தான்.

மந்திரவாதி: அம்மா தாயே அனுமனை வணங்கி அந்தச் சூனியக் காரனோட பெயர எழுதிக் காட்டச் சொல்லுங்க

பார்ப்பவர்: சரி அனுமன் மண்ணுல வாலால எழுதுறார். "களுமாத்தயா" என்று சொல்லியவாறு மணமகளின் தாய் (மைபார்த்தவர்) மயங்கி விழுந்து விட்டார். பின்னர் குருக்கள் ஐயாவின் மைத்துனர் மந்திரவாதி அந்தத் தாய்க்கு தண்ணி எறிந்து அவவை எழுப்பி நீராட்டினார். பின்னர் மடைக்கெல்லாம் பூசை செய்து முடித்து விட்டு எல்லோரும் வெளியே வந்தனர். முற்றிலும் விசயம் முடியும் வரை மையில் காட்டிய எந்த விடயத்தையும் வெளியில் யாருக்கும் சொல்லக் கூடாது என்று முடிவெடுக்கப்பட்டது. எல்லா ஆயத்தங்களுடனும் கட்டாக்காடு வயல் அருகில் நிற்கும் நாவல் மரத்தடிக்கு சென்று அவ்விடத்தில் மடை வைத்து பூசை நடைபெறுகிறது. இரவென்றும் பாராது அவ்விடத்திற்கு ஊரே திரண்டு வந்து நாவல் மரத்தை வளைத்து நின்று அங்கு நடக்கும் சங்கதிகளை மக்கள் மனப்பூர்வமாக பார்த்தனர். மந்திரவாதி பூசை செய்கின்றார். எல்லோரும் நாவல் மரத்தைப் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தார்கள். யாருடைய கண் களுக்கும் அங்கே தொங்கவிடப்பட்டிருந்த சூனியத்தகடு தென்படவில்லை. குருக்கள் ஐயாவின் மைத்துனராகிய மந்திர வாதியவர்கள் "வாலைத் தெய்வம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்தவர் ஆவார். மணி தீபத்தை கீழே வைத்துவிட்டு ஒரு சிரிப்பொன்று சிரித்தார். கட்டிய வேட்டியை இழுத்துக் கொடுக்குக் கட்டினார். சீட்டி அடித்தார். கைகளைத் தட்டினார். நின்ற நிலையில் கிளம்பிப் பாய்ந்து நாவல் மரக் கிளையில் தொங்கவிடப்பட்ட தகட்டினைப் பிய்த் தெடுத்தார். கீழே தொப்பென்று விழுந்தார். பின்னர் அவரைச் சூழநின்ற ஏனைய மந்திரவாதிகள் அவரைத் தூக்கி தண்ணீர் எறிந்து சுய நினைவுக்குக் கொண்டு வந்தனர். "எங்கே தகடு என்று கேட்டனர்" குருக்கள் ஐயாவின் மைத்துனர் வலது கையை விரித்தார். அங்கே தகடு இருந்தது. தகட்டுக்கு மந்திரம் செபித்து அதன் சக்தியை இழக்கச் செய்தார். பின்னர் அந்த இடத்திலேயே அந்தச் சூனியத் தகடு விரித்துப் பார்க்கப்பட்டது. உள்ளே மான் விளாசம் இருந்தது. மணமக்களின் பெயர்கள் பொறிக்கப் பட்டிருந்தது. மணமக்களின் அடி மண் இருந்தது. பின்னர் அதே இடத்தில் அந்த சூனியத் தடயங்கள் எல்லாம் எரிக்கப் பட்டது. சூனியக்காரன் கஞமாத்தயாவின் சூனிய மந்திரமெல்லாம் இனிமேல் பலிக்காதவாறு படுகளம் போடப்பட்டது. எல்லோரும் அவ்விடம் விட்டு வெளியேறி மணமக்களின் வீடு நோக்கி வந்தபோது வீட்டிலிருந்த உறவுகளொல்லாம் ஆண் களும், பெண்களுமாக எதிர்கொண்டு ஓடி வந்து குருக்கள் ஐயாவின் காலில் விழுந்தும் அவரின் மைத்துணரின் காலில் விழுந்தும் வணங்கித் தமது ஆதங்கத்தை வெளியிட்டனர்.

"பிள்ளைகளின் ஆட்டம் நின்று விட்டது ஐயா!

உங்களுக்கு கோடி புண்ணியம் கிடைக்கும் ஐயா" என்ற வாக்கியங்கள் ஆனந்தக் கண்ணீர் பொங்க வானைப் பிளந்தது. கலைந்த முதலிரவு மீண்டும் கூடுகிறது.

முற்றும்

*"கலைச்சுடர்"*

**கோயிலூர் தணிகா**


*கவிஞர் தணிகாசலம்*

*திருப்பழுகாமம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மது பாவனையின் உண்மைத்தார்ப்பரியமும் சுவாரஸ்யமான தகவல்களும்



தனக்கும் தன்னைச் சார்ந்தோருக்கும் அத்துடன் சமூகத்திற்கும் பாதிப்பை உண்டாக்கும் மதுபாவனையில் உண்மையில் நடப்பது என்ன என்பது பற்றி அறிந்து கொள்ள வேண்டியது இன்றைய சமூகத்தின் தேவைப்பாடுகளில் ஒன்றாக உள்ளது.

மது ஓர் உணவுப்பொருள் அல்ல. அது சில பதார்த்தங்கள் சிதைந்து கெடுவதால் உண்டாகும் ஒரு பானப்பொருளாகும். அதாவது கோதுமை, சோளம், ஒட்ஸ், பார்லி, அரிசி, திராட்சை, கள், பதனி முதலியவற்றிலிருந்து தயாரிக்கப்படு கின்றது. திராட்சை ரசத்தைப் புளிக்க வைக்கும் ஈஸ்ட் சத்து சத்து பழத்திலும் தானியத்திலும் உள்ள சக்கரையையும் மதுவாக மாற்றிவிடுகிறது. வையின், விஸ்கி, பிராந்தி, ஜின், பீர், கள் இவை எல்லவற்றிலும் மது இருகின்றது.

மதுவானது உடலையும் மனத்தையும் சீரழித்துக் குலைக்கும் ஒரு விஷம். இதன் விஷ வேகத்திற்கு மத்திய நரம்பு மண்டலம் தான் முதல் பலியாகும். குடிகாரன் போதை மிஞ்சித் தள்ளாடித் தடுமாறுவதற்கு வெகு நேரத்துக்கு முன்னரே அவன் மூளை ஒழுங்கு தவறி விடும். ஞாபக சக்தியும் சிந்தனை ஆற்றலும் சிதைந்து ஆற்றலும் சிதைந்து போகும். வேகமாக செய்ய வேண்டியதை வேக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகச் செய்ய இயலாது செய்யும் காரியத்தை ஒழுங்காகவும் செய்ய முடியாது. மதுவைச் சிறிதளவு அருந்தினாலும் போதும் தசைகளும் நரம்புகளும் மந்தப் பட்டுப் போய் விடும். இதனால் தான் மோட்டார் கார் ஓட்டுகிற வர்களும் ஆகாய விமானம் ஓட்டுகிற வர்களும் கொஞ்சம்கூட மது அருந்தக் கூடாது என்கின்றனர். ஒரு போத்தல் அருந்தினால் போதும் தூரத்தைச் சரியாகக் கணிக்க இயலாது. நரம்பு தசைகளும் மந்தப்பட்டு போகும். புத்தி நிதானம் கெட்டு போகும்.

குடித்திருப்பவர்களிடம் ஓர் அலட்சியத் தன்மை காணப்படுவது இயல்பாகும். இதற்கு உண்மையான காரணம் மதுவானது அவர்களுடைய ஆற்ற லையும் திறமைகளையும் குறைக்கின்ற அதே சமயம் அவர்களின் உணர்வுக்கு ஓர் நம்பிக்கையை பிறப்பிக்கின்றது. இதன் காரண மாக சிறிது நேரம் சுறுசுறுப்பும் உற்சாகமும் வந்தது போல் அவர்கள் உணர்கின்றனர். இதனால் வேலைகளை நன்றாக செம்மையாக செய்ய முடியும் என்று எண்ணப் பண்ணி விடுகிறதே ஆகும்.

மது அருந்தி இருந்தால் இரத்தம் நிறைய ஓடி அவர்களின் சரு மத்தில் ஒரு செம்மைப் படர்வதை காணமுடிகின்றது. இதற்கான காரணம் சருமத்திக்கு அருகிலுள்ள இரத்த குழாய்களை இந்த மதுவானது விரி வடைய செய்கிறது. இதனால் உடம்பில் ஒரு கதகதப்பு உண்டாகிறது. அதாவது நிறைய இரத்தம் சருமத்துக்குள் ஓடி வந்து குளிர்த்து போவதனால் உடம்பில் உஷ்ணநிலை இறங்கி விடுகின்றமை யால் இவ்வாறு நிகழ்கிறது.

மதுவின் தன்மையானது ஒருவருக்கு புத்தி நிதானத்தை குலைத்து மன ஒழுக்கத்தையும் உள்ளடக்கத்தையும் சீரழித்து விடுகிறது. கெட்ட செயல்களை செய்கின்றவர்கள் அவற்றை செய்வதற்கு முன்னர் மது அருந்துகிறார்கள். அருந்திய மது அவர்களை நல்லது, கெட்டது தெரியாமல் செயற்பட செய்கி ன்றது. இவ் மது பழக்கத்தால் வாலிபர் கள் பாவ செயல்களில் இறக்குகின் றார்கள்.தங்களை அடக்கி ஆண்டு நன் னெறியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து நீண்ட காலம் வாழ விரும்புபவர்கள் போதை ஊட்டும் எல்லா பானவகை களையும் தவிர்க்க வேண்டும்.

மதுபானத்தால் இரப்பை, கல்லீரல், இரத்தக் குழாய்கள், சிறுநீரகம், நரம்பு மண்டலம் இவற்றுக்கெல்லாம் கேடு உண்டாகிறது நோயை எதிர்க்கும் ஆற்றலும் குறைந்து போகின்றது முக்கியமாக நிமோனியா, ஷயரோகம் போன்ற நுரையீரல் வியாதிகளை எதிர்க்கும் ஆற்றலை குறைத்துவிடுகின்றது மதுவை தவிர்ப்பவர்கள் வாழ்க்கை காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் மதுப்பழக்கம் உள்ள வர்களது வாழ்க்கை காலம் கிடையாது என்பது ஆய்வு களில் இருந்து தெரிய வந்துள்ளது. இதனால் தான் மது உற்பத்தி செய்து விற் பவர்கள் கூட "மது உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் என்பதனை குறிப்பிட்டுள்ளனர் எனலாம்.

பொதுவாக ஒருவர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாயிருந்தால் நாளடைவில் அவருக்கு புத்திக்கூர்மை மழுங்கிவிடு வதும், ஞாபகசக்தி குறைந்துவிடுவது போன்று வீண் வாக்குவாதங்களில் ஈடுபட நேரிடும், பிறரை அடிப்பது. காயப்படுத்து வது மனச்சோர்வு,மற்றும் பதட்டம், சந்தேகம்,பொறாமை போன்ற உளத்தாக்கங்களும் உண்டாகும். தூக்கமின்மை பயங்கரமான கனவுகள் தோன்றுதல், இளவயதினிலே வயதான தோற்றத்தை பெறுகின்றனர்.

அதுமட்டுமின்றி வாய்,தொண்டை மற்றும் வயிற்றில் புற்றுநோய் உண்டாகின்றது. இதயம் வீங்குதல், தசைகள்பலவீனம் அடைதல்.இரத்த ஓட்டம் குறைதல், நோய்த்தடுப்பு தன்மை குறைதல். இருமல் மற்றும் சளியால் அவதிப்படுதல், கல்லீரல் வீக்கமடைதல், வயிற்று எரிச்சல்.வயிற்றுப் புண், பசி குறைந்து ஜீரண சக்தி பாதிப்படைதல், மஞ்சள் காமாலை ஏற்படுதல், முழுமையாக கல்லீரல் செயற்பட முடியாத நிலை, அடிவயிற்றில் வலியுடன் கூடிய வீக்கம் செயற்படும் விதத்தில் பாதிப்புக்கள் தோன்றல்.

மதுபானம் சக்கரை நோய்ஏற்படுவதற்கு ஒரு காரணமாக அமைதல். ஆண் களுக்கு ஆண்மைத்தன்மை குறைந்து உடலளவில் ஆர்வம் குறைதல், கை, கால் நடுக்கம் ஏற்படுத்துதல் மற்றும் மரத்துப் போதல், எரிச்சல் உண்டா குதல், உடல் தசைகளில் கலம் குறைதல், இரத்த சோகை மற்றும் இரத்தம் உறையாமை ஏற்படுதல், மூட்டுவலி, நடைதடுமாற்றம் ஏற்படுவதால் விபத்துக்கள் மூலம் எலும்பு முறிவு எற்படுதல். சரியாக உணவு உட்கொள்ளாமையால் ஜீரணம் தடைப்படுவதாலும் சத்து பற்றாக்குறை ஏற்படுதல் இது போன்ற பல நோய் களால் பாதிப்படைவதற்கு இந்த மது பாவனை பழக்கங்கள் காரணமாக அமைகிறது.

இதில் வேடிக்கை என்னவென்றால் இப்படியான சில பிரச்சனைகளுக்கு உண்மையான அடிப்படை காரணம் எது என விளங்கிக் கொள்ளமால் நாம் அதை கூட்ட முனைகின்றமை தவிர அதை சரி செய்வதற்கு நினைப்பதில்லை அதாவது ஒருவருக்கு சக்கரை நோய் அவரது குடிப்பழக்கத்தாலோ அல்லது வேறு ஒரு காரணத் தாலோ ஏற்பட்டுவிட்டால் அதற்காக அவர் சிகிச்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கும் அதே நேரம் தனக்கு ஏற்பட்டு இருக்கும் நோயை எண்ணி மனம் வருந்தி அவ்வேதனையைப் போக்க மேலும் மது அருந்துகின்றனர் இதனால் நோயின் தாக்கம் கூடுவதுடன் வேதனைகளும் கூடுகின்றது எனலாம்.

பொதுவாக சமூகத்தின் மத்தியில் நிலவிவரும் ஒரு கருத்து மனவேதனையைப் போக்கும் ஒரு மருந்தாக மதுவைப் பாவிப்பது. ஆனால் உண்மை அதுவல்ல மனவேதனைகளை உண்டாகும் பல காரியங்களுக்கு அடிப்படை காரணமாக அமைவது மது பழக்கங்களாக இருக்கும் இதனை உணர்ந்து கொள்ள அவர்களால் முடிவதில்லை. சாதாரணமாக ஒரு மனிதன் மனவேதனைகளை சந்திப்பது தமது குடும்பதிலும் சமூகத்திலும் ஆகும். இங்கு அவன் சந்திக்கின்ற பிரச்சினைகள் அதற்கு காரணமாக அமையும் அதேவேளை அப்பிரச்சினைகளை ஆராயும் போது அவற்றுக்கு முக்கிய காரணியாக அமைவது மதுவாகும்.

மதுப்பழக்கத்திற்கு அடிமையானவர்களின் குடும்பங்களில் உறவினர்களிடையே இயல்பாக இருந்து வந்த அன்பும் ஆறுதல் கூறும் பண்பும் மெல்ல மெல்ல குறைவடைந்து கொண்டு செல்லும் இதனை அவர்களால் உணரமுடியும் ஆனால் அவர்கள் அதற்கான காரணத்தை முயற்சிப்பதை விடுத்து அத னையும் ஒரு பிரச்சனைக் குரிய விடயமாக எடுத்து அடிக்கடி வாக்குவாதங்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதே நமது சமூகத் தில் காணமுடிகிறது.

அதாவது பொதுவாக குடும்பங்களில் கணவன் மனைவியை எடுத்து நோக்கினோமானால் கணவன் குடிபழக்கத்திற்கு அடிமையாகும் போது அதனை மனைவியர் விரும்புவதில்லை. அதற்காக அவர்களைக் கண்டிக்க இயலாத நிலை தோன்றுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் கணவன்மார் விடுகின்ற ஏனைய சிறுதவறுகள் மனைவியர் மத்தியில் பெரிது படுத்தப்படும் தன்மை காணப்படும். இவ்வாறான சில பிரச்சினைகள் அடிக்கடி தோன்றி மறையும் இதற்காக மனவேதனைப்பட்டு மேலும் குடிக்கின்றனர். இவ்வாறான செயற்பாட்டினால் இருவருக்கும் இடையில் வாக்குவாதங்கள், காயங்கள், மனைவியின் நடத்தை மேல் சந்தேகப்படுவது இதன் காரணமாக மனைவியை விட்டு பிரிந்து செல்லல், விவாகரத்து செய்தல் ஒரு சிலர் இன்னுமொரு படி மேலே சென்று தற்கொலை முயற்சி செய்கின்றனர். இப்பிரச்சனைகளுக்கு மூலகாரணமாக அமைவது மதுபாவனைக்கு அடிமையாதல் என்றால் யாரும் நம்புவதில்லை ஆனால் உண்மை அதுதான்.

பொதுவாக மனைவியர் கணவர்களின் மதுபாவனையை எதிர்க்கின்றனர் அல்லது தடுக்க முயல்கின்றார்களானால் அது அவர்களின் சுயநலம் அல்ல முற்றிலும் தன்கணவனின் உடல் நலனில் உள்ள அக்கறை, குடும்பத்தின் பொருளாதார நிலைமையைப் பேணுவதற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களின் பிள்ளைகளின் சிறந்த எதிர்காலத்துக்குமாகும். இதனை பெரும்பான்மையான கணவன்மார் புரிந்து கொள்ளாமல் தங்களின் சந்தோசத்திற்கு மனைவியர் தடையாக உள்ளனர் என்ற தவறான எண்ணம் கொள்கின்றனர். இதற்கு காரணம் அந்த மது என்றே சொல்லத் தோன்றுகின்றது ஏனெனில் மதுவின் இயல்புகளில் ஒன்று புத்திக்கூர்மையை மழுங்கடித்து சிந்திக்கும் ஆற்றலையும் குறைப்பதாகும். எனவே இவற்றையெல்லாம் சற்று சிந்தித்து செயற்படுவது ஆரோக்கியமான குடும்பத்திற்கு சிறந்ததாகும்.

அடுத்தாக ஒரு குடும்பத்தில் குழந்தைகளின் மனநிலையை எடுத்து நோக்கினால் பொதுவாக அவர்களுக்கு அன்புத்தேவை, அடிப்படைத்தேவை (உணவு, உடை, உறையுள்), காப்புத் தேவை, கணிப்புத்தேவை ஆகிய தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய கடமைப்பாடு பெற்றோர்களிடமே தங்கியுள்ளது. ஆனால் இங்கு நடப்பது என்ன குடும்பத்தில் தோன்றும் பொருளாதாரச் சிக்கலினால் குழந்தைகள் படிக்க முடியாத நிலை மற்றும் பாதியிலே பள்ளிப்படிப்பை விட்டு விடுதல் சில பிள்ளைகள் வீட்டை விட்டு விடுதல் எல்லாவற்றிக்கும் மேலாக தனது தந்தையை முன்னோடியாக எடுத்து செயற்பட முடியாத நிலை தோன்றி விடுகிறது.

பொதுவாக எமது சமூகத்தை எடுத்தோமானால் உயர் வர்க் கத்தினர்களின் குடும்பங்களில் (high class family) உள்ள பிள்ளைகளிடையே மேற்கூறப்பிட்ட தேவைகள் இயல்பாகவே பூர்த்தி செய்யப்படுகின்றன. அதுபோன்று இடைவர்க் கத்தினர்களின் குடும்பங்களில் (middle class family) கணிசமான அளவு பூர்த்தி செய்யப்படுவதுடன் தாழ் வர்க்கத்தினர்களின் குடும்பங்களில் (low class family) பெரும்பான்மையான அளவு பூர்த்தி செய்யப்படுவதில்லை என்றே சொல்லலாம் ஏனெனில் குடும்பத்தில் உள்ள பொருளாதாரச் சிக்கல்கள், குடும்பத்தினரின் பழக்க வழக்கங்கள், பெற்றோரின் மனநிலை, சமூகத் தொடர்புகள் போன்றன காரணமாக உள்ளது என்பதனை அறிவீர்கள் ஆனால் இவைகள் குடும்பங்களிடையே வேறுபடுவதற்கும் வருமான வர்க்க ஏற்றத் தாழ்வுகள் உண்டாவதற்கு மிக முக்கிய காரணிகளில் ஒன்றாக மது அமைந்திருப்பதனை அறிவீர்களா?

அண்மித்த ஆய்வொன்றின் அடிப்படையில் நோக்கினால் கூடுதலான வருமானத்தினைப் பெறும் குடும்பத்தினர் மதுவுக்காக செலவு செய்யும் வீதம் மிகக் குறைவாகவும் குறைவான வருமானம் ஈட்டுவோர் மிக அதிகமாக இடைமட்டத்தினர் குறிப்பிட்ட ஓரளவிலே செலவு செய்கின்றனராம். இதனால் குடும்பத்தின் பொருளாதார நிலையே பாதிப்படைகின்றது. குறிப்பாக கீழ்மட்டத்தினரிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமிக்கும் பழக்கம் மிகக் குறைவாகவே காணப்படுகிறதுடன் குடும்பங்களில் சில அத்தியாவசியத் தேவைகள் கூட பூர்த்தி செய்ய முடியாமல் திண்டாடும் நிலை ஏற்படுகின்றது. மேலும் சிலர் போதையில் ஆடம்பரத்திற்காக தேவையற்ற செலவுகளைச் செய்தல், பொருட்கள் மற்றும் பணத்தினை இழத்தல், சரிவர வேலை செய்யாமல் விடுவதால் வருமானம் குறைதல் இவ்வாறான நிலையை சரி செய்வதற்காக அதிக வட்டியில் கடன் தொல்லையால் பெரும் கஷ்டங்களை அனுபவித்தல் சிலர் மனவிரக்தியடைந்து மேலும் போதைக்கு அடிமையாதல் இறுதியில் தற்கொலைக்கு முயற்சிகின்றனர்.

மதுவினால் வேலைத்தளத்தில் ஏற்ப்படும் பொதுவான பிரச்சினைகளை பார்த்தோமானால் மது அருந்துவதனால் அடிக்கடி வேலை செய்யாமல் ஓய்வு எடுக்கின்றனர். தனது வேலையில் கவனக்குறைவு, வேலையின் அளவு மற்றும் தரம் குறைதல், சக ஊழியர்களிடன் வாக்குவாதம் அதிகரித்தல், வேலை செய்யும் இடத்தில் தகாத வார்த்தைப் பிரயோகம், ஒரு சிலர் போதையில் துஸ்பிரயோகங்களுக்கு முயற்சித்தல், வேலை செய்யும் இடத்தில் தகாத தனக்கும் பிறருக்கும் விபத்து ஏற்படுத்துதல், வேலை செல்லாதிருத்தல், இவ்வாறான செயற்பாடுகளால் தொழிலை இழத்தல் மற்றும் வேலையின்மை இது போன்ற பல பிரச்சினைகளுக்கு மதுபாவனையே காரணமாக அமைந்து விடுகிறது.

மதுபாவனையால் சமூதாயத்திற்கு ஏற்படுகின்ற மேலும் சில பொதுவான பிரச்சினைகளை பார்த்தோமானால் ஊரில் அடிக்கடி சண்டை சச்சரவுகள் ஏற்படல், தற்கொலை மற்றும் இளவயதில் மரணம் திருட்டு, கொலை போன்றவை அதிகரித்தல் கலாச்சாரசீர்கேடுகள் அதிகமாக குடிப்பதே பழக்கமாக்கி விட்டநிலை முன்னேற்றத்துக்காக கொடுக்கப்படும் வாய்ப்புக்களை சரிவர உபயோகிக்காமல் இருத்தல், குடியால் ஏற்படும் மருத்துவ பாதிப்புக்களால் அரசுக்கு பணவிரையம் ஏற்படல், குடிபோதையில் வாகனம் ஓட்டுவதால் விபத்துக்கள் ஏற்படுதல் "தற்போதைய கணக்கெடுப்பின் படி 50க்கு மேற்பட்டவர்கள் குடிபோதையில் வண்டி ஓட்டுவதால் ஏற்பட்டவை என உறுதி செய்யப்பட்டுள்ளன" மேலும் போதையில் பாதுகாப்பற்ற உடல் உறவு கொள்வதால் பால்வினை நோய்கள் மற்றும் HIV தொற்றுகள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகரித்தல் இவ்வாறான சமுதாயத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கும் தடையாக அமைகின்றது என்றால் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பல பிரச்சனைகளைக் கொண்டுள்ள இந்த குடிப்பழக்கத்தை நிறுத்துவதற்கான சில வழிகள் இதற்காக வேண்டி ஏதும் மருந்து மாத்திரைகள் எடுக்க வேண்டியதில்லை அதற்கு ஈடாக மிக எளிமையான சில வழிமுறைகள் உள்ளன. அதாவது இந்தக் கெட்ட பழக்கத்தை நிறுத்த முக்கியமாக இருக்க வேண்டியது இதனை விட்டு விட வேண்டும் என்கின்ற திடமான சங்கற்பம். கடவுளை வேண்டினால் அவர் மனோதிடம் தருவார். அதனால் குடிக்க வேண்டும் என்ற நப்பாசையை அடக்கி ஆண்டு விடலாம்.


பொதுவாக செல்வதானால் நாம் உண்ணுகின்ற நாம் உண்ணுகின்ற உணவிற்கும் குடிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று அறியப் பட்டுள்ளது. குடிப்பழக்கத்தை விட்டுவிட விரும்புவோர் மாமிசத்தையும் மசாலா கலந்த உணவு வகைகளையும் தவிர்க்க வேண்டும். புகையிலை உபயோகிக்கவே கூடாது. ஏனெனில் அதனால் மதுபான இச்சை அதிகமாகிறது. பழங்களை நிறைய சாப்பிட வேண்டும். சுத்தமான தண்ணீர் நிறைய பருக வேண்டும். காப்பி, தேனீர் கூடாது தினமும், வெந்நீர் ஸ்நானம் செய்ய வேண்டும்.வெந்நீரில் குளித்து முடிந்ததும் உடம்பு முழுவதும் நன்றாக நனையக் குளிர்ந்த தண்ணீரை கொட்டி உடனே உடம்பை வேகமாகத் துடைத்து விடவேண்டும். கூடுதலான அளவுக்கு திறந்த வெளியில் இருக்க வேண்டும். வியர்வை தாராளமாக வரும் வண்ணம் தேகப்பயிற்சி தினந்தோறும் புரிவது மிக அவசியமாகும்.வீட்டில் மதுபான வகைகள் ஒன்றும் இருக்கக்கூடாது. அவை விற்கும் இடத்திற்கும் செல்லக் கூடாது கொடிய இப்பழக்கத்தை விட்டுவிட வேண்டும் என்று உண்மையிலே விரும்புவோர் இச்செயற்பாட்டை தொடர்ந்து கடைப்பிடித்தால் வெற்றி பெறுவது நிச்சயம்.

**செல்வி.சுபாநந்தினி**
பட்டதாரிப்பயிலுனர்
பிரதேச செயலகம்
வெல்லாவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு முறையும் தாயாகவில்லை



பல்லாயிரம் கனவுகளுடன்

சில்வண்டெனப் பறந்து திரிந்த பெண்

கல்லாகச் சமைக்கப்பட்டு

பாலியல் சந்தையில்

சதை வியாபாரியாக்கப்பட்டாள்

எமது நாட்டில் - பல

அவசியச் சேவைகள் தடைகளுடன்

அவ்வப்போது வேலை செய்ய

இவள் மட்டும்

இருபத்து நான்கு மணிநேரச் சேவையானாள்

இவள் மனமோ, வயிறோ நிரம்பியது குறைவு

இவளால் மனமும், வயிறும் நிரம்பியவர்கள் அதிகம்

எனினும் இவள்

பலமுறை கர்ப்பம் தரித்தாலும்

ஒருமுறையும் தாயாகவில்லை

இவளை,

உயிரே, வாழ்வே, அழகே என

கொண்டாடிய போதெல்லாம்

துண்டாடினார்கள்

தான்,

தூர்ந்து போகும் போதெல்லாம்

தன் தொழிலுக்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளிர் விட்டதாய்
பகட்டுச்சாயம் பூசிக் கொண்டாள்
இவளால்,
இவள் உறவுகள் இருந்தார்கள்
இவள் இறந்த இருந்தாள்
மூலதனச் சதை சுருங்கியதும்
தொழிலும் சுருங்கி
காலமும் இவளைக் கற்பழித்தது.
பலரும் தேடியவளின் வாழ்க்கை
கண்களை மூடிக் கொண்டது
இவள்,
வாழ்ந்தபோது நல்லவள் என்று
காவியம் பாடியவர்கள்
வீழ்ந்த போது
பாவி எனப் பரிகசிப்பதோ?
இப்போது இவளின்
கல்லறை கறையான்களின் வாழிடம்
இவள்,
வாழ்ந்த போதும் சரி,
வீழ்ந்த போதும் சரி,
விப்சாரியாகவே ஆக்கப்பட்டாள்,
நெஞ்சோர நினைவுகளுடன் ......

த.ரமேஸ்,
வன்னிநகர்,
திருப்பழுகாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "முன்னிலையில் பேசுதல் அல்லது கவிதை என் ஆயுதம்"

நான்
வெட்டிப் பேசுதற்குக்
கற்றுக் கொள்ளும் வரைக்கும்
நீ
என்னைக்
குதறிக் கொண்டேயிருந்தாய் ...

ஏகத்தாளம் மிக்கவனே
எனது
கருங்கற்களை
ஊமக்கொட்டைகள்
என நினைத்து
காலால் அடித்துக்
காயம் பட்டவனே ......

தன்மையாய்ப் பேசி
தயவு காட்டியவனையே ,
புன்மையாய் எண்ணிய,
புல்லறிவாளனே!

முன்னிலையில் பேசும்
மூர்க்கத்தனத்துடன்
என்னிலையை மாற்றியுள்ளேன் - நீ
எதிர் கொண்டு வா,

அருமையாய்ப் பேசி,
அன்பு காட்டினால்,
எருமை மாடு என,
எடுத்தெறிந்து பேசுகிறாய்.
இருமை இழக்கவும்
இயமனுடன் சேர்க்கவும்
பெருமைகள் அத்தனையும்
பேயாய்ப் பறக்கவும்
பாட்டுத் திறத்தாலே
பதறடிக்க வைத்திடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டம் எடுப்பாய்
ஒளித்திருந்து துடிப்பாய்
சேட்டை துறப்பாய் - இந்த
சேரனையே மறப்பாய்
நாட்டைக் கடந்து சென்று
நாசமாய் போவாய்
வீட்டை நினைத்து
விழித்துத் துயில் மறந்து
மோட்டைப் பார்த்தபடி
மோனத்தில் கிடப்பாய்

அறம் செய்ய விரும்பி
ஆறுவது சினம் என்று
உரம் கொண்டு வாழ்ந்தேன்
உரசிப் பார்க்கிறாயா?

அறம் பாடியே உன்
ஆவி கருக்கும்
திறம் கொண்ட என்னிடமா
திரில் காட்ட நினைக்கின்றாய்
உரம் கொண்ட வாளியையும்
உலகம் சூழ் ஆழியையும்
மறம் கொண்டு தாக்கும்
மரணத்தை உவந்தளிக்கும்
வரம் கொண்ட வார்த்தைகளை - நீ
வரவேற்கத் தயாராகு.....

சிரம் கவிந்து போயும்
சினம் கரைந்து போயும்
சுரமின்றித் தவிக்கும்
சூனியத்துள் கிடப்பவனே!

தரமின்றித் தூசிக்கும் - உன்
தைரியத்தைக் கிழித்தெறிவேன்
கவிதை என் ஆயுதத்தால்
கனவுலகை வென்றெடுப்பேன்....

தணிகா - சேரலாதன்
திருப்பழுகாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளும் வாழ்வும்

உலகம் நிறைந்த மாற்றங்கள்
பலதாய் இனிதாய் எங்கும் நிறைகின்றது
ஏன் இந்த மாற்றம்?
புரியாமலும், தெரியமாலும், சில மாணிடம்
இவ்வுலகம் வேகமாய் சுழல்கின்றது.
அதன் சுழற்சியில்,
ஒரு வீழ்ச்சி பெறுகின்றது உலகம்
எதிலும் கடினம் தெரிகிறது – ஆனால்
அதிலும் மனிதம் படிக்கின்றது...
ஒவ்வொரு தேவையும்
உலக நியதியில் சங்கமிக்க
மனிதன் தேடும் ஒரு பொருள்
அவனை ஆழ்கின்றது.' ஆட்டுகின்றது

பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை
இது பொதுமறை!
பொருளின் விருத்தி மனிதனுக்கு தேவை!
அருளின் விருத்தி மனிதனுக்கு தேவை!
எங்கு நோக்கினும் வறுமை
எதுவுமில்லாத வெறுமை.
இதை நேர்படுத்த பொருள் தேவை
நேர் வழிப்பட்ட பொருள் கூர்மையானது.
பாவ வழிப்பட்ட பொருள் பாதகமானது – ஆனாலும்
எதற்கும் ஆதாரம் பொருளாதாரம் தான்!
அதுவின்றி எதுவும் இல்லை
இதுவே உலக வழக்கு

உழைப்பின் பயனால்
ஒரு பொருள் தேடுவோம்
விளையும் பயிர் போல் உயிரினங்கள் களைவோம்
நம்மையாட்டும் சோம்பல் தனத்தை
நாளைய உலகம் நமக்காய் விடியலிலே
பூக்கட்டும் விடியலிலே பூக்கட்டும் - நம்
உள்ளங்கையில் பொருள் நிறையட்டும்
நம் உள்ளம் எனும் நம்பிகையில்
அருள் காக்கட்டும்

**சி.அமலினி**
பட்டதாரி பயிலுநர்
பிரதேச செயலகம்
போரதீவுப்பற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரகசிய நெருப்பு..

உல்லு எருழுது
நெல்மணிகள்
தானியங்கள்
தாவரங்கள் - தரணியிலே
பூத்துக் குலுங்கும்
அறுவடைக் காலம் வந்தால்
வயல்வெளி எங்கும்
ஆலயத் திருவிழாதான் ..

அடுப்பிலே உலை
ஏந்திடு பெண்ணே..
அரை நொடியில்
நான் வாறேன் என்று
மனிசனார் வலையுடன்
சென்றால்
வந்நல் ஓடைகளில்
சுங்கான், பனையான்
குறட்டையென
பல்லின மீனினங்கள்
வந்நல் குழம்பு வைத்தால்
முழுப் பானைச் சோறும் முற்றுப் பெறும்..

பால் தயிர் மோர் அலைமோதும்
முற்றத்திலே வைக்கோல்புரி
அடைமழை காலத்திலும்
அகம் மலரும்
பொன்னிறச் செம்மணிகள்
பார்த்தாலே
பட்டினியும் பறந்தோடும் ...

சேனை மேடெல்லாம்
இலை குழை கறிகளும்
தூக்கொண்ணாச் சுமையாய்
சுரக்காய், பூசணிக்காய்
குமுட்டி குறிஞ்சா இலைகளும்
பிணி துரத்தும்
ஏழைகளின் - அரண்
காவலன்கள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடு போட்டுக் களைப்பில்
களத்தில் படுக்கையிலே
அப்பக்காரியின் சுவை வருகை
வயிற்றைச் சாந்திப்படுத்தும்..

அறுவடைக் காலம்
என்றாலே
குருவிகளின் கூட்டினிலும்
குருணமணி..
இவையெல்லாம் இப்போ
புரட்டிப் பார்க்கும்
புராதனக் கதைகளாகின..

அல்லைகள் தோறும்
நீந்தி வரும்
அறுவடை இயந்திரங்களும்
வற்றாக் குளங்களையும்
ஓடைகளையும்
மூடிவரும் லோடர்களும்
ஏழைகளின்
நெஞ்சையே சுட்டெரித்து
நெருப்பு விளக்கு ஏற்றுகின்றன...

அண்டா மண் பானைகளில்
பிடியரிசி போட்ட காலம்
கனவுலகாய் மாற
அரை மாதம் முடியும் முன்பே
இராச் சோறு மட்டுமாயிற்று...

பையிலே செம்மணிகள்
கணப்பொழுது ஆகமுன்னே
களத்திலே காசு
உதறிக் கட்டிய ஆடையுடன்
போடியார் வீட்டில்
பொண்டாட்டிக்குக்
கொண்டாட்டம்
அடகு வைத்த நகைகளெல்லாம்
அலங்கார ஊர்வலமாம்..

அன்றாடம் அடுப்பில்
நெருப்பெரியும் வீடெல்லாம்
சேனையும் பிட்டுப் பானையும்
போலாயிற்று........

பே. உதயன்
பாலையடிவட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமியப் பாடல்

ஆண்: ஓடையிலே நீந்தி விளையாடும் வெள்ளை அன்னம் – அவள்
ஆடைதனைத் திருடிச் செல்ல வேண்டும் போன்ற எண்ணம்

பெண்: ஓடைவிட்டு ஒதுக்குப்புறம் போங்க மச்சான் நீங்க – இப்போ
ஜாடை கண்ணால் காட்டி என்னை மயக்க வேணாம் போங்க

ஆண்: தென்னந் தோப்புக்குள்ள நாம ரெண்டு பேரும் போவம்
தன்னந் தனியாக நாம ஜாலியாக வாழ்வம்

பெண்: மாங்குயில்கள் கண்டு கூவும் மற்றோர்களும் கண்டால்?
வம்புக்குள்ள மாட்டிக் கொள்வம் வழியை விடு மச்சான்

ஆண்: பஞ்ச வர்ணக்கிளியை காத்து அஞ்சி நாளாக் கிடந்தன்
நெஞ்சம் குளிர முத்தம் தாடி கிட்ட வாடி

பெண்: பிஞ்சி போக வச்சிடுவார் சின்ன அண்ணன் வந்தா
பித்தலாட்டம் போடாமலே திரும்பிப் போங்க மச்சான்

ஆண்: நேசம் உன்மேல் வச்சதால நிம்மதியும் இழந்தன்
ஆசைதீரப் பேசிடுவோம் ஆத்தங்கரை வாடி

பெண்: மாலை பட்டுப் போகுதிப்போ வழியை விட்டுத் தாங்க
சேலை கட்டப்போறேன் நாளும் திரும்பி கிட்டுப் போங்க

ஆண்: உள்ளத்திலே கோயில் கட்டி உன்ன வச்சிக் கொள்வன்
ஒத்தருமே இங்க இல்லை ஒதுக்குப் பக்கம் போவம்

பெண்: பித்துப் பிடித்த நீயும் செத்துப் போகப் பேறா
சத்தமிட்டு வாறார் எங்க சின்ன அண்ணன் பாரு........

இவள் தனது காதலுக்குத் தடையாக இருந்த பெற்றோர்களைவிட்டு "சிவலிங்கத்தை" சிக்கெனப் பிடித்தவாறு அழுவது போன்று ........

கல்லான கடவுளே – என்
காதல் நிறைவேறினா
வெள்ளாடு கொண்டு உந்தன் பதிவருவேன் – அவரை
வேண்டியே உன்னிடத்தில் தவம் கிடப்பேன்

(கல்லான கடவுளே)

அம்மா அப்பா சம்மதிக்க வைத்துவிடு – நான்
ஆசைப் பட்ட அத்தானை அடைவதற்கு
நம்பையவள் காதலனை அடைந்தது போல்
ராமனுடன் சீதையன்று இணைந்தது போல்

(கல்லான கடவுளே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லோதான் உன்மனது கரையலையோ- உன்
காதிருந்தும் உந்தனுக்கு கேட்கல்லையே
பெண்மனது துடிப்பதும் பார்க்கல்லையே
பெண்ணென்றால் பேயுமிரங்கும் நீ இரங்கலையே
(கல்லான கடவுளே)

கல்லுமோ கரைந்து விடும் என் சோகம் கண்டு – என்
காதலுக்குத் தடைக்கல்லாய் இருக்கலாமோ?
சொல்லுக்கு நீயென்றால் ஆணை கொடு
தொல்லைகளைக் களைந்து என்னை வாழவிடு
(கல்லான கடவுளே)

சிட்டாய்ப் பறந்தாளே!...........
கட்டைக்கைச் சட்டையைப் போட்டுகிட்டொருத்தி
மட்டக்களப்பு வந்தாள் – அவள்
வட்டமிடுங் கண்ணால் கிட்டவரும்படி
சட்டெனச் சைகை காட்டி நின்றாள்
–கட்டைக்கை

அத்தை மகளுக்கு முத்திரை பதிக்க நான்
பத்து மாதம் காத்திருந்தேன் – வாற
சித்திரை மாதத்தில ஊருக்கு வெத்தில
வைத்திட நாள் பார்திருக்கன்
–கட்டைக்கை

வித்தைகள் அவளுக்குக் கற்றுக் கொடுத்திட
நித்திரையுமிளந்தேன் – பசும்
புற்றரையில் அவள் நித்திரை கொண்ட பின்
நெற்றியில் முத்தமிட்டிட
–கட்டைக்கை

சிட்டுக் குருவியைக் கட்டி அணைத்திட
வட்டமிட்டப் பார்த்தேன் – அவள்
கிட்டநான் போனதும் எட்ட நடந்தவள்
சிட்டாய் பறந்தாளே
–கட்டைக்கை

இக்கரை இருந்து நான் அக்கரைக்குப் போயி
சக்கரை உண்டது போல் – வெறும்
மககுத் தனமாக மாட்டித் துடிக்கிறேன்
மற்றவர்கள் கண்டார்களோ!.....

கூழாவடியான் (வினாயகம்)
நெல்லிக்காடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் போதே வாழ்த்தப்படுவோர்



**முழுப்பெயர் :** தவசிப்பிள்ளை – விவேகானந்தம் (ஓய்வு நிலை அதிபர்)

**முகவரி :** வெல்லாவெளி

**பிறந்த திகதி :** 1953.01.14


**கௌரவிக்கப்படும் துறை :** பல்துறைக் கலைஞன்

**அனுபவம் :** தனது பாடசாலைக் காலத்திலேயே நாடகம், பேச்சு, எழுத்து, கவிதை, கட்டுரை, கவியரங்கு, விளையாட்டு எனப் பலதுறைகளிலும் தன்னை ஈடுபடுத்தி பல சாதனைகளை படைத்த இவர் இத்துறைகளில் இன்று வரை தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றார். பிரதேச மட்ட சஞ்சிகைகளில் க்விதை, கட்டுரை எழுதிய இவர் எமது கலாசாரப் பேரவையின் நீண்டகால உறுப்பினராக இருந்து இப்பிரதேச கலை வளர்ச்சிக்கு அயராது உழைத்து வருகின்றார். சமூகசேவையிலும் தன்னை இணைத்துக் கொண்ட இவர் கிராமோதைய சபை, சர்வோதய சிரமதான சமித்தி, இளம் விவசாயிகள் கழகம், இந்து சமய அபிவிருத்திக் கழகம், போன்ற அமைப்புக்களில் முக்கிய பதவிகளை வகித்தள்ளார். இவரின் சிறந்த கல்வி சேவையினை கண்ணுற்ற கல்வி அமைச்சு 2011ம் ஆண்டு "குரு பிரபா பிரதீபா" எனும் ஜனாதிபதி விருதினை இவருக்கு பெற்றுக் கொடுத்திருந்தது. இவற்றுக் கெல்லாம் மேலாக தான் கடமையாற்றிய பாடசாலையினால் வெளியிடப்படும் "விழுது" சஞ்சிகையின் மூலகர்த்தாவும் இவரேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் போதே வாழ்த்தப்படுவோர்



**முழுப்பெயர் :** கணபதிப்பிள்ளை – பாலசுந்தரம்

**முகவரி :** வன்னிநகர், திருப்பழுகாமம்

**பிறந்த திகதி :** 1946.11.02

**கௌரவிக்கப்படும் துறை :** அண்ணாவியார்

**அனுபவம் :** 45 வருடங்கள் நல்லதம்பி அண்ணாவியாரைக் குருவாகக் கொண்டு இத்துறையில் நல்ல அனுபவத்தினைப் பெற்ற இவர் சத்தியசீலன் நாடகம், கர்ணண் போர், வள்ளி தினைப்புனம், சாம நாடகம் எனப் பல்வேறு புகழ் பூத்த கலைகளுக்கு அண்ணாவியராகக் கடமையாற்றிய இவர் இன்றுவரை அண்ணாவியராகக் கடமையாற்றி வருகின்றார். இவரது குடும்பமே அண்ணாவியார் குடும்பம் என அழைக்கப்படுகின்றது. இவர், இவரது இரு தம்பிமார் என அனைவருமே அண்ணாவிமார்களாவர். இவர் கூத்து நாடகப் பயிற்றுவிப்பாளராக இன்று வரை தன்னை நிலை நிறுத்திக் கொண்டிருக்கும் கலைச்சுடர் தணிகா அவர்களின் கலை ஆக்கங்களுக்கு அண்ணாவியாராக கடமையாற்றி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு கௌரவிப்பு



முழுப்பெயர் : சண்முகநாதன் - கோபிதராஜ்

முகவரி : காந்திபுரம், தும்பங்கேணி

பிறந்த திகதி : 1992.09.24

மிக இளவயதில் இறைமுகம் எனும் இறுவட்டினை ஐந்து பாடல்களுடன் தனிமுயற்சியினால் தனது சொந்தக் குரலில் பாடி வெளியிட்டதற்காகவும் இதனூடாக இப்பிரதேசத்திற்கு பெருமை சேர்த்ததற்காகவும் இவருக்கு இச்சிறப்பு கௌரவிப்பு வழங்கப்படுகின்றது. இளமையிலேயே தனது தந்தையை நாட்டில் ஏற்பட்ட அசாதாரணமான சூழ்நிலையால் பறி கொடுத்த இவர் தனது தாயாரின் அயராத முயற்சி காரணமாக தனது தமையனாருடன் பழுகாமம் விபுலானந்த சிறுவர் இல்லத்தில் சேர்க்கப்பட்டு இல்லப் பராமரிப்பில் தங்கியிருந்து தனது கல்வியைத் தொடர்கின்றார். தற்போதைய நிலையில் க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்று வரும் இவர் இம்முறை க.பொ.த உயர்தர பரீட்சையில் தோற்றவுள்ளார் என்பதுடன் தான் வெளியிட்ட இறுவட்டின் ஊடாக தனக்குக் கிடைக்கப் பெற்ற உற்சாகமான வரவேற்புகளாலும், பாராட்டுக்களாலும் உந்தப்பட்ட இவர் இன்னும் பலரை இணைத்து இன்னுமோர் இறுவட்டினை தனது பரீட்சையின் பின்னர் வெளியிடுவதற்கான முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா போட்டி முடிவுகள் 2011

கட்டுரை: (கனிஷ்ட பிரிவு)

01. செல்வி: த.தவேனிதா மட்/காக்காச்சிவட்டை விஷ்னு வித்தி
02. செல்வி: க.பிரதீபா மட்/மண்டூர் ம.வி
03. செல்வி: இ.றொசானா மட்/பெரியபோரதீவு பாரதி வித்தி

கவிதை ஆக்கம்: (கனிஷ்ட பிரிவு)

01. செல்வி: பி.மனோதினி மட்/ முனைத்தீவு சக்தி ம.வி
02. செல்வி: தி.கீர்த்திகா மட்/பெரியபோரதீவு பாரதி வித்தி
03. செல்வி: த.றோகினி மட்/ முனைத்தீவு சக்தி ம.வி

கவிதை பாடும் போட்டி (கனிஷ்ட பிரிவு)

01. செல்வி: த.றோகினி மட்/ முனைத்தீவு சக்தி ம.வி
02. செல்வி: இ.புவிதா மட்/காக்காச்சிவட்டை விஷ்னு வித்தி
03. செல்வன்: ஜெ.இந்துஜன் மட்/ முனைத்தீவு சக்தி ம.வி

சிறுவர் கதை ஆக்கம் (கனிஷ்ட பிரிவு)

01. செல்வன்: ஜெ.இந்துஜன் மட்/ முனைத்தீவு சக்தி ம.வி
02. செல்வன்: த.ஜேந்தன் மட்/ முனைத்தீவு சக்தி ம.வி
03. செல்வன்: தி.மோகன்றாஜ் மட்/ பழுகாமம் கண்டுமணி ம.வி

கவிதை ஆக்கம் (சிரேஷ்ட பிரிவு)

01. செல்வி: ச.சர்மிளா மட்/ பழுகாமம் கண்டுமணி ம.வி
02. செல்வி: ர.வனஜா மட்/பெரியபோரதீவு பாரதி வித்தி
03. செல்வி: ப.றோஜாமலர் மட்/ பெரியபோரதீவு பாரதி வித்தி

பாடலாக்கம் (திறந்த பிரிவு )

01. திரு.ச.கணேசமூர்த்தி 19/1, விநாயகர் வீதி, கோயில்போரதீவு தெற்கு.

02. திரு.இ.கிருஷ்ணராஜன் வன்னிநகர், திருப்பழுகாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டார் கலை கற்றல்

01. திரு.இ.கோபாலபிள்ளை, பிரதான வீதி, தேற்றாத்தீவு

சிறுகதை (திறந்த பிரிவு )

01. திரு.ஆ.புட்கரன், வன்னிநகர், திருப்பழுகாமம்

02. செல்வி.இ.மதுராகினி, திருப்பழுகாமம் 02, பெரியபோரதீவு

03. திரு.ச.கணேசமூர்த்தி கோயிற்போரதீவு தெற்கு, கோயிற்போரதீவு

கவிதை (திறந்த பிரிவு )

01. திரு.க.தணிகாசலம் வன்னிநகர், திருப்பழுகாமம்

02. திரு.த.தருமராசா காளிகோயில் வீதி, பெரியபோரதீவு

# விழா போட்டி முடிவுகள் 2012

**கவிதை ஆக்கம்: (கனிஷ்ட பிரிவு)**

01. செல்வி.வி.கோவிசாலினி மட்/ மண்டூர் இ.கி.வித்தி

02. செல்வன் த.கஜேந்திரன் மட்/ பழுகாமம் கண்டுமணி ம.வி

03. செல்வி.த.தர்சிகா மட்/ பழுகாமம் கண்டுமணி ம.வி

**கட்டுரை: (கனிஷ்ட பிரிவு)**

01. செல்வி.ச.சாணவி மட்/ மண்டூர் இ.கி.வித்தி

02. செல்வி.ர.மேகலா மட்/ பழுகாமம் கண்டுமணி ம.வி

03. செல்வி.வி.கோவிசாலினி மட்/ மண்டூர் இ.கி.வித்தி

**கவிதை பாடும் போட்டி (கனிஷ்ட பிரிவு)**

01. செல்வி.ம.மனோதினி மட்/ முனைத்தீவு சக்தி ம.வி

02. செல்வன்: த.ஜேந்தன் மட்/ முனைத்தீவு சக்தி ம.வி

03. செல்வி: த.றோகினி மட்/ முனைத்தீவு சக்தி ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கையெழுத்துப் போட்டி: (கனிஷ்ட பிரிவு)**

01. செல்வன்.வ.கேணுஜன் மட்/ மண்டூர் 14 அ.த.க.பா
02. செல்வி.து.துலக்சனா மட்/ பழுகாமம் கண்டுமணி ம.வி
03. செல்வி.இ.சயனொளி மட்/ மண்டூர் இ.கி.வித்தி

**கவிதை ஆக்கம் (சிரேஷ்ட பிரிவு)**

01. செல்வன்: ஞா.பிரதாஸ் மட்/பழுகாமம் கண்டுமணி ம.வி
02. செல்வன்: த.கருணாரதி மட்/மண்டூர் 14 அ.த.க.பா
03. செல்வன்: த.திருநாவுக்கரசு மட்/பழுகாமம் கண்டுமணி ம.வி

**கட்டுரை: (சிரேஷ்ட பிரிவு)**

01. செல்வி: க.யுரேக்கா மட்/வெல்லாவெளி சக்தி ம.வி
02. செல்வி: வி.டிலக்சனா மட்/பழுகாமம் கண்டுமணி ம.வி
03. செல்வி: ப.திசாணிக்கா மட்/வெல்லாவெளி சக்தி ம.வி

**கவிதை (திறந்த பிரிவு)**

01. திரு.க.தணிகாசலம் வன்னிநகர், திருப்பழுகாமம்
02. திருமதி: கோ.லிங்கேஸ்வரன் மண்டூர் 1&2, மண்டூர்.
03. திரு.ச.கணேசமூர்த்தி விநாயகர் வீதி, கோயிற்போரதீவு

**பாடலாக்கம் (திறந்த பிரிவு )**

01. திரு.செ.சதாசிவம் சீத்தாபவனம், மண்டூர்.
02. திரு.க.தணிகாசலம் வன்னிநகர், திருப்பழுகாமம்
03. திரு.ச.கணேசமூர்த்தி விநாயகர் வீதி , கோயிற்போரதீவு

**நாட்டார் கலை கற்றல் (திறந்த பிரிவு)**

01. திரு.ச.கணேசமூர்த்தி விநாயகர் வீதி , கோயிற்போரதீவு
02. திருமதி.க.சதாசிவம் மண்டூர் தெற்கு, மண்டூர்.
03. திரு.ற.புஸ்பராசா 1ம் பிரிவு, மண்டூர்

**சிறுகதை ஆக்கம்: (திறந்த பிரிவு)**

01. செல்வி. த.குமுதினி 1ம் பிரிவு, மண்டூர்.
02. திரு.ஜெ.இந்தஜன் தளப்பத்து வீதி, முனைத்தீவு
03. திரு.நி.அனுசாந் சங்கர்புரம் மண்டூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நன்றிகள் இவர்களுக்கு!

இவ்விழா சிறப்புற நடத்துவதற்கு ஊக்கமளித்து வளிகாட்டி நெறிப்படுத்திய பேரவைத் தலைவரும், பிரதேசசெயலாளருமாகிய ந.வில்வரெத்ணம் அவர்கட்கும்....

எம்மோடிணைந்து இறுதி வரை உதவிய உதவிப் பிரதேசசெயலாளர் திரு.ஆர்.திரவியராஜ், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.ஆர்.லதாகரன், .........

வாழ்த்துச் செய்திகள் வழங்கிய மாவட்டச்செயலாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர், வேள்ட் விஷன நிறுவன பிராந்திய அபிவிருத்தித் திட்ட முகாமையாளர் ஆகியோருக்கும்........

கலாசாரவிழாப் போட்டிகளை நடத்துவதற்கு ஒத்துழைத்த பட்டிருப்பு வலயக் கல்விப்பணிப்பாளர், வெல்லாவெளி கோட்டக்கல்விப் பணிப்பாளர், அதிபர்கள், ஆசிரியர்கள், பங்கு கொண்ட மாணவர்கள், கலைக்கழகங்கள்.

மருதம் மலருக்கான ஆக்கங்களைத் தந்துதவிய பிரதேசக் கலைஞர்கள்.....

மருதம் மலரின் பதிப்பகச் செலவினை முற்றாக பொறுப்பேற்று நிறைவு செய்து தந்த வேள்ட் விஷன நிறுவன முகாமையாளர், உத்தியோகத்தர்கள், குறிப்பாக பிராந்திய அபிவிருத்தித் திட்ட முகாமையாளர் திரு.எட்வின் ரணில் அவர்களுக்கும்........

விழாவினை சிறப்புற நடத்தி முடிக்க ஒத்துழைத்த பிரதேசசெயலக கிராம சேவை உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர், சமுர்த்தி வலய முகாமையாளர்கள், சமுர்த்தி வலய வங்கி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி மகாசங்க உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கலாசாரப் பேரவை உறுப்பினர்கள்.....

விழாவில் கலந்து சிறப்பித்த அதிதிகள்.....
மலரை விரைவாக, அழகாக அச்சிட்டுத் தந்த 'ஷெரோணி'அச்சகத்தினர்....

விடய எழுதுனர் செல்வி: மு.தர்சிகா முகாமைத்துவ உதவியாளர், பட்டதாரிப் பயிலுனர்கள் திருமதி. ம.பக்தகௌரி, திரு.K.சூரியகுமார், திருமதி.ஜெ.ஜெயப்பிரியா என தொடர்கின்ற நன்றியறிதலில் மேலும் விடுபட்ட எல்லோருக்கும் எனது இதய பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளும் நான்.............

ஆ. பிரபாகரன்,
கலாசார உத்தியோகத்தர்,
பிரதேசசெயலகம்
வெல்லாவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

World Vision

இலங்கையில் வேள்ட் விஷன் 1977ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. தற்போதைய நிலையில் 1100 கிராமங்களைச் சேர்ந்த 65000 குழந்தைகளுக்கு உதவி வரும் வேள்ட் விஷன் வறுமையுற்ற மக்கள் தமது சமூகங்களைச் சீர்படுத்தி தங்களது பிரதேச வளங்களை ஒருங்கிணைத்து தங்களது வாழ்வை மேம்படுத்த உதவக் கூடியதாக மக்களை சுயதத்துவப்படுத்தி அவர்களது நல்வாழ்விற்காக அயராது உழைத்து வருகின்றது. இலங்கை வேள்ட் விஷன் 1260 உத்தியோகத்தர்களையும், 1300ற்கும் மேற்பட்ட ஊக்குவிப்பாளர்களையும் தனது பணிக்காக அமர்த்தியுள்ளது. கொழும்பு நகரத்தில் தனது தேசிய பணிமனையை கொண்டுள்ள வேள்ட் விஷன் நாடு முற்றாக முக்கிய பிரதேசங்களில் 36 பிராந்திய அபிவிருத்தித் திட்டங்களை(ADP) செயற்படுத்தி வருகின்றது.

இலாப நோக்கமில்லாது மனிதாபிமான உணர்வுடன் செயற்படும் ஓர் நிவாரண அபிவிருத்தி அமைப்பான சர்வதேச வேள்ட் விஷன் 1950ம் ஆண்டு "வொவியஸ்" எனும் ஸ்தாபகரால் ஸ்தாபிக்கப்பட்டது. உலகிலுள்ள வறிய ஒதுக்கப்பட்ட நிலையில் வாழும் சிறார்களின் சாதி, சமய, இனப்பாகுபாடு கருதாது அவர்களது தேவைகளை இத்தாபனம் பூர்த்தி செய்து வருகின்றது. 100ற்கும் மேற்பட்ட நாடுகளில் தற்போது வேள்ட் விஷன் சேவையாற்றி வருகின்றது. இந்நாடுகளில் வசிக்கும் 2.1 மில்லியன் அனுசரணைப் பிள்ளைகளும், பல்வேறு தரப்பட்ட கஷ்ட நிலையில் உள்ள ஆயிரக்கணக்கான வேறு சிறார்கள், பெண்கள் மத்தியிலும் 22000 அர்ப்பணிப்புள்ள ஆண், பெண் ஊழியர்கள் இன்று சேவை செய்து உழைத்து வருகின்றனர்.

வறுமைக் குறைபாட்டு அபிவிருத்திக்கு ஒரு பிள்ளை இலகுவாக அகப்படக் கூடும் எனும் உண்மையை வேள்ட் விஷன் ஏற்றுக் கொள்கின்றது. அதே வேளை அவர்களது குடும்பத்தையும் சமூகத்தையும் வேள்ட் விஷன் ஏற்றுக் கொள்கிறது. ஆகவே பிள்ளைகளின் அவசிய உடனடித் தேவைகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் பெற்றோருக்கும் சமூகத்திற்கும் வேள்ட் விஷன் உதவிடும் அதே வேளை குடும்பமும் சமூகமும் வெளி உதவியின்றி கடமைகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்புணர்வினை அவர்கள் வளர்த்தெடுக்கக் கூடிய சுயதத்துவ, தலைமைத்துவ பண்புகளை அபிவிருத்தி செய்யும் பணியில் தனது கவனத்தை செலுத்தி வருகின்றது. இந்த அடிப்படையில் கல்வி மேம்பாடு, தூயநீர், கழிவறை வசதிகள், மேம்பட்ட வீட்டு வசதி, விவசாயம், மிருக வளர்ப்பு, தொழிற்பயிற்சி, சுயவருமான அபிவிருத்தி, தலைமைத்துவப் பயிற்சி செயற்பாடுகள் ஆகிய துறைகளுக்கு சமூக அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாக வேள்ட் விஷன் நிதியுதவி உபயோகிக்கப்பட்டு வருகின்றது.

"ஒவ்வொரு பிள்ளையும் முழுமைபெற்று வாழ்வதனை அனுபவிக்க வேண்டுமென்ற எமது கவனம் அதனை நிறைவேற்றும் ஒவ்வொரு நல்ல இதயத்திற்குமான எங்களது மன்றாடலும்" என்ற எமது தரிசனத்துடன் இவ் வேள்ட் விஷன் நிறுவனமானது செயற்படுகின்றது.

Sheroni Printers, Koolavady, Batticaloa. Tel - 065 2228293

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org